
வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu வார மலர் ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 04 05.02.2023 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 58 பக்கங்கள் : 20



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria — றியா பணப்பரிமாற்றம்
Western Union — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை


07 பொருளாதார புயலில் இந்தியா சிக்காதது எப்படி?


08 தென்னிலங்கையில் மீண்டும் பெரும்பான்மை இனவாத அணிதிரட்டல் முயற்சிகள்!


10 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்த ஜனாதிபதிக்கு அதிகாரமில்லையா?


11 கண்டுகொள்ளபடாத ரணிலின் மற்றுமொரு வாக்குறுதி!

# யாழிலிருந்து பேரணி நேற்று ஆரம்பமானது!



யாழ்ப்பாணம், பெப்ரவரி 05

நாட்டின் சுதந்திர தினத்தை கரிநாளாகப் பிரகடனப்படுத்திய மட்டக்களப்பு நோக்கிய பேரணி நேற்று யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து பல நூற்றுக்கணக்கானவர்களின் பங்கேற்புடன் ஆரம்பமானது. 19

## தமிழிலும் ஒலித்தது தேசிய கீதம்!

கொழும்பு, பெப். 05

நாட்டின் 75ஆவது சுதந்திர தினமான நேற்று தேசிய கொண்டாட்ட விழாவில் தமிழிலும் தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

75ஆவது சுதந்திர தினத்தின் பிரதான நிகழ்வு நேற்று காலி முகத்திடலில் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வின் நிறைவில் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு முஸ்லிம் மகளிர் வித்தியாலயம், கொழும்பு றோயல் கல்லூரி, வத்தளை புனித அன்ரனி 19



நாட்டின் 75ஆவது சுதந்திர தினமான நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று தேசியக் கொடியை ஏற்றிவைத்தபோது...!

## கிளிநொச்சியிலிருந்து இன்று பேரணி ஆரம்பம்!

கிளிநொச்சி, பெப். 05

பல்கலைக்கழக மாணவர்களின் அழைப்பின்பேரில் நடைபெறும் பேரணி இன்று பரந்தன் சந்தியிலிருந்து ஆரம்பமாகவுள்ளது.

சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நடைபெறும் இந்தப் பேரணி நேற்று யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாகி இரணைமடு சந்தியில் நிறைவடைந்தது.

இன்றைய தினம் பரந்தன் சந்தியில் ஆரம்பிக்கும் பேரணியில் வவுனியா, மன்னார் 19



## வாணி ஜெயராம் காலமானார்!

சென்னை, பெப். 05

பிரபல தென்னிந்திய திரை இசைப் பாடகியும் - ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்துக்கு இசை மூலம் பெரும் பங்களிப்பு வழங்கியவருமான வாணி ஜெயராம் (வயது -78) நேற்று காலமானார்.

சென்னை - நுங்கம் பாக்கத்தில் வசித்து வந்த அவர் வீட்டில் வழுக்கி விழுந்ததால் உயிரிழந்தார் என்று 19

## ஒற்றையாட்சி அரசில் அதிகபட்ச அதிகார பகிர்வை வழங்குவோம்!

### சுதந்திர தின உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, பெப். 05

ஒற்றையாட்சி அரசில், அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

- இவ்வாறு நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்றிரவு நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ஆற்றிய விசேட 19



### சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு:

## போராட்டங்களால் அதிர்ந்தன வடக்கு - கிழக்கு மாகாணங்கள்!

யாழ்ப்பாணம், பெப். 05

நாட்டின் 75ஆவது சுதந்திர தினமான நேற்று தமிழர்களின் கரிநாள் என்று பிரகடனப்படுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

இதேநேரம், யாழ்ப்பாணம், கிழக்கு பல்கலைக்கழகங்களின் மாணவர்களின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு பேரணி ஒன்றும் ஆரம்பமானது. 19

## போராட்டத்துக்கு ஆதரவாக முடங்கியது யாழ்ப்பாணம்!



யாழ்ப்பாணம், பெப். 05

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை தமிழர்களின் கரிநாளாக அறிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்தும் மாபெரும் பேரணிக்கு ஆதரவாக யாழ்ப்பாணத்தில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. 19

உள்ளூராட்சி சபை தேர்தல் - 2023
தமிழ் தேசிய கூட்டமைப்பு
தமிழின ஆன்மாவின் ஒருமித்த சின்னம்!
ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி
கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரம்

# இப்படியும் நடக்கிறது...!

அரசியல் கட்சிகள் தேர்தல் காலங்களில் கூட்டங்கள் நடத்துவது எதற்காக என்பது தெரிந்தது தான். ஒரு தடவை யாழ்ப்பாணத்தில் தமது கட்சியின் பிரசாரக் கூட்டத்துக்கு வந்திருந்த தேசியக் கட்சி ஒன்றின் தலைவர் தனது வருகையின்போது இங்குள்ள ஊடகவியலாளர்களுக்கு மதிய போசன விருந்தளித்தார்.

அப்போது அவர், சொன்னது இப்போதுபோல நெஞ்சில் அறைந்தால்போல இருந்து கொண்டிருக்கின்றது. “நாங்கள் இங்க கூட்டம் வைக்கிறது, இங்க இருக்கிற சனங்கள் எங்களுக்கு வாக்களிக்கும் எண்ட நம்பிக்கையிலை இல்லை. இங்க பஸ்களிலை சனங்களைக் கொண்டுவந்து கூட்டத்தை நடத்தி அந்தக் கூட்ட வீடியோ, செய்திகளிலை வரேக்க தெற்கில பார்க்கிறவைக்கு ஏதோ எங்களுக்கு இங்கையும் ‘சப்போர்ட்’ இருக்கிற மாதிரி காட்டும். அது எங்களுக்கு அங்க நல்லது..’

அத்தோடு அவர் நிறுத்தியிருந்தால் பரவாயில்லை, தொடர்ந்து சொன்னார், ‘இங்க சனங்களுக்கு சாப்பாட்டு பார்சலும் குடுத்து பஸ்களையும் ஒழுங்குபடுத்தினால் சனம் வந்திடும்...’

அவரின் அலட்சியமான அந்தப் பதிலைக் கேட்டுக்கொண்டிருந்த போது அவர் மீது கோபம் வருவதைவிட, நமது பாவப்பட்ட மக்களின் நிலைமைதான் கவலையைத் தந்தது.

இங்குள்ள தங்கள் முகவர்கள் மூலம் பஸ்களுக்கு காசு கொடுத்து அவர்களை கவனிக்கவும் செலவு செய்து, சில இடங்களில் அது இதை தரவிருக்கிறோம் என்றும் சொல்லி மக்களை அழைத்து வருவது அவர்களுக்கு பெரிய வேலையாக இருப்பதில்லை.

இந்த நிலைமை தேர்தல் பிரசார நடவடிக்கைகளின்போது மாத்திரமல்ல, மே தின ஊர்வலம், அல்லது ஏதாவது காரணங்களுக்காக நடத்தும் கண்டன ஆர்ப்பாட்டங்களிலும் இப்படித்தான்.

மே தின ஊர்வலத்துக்கு ஆள் சேர்ப்பதற்கு ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் அதன் அமைப்பாளர்கள் எத்தனை பஸ்களில் ஆட்களைக் கொண்டு வந்தார்கள் என்பதிலிருந்து அந்த உள்ளூர் தலைவரின் செல்வாக்கு கட்சியில் உயரும். இந்தப் பழக்கம் இப்போது நமது தமிழ் கட்சிகளிடமும் தலைகாட்டத் தொடங்கியிருக்கின்றது.

வவுனியாவில் ஒருதடவை பதின்மூன்றுக்கு எதிராக போராட் டம் நடத்தியவர்கள் மற்றைய இடங்களிலிருந்து பஸ்களில் ஆட்களை கொண்டுவந்து இறக்கியதாக அப்போது கூறப்பட்டது. வரும் வழிகளில் பஸ்ஸில் இருந்தவர்களுக்கு இரண்டு வேளையும் வயிறார உணவும் ஆங்காங்கே வைத்து வழங்கப்பட்டதாம்.

நேற்று மட்டக்களப்பில் நடைபெற்ற தமிழ் அரசின் சுதந்திர தின கண்டன ஆர்ப்பாட்டத்துக்கும் இவ்வாறு பல இடங்களிலும் இருந்து ஆட்கள் கொண்டுவரப்பட்டனர் என்று நமது செய்தியாளர்கள் தெரிவித்தனர். தேர்தல் காலம் என்பதால் ஒவ்வொரு வேட்பாளர்களும் தத்தம் பகுதிகளில் இருந்து ஆட்களை கொண்டுவருவதற்கான ஒழுங்குகளைச் செய்திருந்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு பஸ்ஸிலாவது தொண்டர்களை அங்கு கொண்டுபோவதற்கு கட்சித் தலைமை சிலருடன் யோசனை கலந்தபோதும், யாரும் அதில் அக்கறை காட்டாதததால், வழக்கம் போல தலைவர் தனது இரண்டு தொண்டர்களுடன் மாத்திரம் மட்டக்களப்பு சென்றிருந்தார்.

கட்சித் தலைவர் மாவைக்கு இது போன்ற நேரங்களில் உதவுபவர் வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் ஐயாதான். ஆனால், அவரோ அண்மைய - சில நாட்களாக கட்சி நடவடிக்கைகளில் இருந்து ஒதுங்கியிருக்கிறார் போல் தெரிகின்றது.

அவர் பழைய ஆளாக இருந்திருந்தால் நிச்சயம் ஒரு பஸ்ஸாவது யாழ்ப்பாணத்திலிருந்து சென்றிருக்கும். நேற்று இலங்கையின் எழுபத்தி ஐந்தாவது சுதந்திர தினம் என்பதாலோ தெரியவில்லை வழக்கத்துக்கு மாறாக இந்த சுதந்திர தினத்துக்கு எதிராக ஆங்காங்கே பல கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

இலங்கையின் சுதந்திர தினத்தை எப்போதும் துக்க தினமாகவே அனுஷ்டித்துவரும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், மாபெரும் பேரணி ஒன்றை யாழ்ப்பாணத்தில் நேற்று தொடக்கியிருக்கின்றனர். வடக்கு - கிழக்கு நகரங்கள் ஊடாக மட்டக்களப்பை சென்றடையவிருக்கின்றது இந்தப் பேரணி.

முல்லைத்தீவில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் தனியாக ஒரு கண்டன ஊர்வலத்தை நேற்று நடத்தியிருந்தனர். யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்பாக வும் இவர்கள் ஒரு போராட்டத்தை நடத்தியிருந்தனர்.

தேர்தல் காலம் என்பதால் எல்லோருக்கும் இதுபோன்ற போராட்டங்களை நடத்தும் உத்வேகம் வந்திருக்கின்றது.

நல்லவேளை தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் தனியாக ஒரு ஊர்வலத்தை ஏற்பாடு செய்யவில்லை. அவர்கள் பல்கலைக்கழக மாணவர் போராட்டத்தில் கலந்து கொண்டதைக் காணமுடிந்தது.!

**- ஊர்க்குருவி**

## யாழில் நேற்று பூரண ஹர்த்தால்!






சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ்ப்பாணத்தில் நேற்று பூரண கடையடைப்பு போராட்டம் நடைபெற்றது.

## மாணவர் பேரணியின் முதல்நாள் பதிவுகள்







சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று மட்டக்களப்பு நோக்கி ஆரம்பமான பேரணியின் பதிவுகள்...!



# ஒற்றையாட்சிக்குள் அதிகபட்ச அதிகார பகிர்வை வழங்குவோம்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, பெப். 05

ஒற்றையாட்சி அரசில், அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்றிரவு நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி ஆற்றிய விசேட உரையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் ஆற்றிய உரையின் முழுவிவரம் வருமாறு,

75 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கை சுதந்திரம் பெற்றபோது, புகழ்பெற்ற "லண்டன் ரைம்ஸ்" நாளிதழின் ஆசிரியர் தலையங்கம் இவ்வாறு கூறியது:

"இலங்கை விரைவில் கீழைத்தேயத்தின் சுவிற்சர்லாந்தாக மாறுவதைக் காண்பதே எமது எதிர்பார்ப்பாகும்." வேறு எந்த கீழைத்தேய நாட்டைப் பற்றியும் அவர்கள் அத்தகைய எதிர்பார்ப்பை கொண்டிருக்கவில்லை. ஆனால், தற்போது எமக்கு என்ன நேர்ந்துள்ளது?

இன்று நாம் வரலாற்றில் ஒருபோதும் கண்டிராத பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளோம். அண்மைக்கால வரலாற்றில் இவ்வாறானதொரு பாரதூரமான நிலையை நாம் எதிர்கொண்டதில்லை. நமக்கு ஏன் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டது? இந்த நிலைக்கு யார் பொறுப்பேற்க வேண்டும்?

நாம் உண்மையைப் பேசுவோம். இந்த நிலைக்கு நாம் அனைவரும் குறைவாகவோ அதிகமாகவோ பொறுப்புக் கூற வேண்டும். நாம் யாரும் விரல் நீட்டி ஒருவரை ஒருவர் குற்றம் சொல்ல முடியாது. நாம் ஆரம்பத்திலிருந்தே தவறு செய்தோம். அந்த தவறை சரி செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டன. பாடுபட்டோம். ஆனால், நூறு சதவீதம் சரி செய்ய முடியவில்லை.

சுதந்திரம் பெறுவதற்கு டி. எஸ். பின்பற்றிய வழிமுறை, இலங்கையர் அனைவரையும் ஒன்றிணைப்பதாகும். சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் என யாராக இருந்தாலும் இலங்கையர்களாக நாம் முன்னோக்கிச் செயல்பட வேண்டும் என அவர் அன்று தெரிவித்தார். ஆனால், சுதந்திரத்துக்குப் பிறகு நாங்கள் பிளவுபட்டோம். இனம், மதம், பிரதேச ரீதியாக பிரிந்தோம். ஒருவரையொருவர் குறித்து சந்தேகம், வெறுப்பு ஏற்படும் வரை பிரிந்தோம். பல்வேறு குழுக்கள், அதிகாரத்தைப் பெறவதற்கு இந்தப் பிரிவைப் பயன்படுத்தின. அதிகாரத்திற்காக மேலும் மேலும் பிளவுகளை ஏற்படுத்தினர். நாம் அவர்களை நிராகரிப்பதற்கு பதிலாக அவர்களுக்கு அதிகாரம் அளித்தோம்.

அரசியலில் உண்மையைச் சொல்லாமல் பொய் சொன்னார்கள். உண்மையைச் சொன்ன அரசியல்வாதிகளை மக்கள் நிராகரித்தனர். நாட்டின் உண்மை நிலையை சுட்டிக்காட்டி அதற்கான பரிகாரம் தேடுபவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. பொய்களால் மகிழ்விப்பவர்களுக்கு அதிக அங்கீகாரம் கிடைத்தது. நாம் வாக்குறுதி அரசியலில் சிக்கிக்கொண்டோம். எங்களுக்குச் சொந்தமில்லாத கடன் வாங்கிய வளங்களை நம்பியிருந்தோம். மேலும் மேலும் கடன் வாங்கினோம்.

"அரசாங்கமென்பது வளங்களின் ஊற்று" என்ற மனப்பாங்கை நாங்கள் ஏற்படுத்திக் கொண்டோம். அந்த ஊற்றுக்களில் இருந்து கிடைக்கும் பல்வேறு வளங்களை மக்களுக்குப் பகிர்ந்தளிப்பதே ஆட்சியாளர்களின் கடமை என்று பலரும் நினைத்தனர். அதன்படி தொழில்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. வளங்கள் விநியோகிக்கப்பட்டன. உபகரணங்கள் வழங்கப்பட்டன. பணமும் விநியோகிக்கப்பட்டது.

நம்மில் பெரும்பாலானோர் வாக்களித்தது நாட்டுக்காக அல்ல. எங்களுக்கு தொழில் பெற பிள்ளையைப் பாடசாலையில் சேர்ப்பதற்கு. விலைமனுக் கோரலுக்கு அனுமதி பெற நாம் வாக்களித்தோம். தனிப்பட்ட ஆதாயத்திற்காகவே நாம் தேர்தல் வேட்பாளர்களுக்காக பணியாற்றினோம். நம்மில் பெரும்பாலானோர் தேர்தலில் போட்டியிட்டதுகூட நாட்டுக்காக அல்ல. தங்களுக்காக. அதிகாரத்தை பெறவும் சலுகைகளை அனுபவிக்கவும் மேலும் சம்பாதித்துக்கொள்ளவும் தேர்தலில் போட்டியிட்டனர்.

நாம் வாக்குறுதிகளில் சிக்கிக்கொண்டோம் - கோஷங் களில் சிக்கினோம். இவை அனைத்தினதும் விளைவாக நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் வீழ்ச்சியடையத் தொடங்கியது. அரசியல் வாக்குறுதிகளை நிறைவேற்றவும் கோஷங்களில் தெரிவிக்கப்பட்டவற்றை உறுதிப்படுத்தவும் நாங்கள் மேலும் மேலும் கடன் வாங்கினோம். நாம் அதிகம் அதிகமாக முதலீட்டுக்காக அல்லாமல், நுகர்வுக்காகத்தான் கடன் வாங்கினோம். "கடன் முதலீட்டுக்காக அன்றி நுகர்வுக்காக அல்ல" என்று புத்தரின் போதனைகள் கூறுகின்றன. பௌத்தத்தைப் பற்றிப் பேசிக்கொண்டு புத்தரை வணங்கி பௌத்த தர்மத்தை தாண்டிச் சென்றுவிட்டோம்.

சிங்கப்பூரை மீளக் கட்டியெழுப்புவது பற்றி அறிந்துகொள்வதற்காக இலங்கை வந்த லீ குவான் யூ பல வருடங்களுக்குப் பிறகு இவ்வாறு கூறினார். "தேவையில்லாமல் அரசியலுக்கு முன்னுரிமை அளித்தமையே உங்கள் நாட்டில் இந்த நிலை ஏற்பட காரணம்." உங்கள் நாட்டை முன்னுதாரணமாக கொண்டிருந்தால் சிங்கப்பூர் அழிந்திருக்கும்". உண்மையில், நாம் இப்போது அழிவு நிலையை நோக்கி சென்றுள்ளோம். இந்த காயத்தை தொடர்ந்து வைத்திருக்க விரும்புபவர்களும் உள்ளனர். ஆனால், நான் அதனை விரும்பவில்லை. ஒரு சத்திரசிகிச்சை செய்து இந்த காயத்தை சுகப்படுத்திக் கொள்வோம். இது கடினமானது. வேதனையானது. கஷ்டமானது. ஆனால் அந்த சோகத்தையும் வேதனையையும் சிறிது காலம் அனுபவித்தால், காயத்தை முழுமையாக குணப்படுத்த முடியும்.

சில அரசியல் கட்சிகள் சுட்டிக் காட்டும் குறுக்குவழிகளால் இந்த நெருக்கடியிலிருந்து எமக்கு மீள முடியாது. இந்த நெருக்கடியை சமாளித்து உண்மையான பொருளாதார மற்றும் சமூக சுதந்திரத்தை அடைய வேண்டுமானால், நாம் செல்ல வேண்டியது ஒரே ஒரு வழிதான். இந்தக் குழியிலிருந்து ஏறுவதற்கு எமக்கு ஒரே ஓர் ஏணிதான் உள்ளது. அரசியல் நலன்களுக்காக இந்த ஏணியை ஒதுக்கித் தள்ளினால், நமக்கு ஒரு நாடு இருக்காது, நமக்கு நாளை இருக்காது என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

நாம் இன்று இருக்கும் பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தையும் ஆபத்தையும் இதற்கு முன்னரும் நான் பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருக்கிறேன். இந்த ஆண்டின் முதல் ஆறு மாதங்கள் மிகவும் கடினமாக இருக்கும் என்று நான் முன்கூட்டியே கூறியுள்ளேன். இந்த இக்கட்டான சூழலை நாம் விருப்பமில்லாத நிலையிலும் கூட எதிர்கொள்ள வேண்டியுள்ளது. நாட்டின் நலனுக்காக நாம் அந்த இக்கட்டான நிலையை தாங்கிக் கொள்ள வேண்டியுள்ளது. அரசியல் இனிப்புப் பேச்சுகளால் இந்நிலைக்குத் தீர்வு கிடைக்காது.

இலவசக் கல்வியால் இந்நாட்டில் பெருமளவான மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டு நடுத்தர வர்க்கத்தினராக மாறினாலும் இன்று அவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முடியாத நாடாக மாறியுள்ளது. தோளோடு தோள் நின்று உழைக்க வேண்டிய இளைஞர்கள் இன்று கடவுச் சீட்டுகளைப் பெற வரிசையில் நின்றுகொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். அதை நாம் மாற்ற வேண்டும்.

அப்படியானால், நாம் இந்தப் பொருளாதாரத்தை நவீனமயமாக்கி, உலகிற்கு திறந்துவிட வேண்டும். மக்களை ஏமாற்றி அவர்களை நிரந்தர ஏழைகளாகவும், தங்கிவாழ்பவர்களாகவும் மாற்றும் ஊழல் அரசியல் வாதத்தையும் தோற்கடிக்க வேண்டும். இந்நாட்டு இளைஞர்கள் நீண்டகாலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் "சிஸ்டம் சேன்ஞ்" என்ற முறைமை மாற்றம் இதுதான். அதற்காக எனது அரசாங்கம் புதிய சீர்திருத்தப் பாதையில் பிரவேசித்துள்ளது. அதற்காக எடுக்கப்படும் முடிவுகள் சிலநேரம் வேதனை தருவதாக இருந்தாலும், இந்த நெருக்கடியில் இருந்து வெளிவர அந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

இந்த நெருக்கடியை வெற்றிகொள்ள வேண்டுமாயின், நாம் குறுகிய அரசியலில் இருந்து விலகிச் செல்ல வேண்டும். நாம் ஒரு தாயின் பிள்ளைகளாக ஒற்றுமையாக இந்த சவாலை எதிர்கொள்ள வேண்டும். சவாலை வெற்றிகொள்ளும் பாதையை வலுப்படுத்த நம்மால் முடிந்த அளவு பங்களிக்க வேண்டும். அனைத்து வேற்றுமைகளையும் புறந்தள்ளிவிட்டு இலங்கையர்களாக நாம் அனைவரும் முன்னேறிச் செல்ல வேண்டும்.

இதன் மூலம் வலுவான புதிய பொருளாதாரம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும். அதற்கான அடிப்படைப் பணிகளும், அடித்தளமும் தற்போது தயார்படுத்தப்பட்டுள்ளன. சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதற்குத் தேவையான கடினமான பணிகளை நாங்கள் வெற்றிகரமாகச் செய்து வருகிறோம். விரைவில் அவர்களின் இணக்கப்பாட்டைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறோம்.

பொருளாதாரத்தை வலுப்படுத்துவதால் மட்டும் எம்மால் திருப்தி அடைய முடியாது. ஒட்டுமொத்தக் கட்டமைப்பிலும் நாம் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த அரசியல் முறைமை, பாராளுமன்றம், நிறைவேற்று அதிகாரம், அரச பொறிமுறை ஆகிய அனைத்து துறைகளும் காலத்துக்கு ஏற்றவாறு மாற்றப்பட வேண்டும்.

இந்த மாற்றம் நாட்டுக்கும் நமக்கும் நல்லதாக அமைய வேண்டும். புதிய முறைமையில் இளைஞர்கள் மற்றும் பெண்களின் கருத்துக்களுக்கும் பிரதிநிதித்துவங்களுக்கும் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். இந்த முறைமை மாற்றத்துக்கு அவசியமான பல்வேறு சட்ட ஏற்பாடுகளை நாம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம்.

அது போன்றே வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் விசேடமான பிரச்னைகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்கான அமைச்சரவை உபகுழுவை ஏற்கனவே நியமித்துள்ளோம். அங்கு எடுக்கப்படும் தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதி, அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்கப்படும். அவர்களது கருத்துகளின்படி, அந்தப் பணிகள் முன்னெடுத்துச் செல்லப்படும். காணிகளை மீளக் கையளித்தல், கைதிகளை விடுதலை செய்தல் உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு நாம் முன்னுரிமை அளித்துள்ளோம்.

அது போன்றே ஒற்றையாட்சி அரசில், அதிகபட்ச அதிகாரப் பகிர்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். எனினும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இந்த நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். நான் முயற்சிப்பது மேலோட்டமாக தெரிகின்ற நோய்க்கு வலி நிவாரணிகளை வழங்க அல்ல. நோயின் மூலக்காரணியை நிவர்த்தி செய்யவே முயற்சிக்கிறோம். அது சிரமமானது. மிகவும் கடினமானது. எனினும், நாம் செல்ல வேண்டிய ஒரே வழி அதுதான்.

நான் ஜனாதிபதியாக பதவியேற்றதிலிருந்து எனக்கு எடுக்க நேரிட்ட பல தீர்மானங்கள் பிரசித்தமான தீர்மானங்கள் அல்ல என்பதை நான் அறிவேன். ஆனால், அந்தத் தீர்மானங்களால், இன்று இந்த நாட்டின் எந்தக் குடிமகனும் எரிபொருள் வரிசைகளில் நீரின்றி இறக்கவில்லை. சமையல் எரிவாயு இல்லாமல் பட்டினியில் இல்லை. உரம் இல்லாமல் சாபம் இடவில்லை. எனவே, அராஜக அரசியல் சக்திகள் எத்தகைய தடைகளை ஏற்படுத்தினாலும், இந்த நாட்டை நேசிக்கும் பெரும்பான்மையான மக்களுடன் இணைந்து இந்தப் புதிய சீர்திருத்தத் திட்டத்தை முன்னெடுப்பேன்.

சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் மனதில் கொண்டு ஒற்றுமையுடன் திட்டமிட்டு முன்னேறினால் 2048 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த நாடாக மாறலாம். உலகில் வேறு எந்த நாட்டிடமும் கையேந்தாத அபிவிருத்தி அடைந்த நாடாக மாறலாம். உண்மையான சுதந்திரத்தையும் அடைய முடியும்.

நமது பிள்ளைகள் உலகுடன் போட்டி போடும் வகையில் புதிய நாட்டை உருவாக்குவது நம் அனைவரதும் பொறுப்பாகும். எனவே, இந்த இக்கட்டான காலகட்டத்தை வெற்றிகொள்ள அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணையுமாறு நான் அனைவரிடமும் கேட்டுக்கொள்கிறேன். நாம் ஒன்றுபடுவோம்! கைகோப்போம்! அவ்வாறு கைகோத்து எதிர்வரும் 25 ஆண்டுகளுக்காக நாம் தயாரித்துள்ள திட்டத்திற்கமைய ஒன்றுபட்ட பயணத்தை மேற்கொள்வோம்.

அனைத்து தரப்பினரின் கருத்துக்களுக்கும் ஏற்ப அந்தத் திட்டத்தை மேம்படுத்துவோம். மேலும் வலுப்படுத்துவோம். அவற்றை மேலும் முறைமைப்படுத்தி நெறிப்படுத்துவோம். இந்த முயற்சியில் இணைந்து கொள்ள வேண்டியது, இலங்கை வாழ் மக்களான நாம் மட்டும் அல்ல உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் இலங்கையர்களும் இந்தப் பயணத்திற்குத் தோள் கொடுக்க வேண்டும். ஒன்றிணைய வேண்டும். இந்த இலக்குகளை அடைய அனைவரும் முடிந்தவரை பங்களிக்க வேண்டும்.

எனவே, நாம் அனைவரும் ஒன்றாக முயற்சி எடுப்போம். ஒற்றிணைந்து அர்ப்பணிப்போம். ஒரு தாயின் பிள்ளைகள் போல் ஒன்றுபடுவோம். நமது நாடு சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் 2048ஆம் ஆண்டின்போது எமது நாட்டை உலகின் தலைசிறந்த நாடாக மாற்றுவோம் - என்றார்.

# சுதந்திர தினம் கரிநாள்: மன்னாரில் போராட்டம்!





மன்னார், பெப். 05

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மன்னார் மாவட்டத்தில் நேற்று கரிநாள் போராட்டம் நடைபெற்றது.

மன்னார் மாவட்ட செயலகம் முன்பாக நடந்த இந்தப் போராட்டத்தில் அருட்தந்தையர்கள், இளைஞர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், தமிழ் உணர்வாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கறுப்பு கொடிகளை ஏந்தியவாறு கைகளை சங்கிலியால் கட்டி, வாயையும் கறுப்பு துணிகளால் மூடிய படி பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளுடன் சுதந்திர தினத்திற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டனர்.

75 ஆண்டுகளாகியும் எமது அடிப்படை உரிமை நசுக்கப்படுகிறது. சிங்களத்தின் சுதந்திர நாள் தமிழினத்தின் கரிநாள், பௌத்த தேசிய வாதமும் சிங்கள இனவாதமுமே எம்மை அடிமைப்படுத்துகின்றன என்று எழுதப்பட்ட பல்வேறு பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் கைகளில் பதாகைகளையும் கறுப்பு கொடிகளையும் ஏந்திய வாறு போராட்டகாரர்கள் மன்னார் பேருந்து நிலைய வளாகம் முழுவதும் ஊர்வலமாக சென்றனர். (ஐ)

# யாழ். சிறையிலிருந்து 8 கைதிகள் விடுதலை!

யாழ்ப்பாணம், பெப். 05

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்று யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து 8 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

75ஆவது சுதந்திர தினமான நேற்றைய தினம் பல்வேறு குற்றங்களின் கீழ் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 622 கைதிகளுக்கு அவர்களின் குற்றங்களின் தன்மை - சிறையில் அவர்களின் நடத்தை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பொது மன்னிப்பு அளிக்கப்பட்டது.

இவ்வாறு மன்னிப்பு அளிக்கப்பட்டவர்களில் 7 ஆண் கைதிகளும் ஒரு பெண் கைதியுமாக 8 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். இவர்கள் தண்டனை கைதிகள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-03)



# சுதந்திர தின அணிவகுப்பில் 25 மாணவர் மயங்கி வீழ்ந்தனர்!

## அதிகாரிகள் பாராமுகம்

வவுனியா, பெப். 05

வவுனியாவில் சுதந்திர தின நிகழ்வில் அணிவகுப்புக்காக வந்த மாணவர்கள் சிலர் நீண்ட நேரம் வெயிலில் நின்றதால் மயங்கி வீழ்ந்தனர்.

அவர்கள் மயங்கி வீழ்ந்த நிலையில் அது தொடர்பில் அக்கறையின்றி அதிகாரிகள் செயல்பட்டமை தொடர்பில் பல தரப்பினரும் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினமான நேற்று காலை 8.30 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் கலந்துகொண்டிருந்தார்.

நிகழ்வில், பொலிஸார் மற்றும் சிவில் படைகளின் அணிவகுப்போடு வவுனியா பாடசாலை மாணவர்களின் அணிவகுப்பும் இடம்பெற்றிருந்தது. வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்ட நிலையில் அணிவகுப்பினர் நீண்டநேரம் மைதானத்தில் நின்றிருந்தனர்.

இதனால், 25 வரையான மாணவர்கள் மயங்கி விழுந்தனர். அவர்களுக்கு இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினர் முதலுதவி அளித்தனர்.

விருந்தினரான அமைச்சரும் அதிகாரிகளும் கொட்டகைகளில் தங்கியிருந்தனர். இந்த விடயம் மைதானத்தில் இருந்தவர்கள் இவர்களுக்கு தகவல் அளித்தபோதும் அவர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இது பல தரப்பினரிடையேயும் விசனத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியது.

# 75ஆவது சுதந்திர தினம் யாழிலும் கொண்டாட்டம்!







யாழ்ப்பாணம், பெப். 05

75ஆவது சுதந்திர தின நிகழ்வு யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கிலும் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு பாடசாலை மாணவர்கள் மற்றும் படையினரின் அணிவகுப்பு மரியாதை நடைபெற்றன. அத்துடன், மும்மத தலைவர்களின் ஆசியுரையும் நடைபெற்றது.

மாவட்ட மட்ட சுதந்திர தினநிகழ்வில் யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் பொலிஸ் மற்றும் முப்படைகளின் உயரதிகாரிகள் கலந்துகொண்டனர். (ஐ)

# நான்கு இலங்கையர்கள் தமிழ்நாட்டில் தஞ்சம்!

இராமேஸ்வரம், பெப். 05

பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கையை சேர்ந்த நால்வர் நேற்று முன்தினம் மாலை தமிழகத்தில் தஞ்சமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் - புங்குடுதீவை சேர்ந்த ஜெயபரமேஸ்வரன் (43), அவரின் மனைவி மாலினிதேவி (43) மற்றும் அவர்களின் 12, 7 வயது பிள்ளைகளுடன் நால்வரும் நேற்று முன்தினம் தனுஷ்கோடியை அடைந்துள்ளனர்.

இவர்கள் ஒத்தப்பட்டி தெற்கு என்ற பகுதியில் மீனவர் குடும்பம் ஒன்றின் இல்லத்தில் தங்கியிருந்த வேளை, தகவலறிந்து தனுஷ்கோடி ஒத்தப்பட்டிக்கு சென்ற தனுஷ்கோடி பொலிஸார் மற்றும் கியூ பிரிவு பொலிஸார் அவர்களிடம் விசாரணை நடத்தினர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வால் குழந்தைகளை வைத்துக் கொண்டு அங்கு வாழ வழி இல்லை என்ற நிலையில் , தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் மறுவாழ்வு முகாமில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் சந்தோஷமாக வாழ்வதையும் அவர்களது குழந்தைகள் நன்கு படிக்கும் வீடியோ பார்த்து குழந்தைகளின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு தமிழகத்திற்கு குடும்பத்துடன் புகலிடம் தேடி வந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் நால்வரும் விசாரணைக்கு பிறகு 4 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில், பொருளாதார நெருக்கடியால் தமிழகத்தில் தஞ்சமடைந்த இலங்கையர்களின் எண்ணிக்கை 222 ஆக உயர்ந்துள்ளது.

# நல்லூர் கந்தன் ஆலயத்தில் நெல் புதிர் அறுவடை விழா!





படங்கள் : ஐ. சிவசாந்தன்

யாழ்ப்பாணம், பெப். 05

நல்லூர் கந்தன் ஆலயத்தில் நெல் புதிர் அறுவடை விழா நேற்று சனிக்கிழமை காலை நடைபெற்றது.

தைப் பூசத்தினத்துக்கு முதல் நாள் நடைபெறும் இந்தப் பண்பாட்டு விழாவில் கோவில் அறங்காவலரும் சிவாச்சாரியாரும் முதலாவது புதிரை அறுவடை செய்ய ஆலயத்துக்கு சொந்தமான மட்டுவிலில் உள்ள வயலுக்கு செல்வர்.

அந்த வயலில் அறுவடை செய்யும் நெல்லில் இருந்து அமுது தயாரித்து கந்தனுக்கு படையல் செய்து பூசைகள் நடைபெறும். இதனைத் தொடர்ந்து பக்தர்களுக்கும் அமுது வழங்குதல் மரபாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்தப் புதிர் விழா 289 ஆவது ஆண்டாக இந்த வருடமும் கொண்டாடப்பட்டமை குறிப்பித்தக்கது.

(ஐ)

ஈழநாடு
Eelanadu
05.02.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், தை 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அநாகரிக அரசியலை விதைப்போர்?

தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு சாபக்கேடு தொடர்கின்றது. அதாவது, தங்கள் அரசியல் எதிரிகளை துரோகிகளென்றும் - எட்டப்பர்களென்றும் - முகவர்களென்றும் சொல்வதை அரசியல் கட்சிகளின் தலைவர்கள் காலத்துக்குக் காலம் புதுப்பித்துக் கொள்கின்றனர். தங்கள் நலன்களுக்காக மற்றவர்களுடன் இணைந்து கொள்வதற்கு சிறிதும் தயக்கம் காண்பிக்காத கட்சிகளின் தலைவர்கள் என்போர் தங்களுடைய நலன்களுக்காக ஏனையவர்களை தூற்றுவதற்கும் எப்போதும் தயாராகவே இருக்கின்றனர். இவ்வாறு மற்றவர்களை துரோகிகளென்றும் முகவர்களென்றும் தூற்றுவதை ஓர் அரசியல் கெட்டித்தனம் போன்று காண்பிக்க முற்படுபவர்கள் அனைவரிடமும் ஒரு நம்பிக்கையுண்டு. அதாவது, தமிழ் மக்கள் ஓர் ஆட்டு மந்தைக் கூட்டம். அவர்கள் ஒருபோதும் தங்களின் கருத்துகள்மீது சந்தேகம் கொள்ளப்போவதில்லை - தாங்கள் எதைச் சொன்னாலும் எருமை மாடுகள் போன்று அசையமால் இருப்பார்களென்றே சில அரசியல்வாதிகள் ஆணித்தரமாக நம்புகின்றனர். இதன் காரணமாகத்தான் அவர்களால் தொடர்ந்தும் இவ்வாறு துணிந்து பேச முடிகின்றது.

தங்களுடைய அரசியல் எதிரிகளை துரோகிளென்று கூறும் மரபு முதன் முதலில் ஜீ. ஜீ. பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் மேடையில்தான் ஒலித்தது. பின்னர் தமிழரசு கட்சியின் மேடைகளில் ஒலித்தது. அதனையே பின்னர் ஆயுத இயக்கங்கள் தத்தெடுத்துக் கொண்டன. துரோகி - காட்டிக்கொடுப்பாளர் - ஒட்டுக்குழு - மண்டையன் குழு இவ்வாறான பல புதிய சொற்கள் தமிழர் - தமிழ் தேசிய அரசியல் அகராதிக்கு கிடைத்தன.

அவமானகரமான தோல்வி அனுபவங்களுக்கு பின்னரும்கூட, இவ்வாறான சொற்களை எவ்வித குற்றவுணர்வுமின்றி பயன்படுத்தப்படுகின்றன. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரே (அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்) இவ்வாறான சொற்களை அடிக்கடி பயன்படுத்தி வருகின்றனர். ஜனநாயக அரசியலில் ஒரு கட்சி பிறிதொரு கட்சியை விமர்சனம் செய்வது சாதாரணமானது. ஆனால், தமிழ்த் தேசிய பரப்பில் இடம்பெறும் விடயங்கள் எவையுமே விமர்சனங்களல்ல. தங்களுக்கு பிடிக்காத ஒருவரின் நடத்தையை படுகொலை செய்யும் நோக்கில் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களாகும். இது ஒரு ஹிட்லரியன் உத்தி. அதாவது, ஒரு பொய்யை தொடர்ந்து கூறிவந்தால் அதனை உண்மையென்று மக்கள் நம்பத் தொடங்கிவிடுவர்.

ஆனால், இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால் - இவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் - இன்று எவர் மீது குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்றனரோ - அவர்கள் அனைவரோடும் முன்னர் இணைந்து செயல்பட்டிருக்கின்றனர். இப்போது இந்தியாவின் முகவரென்று தூற்றப்படும் அனைவரோடும் இணைந்துதான் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகித்திருந்தது. அப்போது ஏன் இந்த வாதங்கள் முன்வைக்கப்படவில்லை? அதே போன்றுதான் அண்மையில் தமிழரசு கட்சியின் முக்கியஸ்தர் சுமந்திரன் அதுவரையில் இணைந்து இயங்கியவர்கள் மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தார். ஒரு கட்சி அல்லது குறித்த கட்சியின் தலைவர்கள் தவறானவர்களென்றால் அவர்களுடன் எவ்வாறு பல வருடங்களாக இணைந்து இயங்க முடிந்தது? இது தொடர்பில் மக்கள் மத்தியிலிருந்து கேள்விகள் எழவேண்டும்.

அடிப்படையில் இவ்வாறான குற்றச்சாட்டுகள் அனைத்துமே தங்களுடைய தேர்தல் வெற்றியின்மீதான அச்சங்களிலிருந்தே எழுகின்றது. பாம்பு கொத்துவது பயத்தின் காரணமாகவே. தேர்தல் வெற்றிக்கான பயத்திலிருந்தே இவ்வாறான விஷம பிரசாரங்கள் முன்வைக்கப்படுகின்றன. இதற்கு தமிழ் சிவில் சமூகம் என்போரும் ஒரு பிரதான காரணமாகும். இவ்வாறான அநாகரிக அரசியலை முன்னெடுப்போர்களை சிவில் சமூகத்தினர் கண்டிப்பதில்லை. சிவில் சமூகமென்பது நாகரிகமான அரசியலை ஊக்குவிக்க வேண்டும். அதனை சீர்குலைக்க முற்படும் சமூக விரோத அரசியல் சக்திகளை எதிர்க்க வேண்டும். ஆனால், அவ்வாறான சிவில் சமூக செயல்பாட்டாளர்களை இதுவரையில் தமிழ் சமூகம் காணவில்லை.

# 13ஆம் திருத்தம் வந்திராவிடின் தமிழீழம் கிடைத்திருக்கலாம்!

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம். பி.

வவுனியா, பெப். 05

13வது திருத்தச்சட்டம் அன்று நடை முறைப்படுத்தப்படாமல் இருந்திருந்தால் ஒருவேளை தமிழர்களுக்கு தனிநாடு கிடைக் ககூடிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இனவாதிகளின் கொள்கைகளை கேட்டு அரசாங்கம் பயணித்ததாலேயே இன்று இலங் கையில் பொருளாதார நெருக்கடி ஏற்படு வதற்கான பிரதான காரணம். குறிப்பாக, பௌத்த மத பீடாதிபதிகளின் ஆலோசனைகளுக்கு அமைய ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாக செயல்பட்டு வந்ததலேயே இன்று இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது.

13ஆம் திருத்தச் சட்டத்தின் ஊடாக தமிழர்களுக்கு தீர்வு கிடைக்காது. ஆனால், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்படி 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கு உள்ளது.

13ஆவது திருத்தச்சட்டம் அன்று நடை முறைப்படுத்தப்படாமல் இருந்திருந்தால் ஒருவேளை தமிழர்களுக்கு தனிநாடு கிடைக்க க்கூடிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். ஆனால் இந்தியாவை நம்பி இன்று இரண்டையும் இழந்து நிற்கிறோம். இந்தியாவின் ஒப்பந்தத்தின் மூலம் வடக்கு - கிழக்குக்கு மட்டுமல்ல 9 மாகாணங்களுக்கும் அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

### சுதந்திர தினத்துக்கு எதிராக

# அமைதி போராட்டத்தை கலைத்தனர் பொலிஸார்!

கொழும்பு, பெப். 05

சுதந்திர தின நிகழ்வுக்கு எதிர்ப்பு தெரிவித்து, கொழும்பு - மருதானையில் காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் நேற்று முன்தினம் மாலை சத்தியாகிரக போராட்டம் நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு பொலிஸார் போராட்டக்காரர்களை கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும், நீர்த் தாரைப் பிரயோகம் செய்தும் அங்கிருந்து கலைத்தனர். நள்ளிரவையும் தாண்டியும் போராட்டக்காரர்களை கலைக்கும் செயலில் பொலிஸார் ஈடுபட்டனர்.

இதேவேளை, சுதந்திர தினத்துக்கு தடை ஏற்படும் வகையில் போராட்டங்கள், பேரணிகளுக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேசமயம், போராட்டத்தில் பங்கேற்ற பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அறிய வருகின்றது. எனினும், நேற்று மதியம் வரை எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர் என்ற விவரங்களை பொலிஸார் வெளியிடவில்லை. (ஐ)

## கரணவாயில் கால்நடை திருட்டு அதிகரிப்பு!

வடமராட்சி, பெப். 05

கரணவாய் பகுதியில் கால்நடைகள் அதிகளவில் திருடப்படுகின்றன என்று பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

எனினும், திருடர்கள் யாரும் இதுவரை பொலிஸாரால் கைது செய்யப்படவில்லை.

இதேநேரம், கால்நடை திருட்டு தொடர்பில், உரிமையாளர்கள் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டு, உதவி கோருவது அன்றாட நிகழ்வாகி வருகின்றன. இந்த நிலையில், நேற்று அதிகாலையும் கால்நடை களவாடப்பட்டதாக அப்பகுதியை சேர்ந்தவர் ஒருவர் பதிவிட்டுள்ளார். (ஐ-2)

## பண்டாரவன்னியனுக்கு சுதந்திர நாளில் அஞ்சலி

வவுனியா, பெப். 05

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா மாவட்ட செயலகத்தின் வாயிலில் அமைந்துள்ள பண்டாரவன்னியன் நினைவுத் தூபிக்கு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.



இந்நிகழ்வில் வவுனியா பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலாளர் பிரியதர்ஷினி சஜீவன் மற்றும் கிராம அலுவலர்கள், வவுனியா பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



# இயல்பே இனிது.... அனுபவப் பகிர்வு

பகிர்வு -67

கணபதி சர்வானந்தா

பெரும்பாலான பெற்றோர் இப்படித்தான். தம் பிள்ளைகளுக்குக் கஷ்டத்தையே காட்டக் கூடாது என்று பல வழிகளிலும் வரும் கஷ்டங்களைத் தாமே தாங்குகிறார்கள். பிள்ளைகளுக்கு வலிக்கவே கூடாது என்று வளர்த்தெடுக்கிறார்கள். உழைப்பின் பெறுமதியை, வியர்வையின் கனதியை, வெற்றியின் தடங்களை உணரச் செய்யாமலேயே அவர்களை உருவாக்கி விடுகிறார்கள்.அதன் விளைவு...?

நாம் மறந்துவிடக்கூடாத உண்மை, கண்டிப்பில்லாத கனிவு.... நாளை எங்கேயோ' ஓர்'இடத்தில் எம் பிள்ளைகளைத் தண்டிக்க'வைத்துவிடும்... எல்லோரும் பயணிக்கும் பாதையில் எமது பிள்ளைகளையும் பயணிக்கக் கற்றுக்கொடுப்போம். அதில் பிழைவரின் பயணத்தைச் சரி செய்யவும் சொல்லிக்கொடுப்போம் அவர்களுக்கென்று தனியான ஒரு பாதையை அவர்களாகவே உருவாக்கட்டும். நாம் தள்ளி நின்று தட்டிக்கொடுப்போம்.. பிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு விழத் தெரிய வேண்டும் அப்போதுதான் எழுவது எப்படி என்றும் தெரிய வரும்.. எமது சுட்டு விரலைப் பிடித்துக்கொண்டு இன்னும் எத்தனை காலம் தான் அவர்கள் நடை பயில்வது..?

அதனை வலியுறுத்துவதாக ஒரு கதை.முகநூலில் பார்த்தது. அதனை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி.

ஒரு அனுபவம் மிக்க தோட்டக்காரர் அவருடைய தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும் போது பறவையின் சிறிய கூடு ஒன்றைக் கண்டார்.

அதன் அருகில் போய் அந்த கூட்டில் என்ன இருக்கிறது என்று பார்க்க ஆசைப்பட்டார். அதன் அருகில் சென்று பார்த்த போது அதில் பறவையின் சில முட்டைகள் இருப்ப தைக் கண்டு அந்த கூட்டைப் பத்திரமாக எடுத்துப் பாதுகாப்பான ஒரு இடத்தில் வைத்துவிட்டுச் சென்றார்.

அடுத்த நாள் வந்து பார்த்தார். அந்த முட்டைகளில் சிறிய வெடிப்புகள் ஏற்பட்டிருப்பதைக் கண்டார். அப்போது அந்த முட்டைகளிலிருந்து குஞ்சுகள் வெளிவரப்போகிறது என்பதை உணர்ந்த சந்தோசத்தில் கூட்டை மேலும் கவனமாகப் பாதுகாத்துக் கொண்டார்.

இப்போது தோட்டக்காரருக்குப் பயிர்களைக் காட்டிலும் பறவையின் கூட்டையும் முட்டைகளையும் பாதுகாப்பதில் அதிக கவனம் இருந்தது. அதற்காகவே அடிக்கடி தோட்டத்திற்கு வரத் தொடங்கினார்.

ஒவ்வொரு முறையும் அந்த முட்டைகளில் ஏற்பட்ட வெடிப்புகள் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்திருப்பதைக் கண்டார். ஒவ்வொரு முறையும் அவர் அவற்றின் மீதான எதிர்பார்ப்பை அதிகப்படுத்திக் கொண்டே செல்லத் தொடங்கினார்..

வழமை போன்று ஒரு நாள் கூட்டைப் பார்க்கத் தோட்டக்காரர் வந்தபோது முட்டைகள் அசைவதையும் முட்டையினுள்ளே குஞ்சுப் பறவைகளின் இறக்கைகள் விரிய வழியில்லாமல் முட்டையின் சுவர்களிலே முட்டி மோதுவதையும் கண்டு மனம் வருந்தினார்.

“பாவம் அந்தக் குஞ்சுகள் கருவிலேயே கஷ்டப்படுகிறதே..” என்று எண்ணியவர் உடனே அந்த முட்டைகளிலிருந்த வெடிப்புகளைத் தன் கைகளால் கொஞ்சம் பெரிதாக்கிக் குஞ்சுகள் வெளிவர ஏற்றாற்போல் சௌகரியமாக முட்டைகளை வைத்து விட்டு வீடு சென்றார்.

மறு நாள் காலையில் வந்தார். புதிய பறவைகளைக் காண மிகுந்த ஆசையோடு கூட்டுக்கு அருகில் சென்ற தோட்டக்காரருக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

முட்டைகளில் ஒரு மாற்றமும் இல்லை...“சரி நாளை பார்ப்போம்” என்று எண்ணிச் சென்றவர் அடுத்த நாள் வந்தார். அன்றும் ஒரு மாற்றமும் இல்லாது முட்டைகள் அப்படியே இருந்தன.

இப்படியே ஒரு நாள் வந்து பார்த்தபோது முட்டைகளைச் சூழ எறும்புகள் படையெடுத்திருந்தன.முட்டையினுள் குஞ்சுகள் செத்துப்போய்க் கிடந்தன...

அதைக்கண்ட தோட்டக்காரருக்கு மனம் வலித்தது, வாடிப்போனார்..அப்போது அந்த வழியால் தோட்டக்காரரின் நண்பர் ஒருவர் வந்தார்... நடந்ததை அவருக்குக் கூறி மன் வருந்தினார்.

“பாவம் உன் அவசரத்தாலும் அளவுக்கு மீறிய அன்பாலும் எல்லையற்ற எதிர்பார்ப்பாலும் அந்த பறவைகளை அழித்து விட்டாயே” என்று நண்பர் சொன்னார்.

“நானா ...?”

“ஆம் நீ தான்..!” என்றார் அவர் நண்பர்.

அந்தப் பறவைகள் அந்த முட்டைகளில் இருந்து வெளி வருவது இயற்கையின் வரம். உலகத்தில் வாழ வலிமையோடு அவைகள் வெளியே வரவேண்டும். அவை தானாகவே வெளிவரும்போது அதன் இறக்கைகள் மெதுவாக அசையும், கால்கள் துடிக்கும், அவை முட்டைகளின் சுவர்களில் முட்டி மோதும்.. அது இயற்கை.. அதை அப்படியோ விட்டிருந்தால் இந்நேரம் அழகான பறவைகளாக அவை வெளிவந்திருக்கும். அவை தானாகவே பறந்திருக்கும்... ஒரு சுகப் பிரசவம் நடந்து முடிந்திருக்கும்.. அதனை அழித்து விட்டாயே.” என்று நண்பர் கூறியதும் தோட்டக்காரர்மேலும் மனம் உடைந்து போனார்.. சிதறிப்போனார்..!.

இதுஒரு'பறவையின்'கதையல்ல. இது எமது கதை. இது எமக்கும் பொருந்தும். நாம் எமது பிள்ளைகளை அதிக கரிசனையோடு வளர்க்கிறோம் என்று எண்ணி சில சமயங்க ளில் அவர்கள் வாழ்வைச் சிதைப்பதற்கு வழி கோலி விடுகிறோம். பெரும்பாலானே பெற்றோரின் பிள்ளைகள் மீதான கவனம் இப்படித்தான். அவர்கள் தாமாகவே எண்ணி ஒரு விடயத்தைச் செய்யப் பழக்குவதில்லை. நிர்பந்தத்தின் பேரில் அவர்களை வற்புறுத்துவதைப் பார்க்கலாம். படி..படி என்று அவர்களை கட்டாயப் படுத்துவதும், அதிக உணவை உண்ண அவர்களை நிர்ப்பந்திப்பதுவும் இவ் வகைப்பட் டவை. அவர்கள் தாமாகவே உணர்ந்தறிந்து செய்வதென்பது வேறு. நிர்ப்பந்தத்தின் பெயரால் செய்வதென்பது வேறு. இயல்பே இனிது, ●

# இந்தவார ராசிபலன் 05.02.2023 - 11.02.2023



நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : பௌர்ணமி

பெப்ரவரி 29 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - தை 22




சிவனை எண்ணி வழிபட நன்மை அதிகரிக்கும். உற்சாகமாக செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். அரசு விஷயங்களில் எச்சரிக்கை தேவை. செலவு அதிகரித்தாலும் அதற்கேற்ற வருமானம் கிடைக்கும். மனதிற்கினிய சம்பவம் நடந்தேறும். செவ்வாய். புதனில் வெளித்தொடர்புகள் ஆதாயம் தரும். வியாழனன்று வேலைகளில் ஏற்பட்ட நெருக்கடி விலகும். நண்பர்கள் வழியே புதிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். வரவுகள் இருக்கும்.




எதிர்பார்த்த பணவரவு வந்து சேரும். துணிச்சலுடன் செயல்பட்டு முயற்சியில் வெற்றி காண்பீர்கள். உங்கள் செயல்கள் வெற்றியாகும். செயல்களில் நெருக்கடி ஏற்பட்டாலும் புத்திசாலித்தனத்தால் எல்லாவற்றையும் சரி செய்வீர்கள். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். பகைவர் தொல்லைகள் விலகும். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். நெருக்கடிகளை சந்திப்பீர்கள். அதன்பின் பண வரவில் இருந்த தடை விலகும். உங்கள் செயல்களுக்கு இடையூறாக இருந்தவர்கள் விலகிச் செல்வார்கள்.




சங்கடங்கள் விலகி நன்மை காணும் வாரம் இது. நீங்கள் எதிர்பார்த்தவற்றில் நன்மை உண்டாகும். முதலீடுகளில் இருந்து வரவு காண்பீர்கள். அந்நியர்கள் வழியே ஆதாயம் உண்டாகும். குடும்பத்தினர் ஆதரவாக இருப்பார்கள். வெள்ளியன்று குழப்பங்கள் அதிகரித்தாலும் திடீர் வரவுகளால் சமாளிப்பீர்கள். அதன்பின் உங்கள் திறமை பளிச்சிடும். நண்பர்கள் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். அரசு முயற்சிகளில் எதிர்பார்ப்பு நிறைவேறும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும்.




முயற்சியில் தடை உண்டாகும். அதன்பின் உங்கள் செயல்பாடு வெற்றியாகும். அரசுவழி முயற்சிகள் சாதகமாகும். சிலர் புதிய சொத்து வாங்குவீர்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும் வாரம் இது. நண்பர்களுடன் இருந்த கருத்து வேறுபாடுகள் விலகும். அரசுவழி முயற்சிகள் நிறை வேறும். வெள்ளியன்று வரவும் செலவும் போட்டி போடும். அதன்பின் உங்கள் எண்ணம் ஒவ்வொன்றாக நிறைவேறும்.




சூரிய பகவானை வழிபடுவது நல்லது. எதிர்பார்ப்பு பூர்த்தியாகும். நீண்ட நாளாக இழுபறியாக இருந்த முயற்சி நடந்தேறும். விரய சந்திரனால் செலவு அதிகரிக்கும். உங்கள் செயல்களில் ஆதாய நிலை உண்டாகும். உங்கள் முயற்சிகளில் ஆதாயம் காண்பீர்கள். அதன்பின் எதிர்பாராத செலவுகளை சந்திப்பீர்கள். உங்கள் ராசி நாதன் ஆறாமிடத்தில் சஞ்சரிப்பதால் எதிர்ப்பு இன்றி ஆதாயமான நிலை ஏற்படும்.




கடந்த வாரம் உண்டான நெருக்கடி விலகும். வெள்ளி முதல் திங்கள் மாலை வரை செலவுக்கேற்ற வரவு வந்து கொண்டிருக்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட சங்கடம் விலகும். பொருளாதார நிலை உயரும். செவ்வாய், புதனில் செலவு அதிகரிக்கும். உறவினர் ஆதரவுடன் முயற்சிகள் வெற்றியாகும். மகிழ்ச்சி அதிகரிக்கும். நீங்கள் எதிர்பார்த்தவற்றில் லாபம் காண்பீர்கள். செயல்கள் வெற்றி பெறும். திங்கள் மாலை முதல் வரவு செலவில் கவனம் தேவை. குடும்பத்தினருடன் கருத்து வேறுபாடு தோன்றும்.




கடந்த வார சங்கடங்கள் விலகும் பொருளார நிலை சீராகும். உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும். அந்நியரால் ஆதாயம் அதிகரிக்கும். திடீர் செலவு தோன்றும். ஏழாமிட ராகுவால் ஆசை அதிகரிக்கும். உங்கள் மனம்போன போக்கில் செல்வீர்கள். சந்திரன் சஞ்சாரத்தால் வரவு உண்டு. நான்காமிடத்தில் சஞ்சரிக்கும் லாபாதிபதியும், சுகாதிபதியும் உங்களுக்கு நெருக்கடி தருவர். வரவு அதிகரிக்கும். சங்கடம் நீங்கும்.




வெள்ளியன்று முயற்சியில் தடைகளை சந்தித்தாலும் சனிக்கிழமை முதல் நினைத்ததை அடைவீர்கள். திருமண வயதினருக்கு வரன் தேடி வரும். சிலருக்கு எதிர்பார்த்த வேலை வாய்ப்பு அமையும். தைரியஸ்தான சனியும் ஆறாமிட ராகுவும் உங்கள் ஆற்றலை அதிகரிப்பார்கள். எதிரிகளால் உண்டான தொல்லைகள் விலகும். உங்கள் செயல்கள் லாபமாகும். வழக்கு சாதகமாகும். பொன் பொருள் சேரும். சொத்து வாங்கும் முயற்சி நிறைவேறும்.




நெருக்கடி விலகும். எதிர்பார்த்தவற்றில் லாபம் ஏற்படும். விலகிய உறவினர்கள் மீண்டும் தேடி வருவர். எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாரம் இது. நேர்மையான வழியில் வரவுகள் உண்டாகும். அரசு வழி முயற்சிகளிலும் பலன்கள் ஏற்படும். புதிய நட்பால் சங்கடங்களை விட்டு வெளியில் வருவீர்கள். வரவுகளில் தடையும் செயல்களில் இழுபறியும் உண்டாகும். வழக்கத்தை விட வியாபாரம், பணியில் கூடுதல் கவனம் தேவை.




பெரும்பாலான கிரகங்கள் சாதகமாக இல்லை என்றாலும் சுக்கிரன், சந்திரன் அருளால் நெருக்கடிகளில் இருந்த மீள்வீர்கள். நண்பர்கள் உறுதுணையாக இருப்பர். வருவாய்க்குரிய முயற்சிகள் வெற்றியாகும். செயல்களில் கவனம் தேவை. திட்டமிட்டு செயல்பட்டு முயற்சியில் வெற்றி அடைவீர்கள். தொழிலை விரிவு செய்வீர்கள். சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு உண்டாகும். முயற்சிகளில் ஆதாயம் உண்டாகும்.





குருவருளால் நன்மைகள் அதிகரிக்கும். நீண்டநாள் எண்ணம் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தில் இருந்த பிரச்னைகள் தீரும். தொழில், உத்தியோகம் சிறப்படையும். ஜென்ம சுக்கிரனால் வரவுகள் அதிகரிக்கும். புதன் வியாழனில் விழிப்புணர்வு அவசியம். மூன்றாமிட ராகுவால் உங்கள் தைரியம் அதிகரிக்கும். முயற்சிகள் லாபமாகும். தொழிலில் இருந்த தடைகள் அகலும். சிலருக்கு புதிய வேலை வாய்ப்பு அமையும். புதன், வியாழனில் செயல்களில் சங்கடம் ஏற்படும்.




சந்திர பலத்தால் நன்மை காணும் வாரம் இது. மூன்றாமிட செவ்வாய், லாப சனியின் அருளும் கூடுவதால் உற்சாகத்துடன் செயல்பட்டு நினைத்ததை சாதிப்பீர்கள். அரசுவழியில் ஆதாயம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். லாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சூரியன், சனியால் நன்மை அதிகரிக்கும். வருமானத்தில் ஏற்பட்ட தடைகள் விலகும். அரசு வகையில் உங்கள் முயற்சி நிறைவேறும். வீடு மனை வாங்கும் சிந்தனை மேலோங்கும். எட்டாமிட கேதுவால் ஆரோக்கியத்தில் சங்கடம் உண்டாகலாம் கவனம். வருவாயில் இருந்த தடைகள் விலகும்.

# உலக பொருளாதார புயலில் இந்தியா சிக்காதது எப்படி?



சென்னை மடல்
-பகவான் சிங்-

என் அன்பான ‘ஈழநாடு’ நண்பர்களுடன் இந்த ஞாயிறு காலை ‘ரிபின்’ உரையாடலை, நிர்மலா சீதாராமன் வெளியிட்ட இந்தியாவின் நிதிநிலை அறிக்கையிலிருந்து தொடங்குகிறேன். மிகவும் எதிர்பார்க்கப்பட்ட இந்த பட்ஜெட்டை புதனன்று, நாடாளுமன்றத்தில் வெளியிட்ட இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு முன், பொருளாதாரத்தை மேம்படுத்தவும் நிதிப்பற்றாக்குறையைக் குறைக்கவும், ஏப்ரல் 1 தொடங்கும் நிதியாண்டில் அரசு, 45 ட்ரில்லியன் ரூபாய் செலவு செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளதாகக் கூறினார். இதன் நோக்கம், சமூகத்தின் அனைத்துப் பிரிவினரும் பயனடையும் வகையிலான வலுவான பொருளாதாரத்தை உருவாக்குவது தான் என்றும் அவர் கூறினார்.



பலன் தராத மானியங்களையும் மக்கள் நல ஊக்கத் தொகைகளையும் குறைத்து, கடினமான வளர்ச்சித் துறைகளில் கவனம் செலுத்தி, மொத்த உள்நாட்டு உற்பத்தியை (ஜி. டி. பி. - 2023 ஏப்ரல் 1 முதல் 2024 மார்ச் 31 வரையிலான நிதியாண்டில், உள்நாட்டில் தயாரித்து விற்பனை செய்யப்பட்ட அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகளின் சந்தை மதிப்புத் தொகை) 10.5 வீதம் அதாவது, 301.75 ட்ரில்லியன் ரூபாய்க்கு உயர்த்தும் மோடி அரசின் இலக்கை இந்த பட்ஜெட் பிரதிபலிப்பதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். 2023-24ஆம் ஆண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி 6.5 வீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த முயற்சியில், அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலைச் சந்திக்கவேண்டிய நிலையிலும், அரசு வெறும், மக்களைத் திருப்திப்படுத்தும் நடவடிக்கைகளைப் புறக்கணித்து, சமையல் எரிவாயு, உரங்கள், உழைப்பாளர்களைச் சோம்பேறிகளாக்கி, குறைந்த காலத்துக்குக் கூலித் தொழில் செய்து, அரசின் ஊரகத்திட்டங்களில் உத்தரவாதமான வேலைவாய்ப்பைப் (சாலைப் பணி, பாலம் கட்டுதல், நீர் நிலைகள் தூர்வாருதல்) பெறும் நோக்கில் சொற்ப உழைப்பையே தரும் ஊழியர்களுக்காக பெரும் தொகையை ஒதுக்கவேண்டியுள்ள 100 நாள் ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் ஆகியவற்றுக்கான மானியங்களைக் குறைத்துள்ளது. இத்திட்டத்தின் மூலம், குறைந்தபட்ச உத்தரவாத தினக்கூலி வழங்கப்படுகிறது. இத்தொகை மாநிலத்துக்கு மாநிலம் வேறுபடுகிறது, (தமிழகத்தில் இது 273 ரூபாயாக உள்ளது) நிதியமைச்சரும் பாஜக சக அமைச்சர்களும் இந்த பட்ஜெட்டை வளர்ச்சிக்கானது என்று பாராட்டிக்கொண்டாலும், எதிர்க்கட்சிகள் குறிப்பாக, காங்கிரஸ், ‘ஏழைகளுக்கு எதிரானது என்றும் வேலை வாய்ப்பு உருவாக்கம் பற்றி இதில் எதுவும் இல்லை’ என்றும் விமர்சித்துள்ளன.


இந்தியாவில் வெகுகாலமாகவே, எதிர்க்கட்சியாக இப்போது இருக்கும் காங்கிரஸோ முன்னர் இருந்த பாஜகவோ, பட்ஜெட்டில் உள்ள நல்ல விஷயங்களைப் பாராட்டி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்குவதை விடுத்து, குறைகளை மட்டுமே கண்டுபிடிக்கும் போக்கும் நிலவி வருகிறது. இதனால்தான், பட்ஜெட் குறித்து சாமானியன் பெரும் கவனம் செலுத்துவதில்லை - தன்னுடைய அன்றாட வரவு,செலவை அது பாதிக்காதவரை.

2020 முதல் உலகம் முழுவதையும் முடக்கிப்போட்ட கோவிட் பெருந்தொற்றால் ஏற்பட்ட சர்வதேசப் பொருளாதார வீழ்ச்சியின் பின்னணியில் இந்த பட்ஜெட் வெளிவந்துள்ளது. அனேகமாக, இந்தப் புயலில் வீழ்ந்து விடாமல் இருக்கும் ஒரே நாடு இந்தியாதான். இதற்குக் காரணம், உலகின் பிற நாடுகளைப் போல, நிதியுதவியை வாரி வழங்காமல், இலக்கு நிர்ணயித்து எடுத்த குறிப்பிட்ட அறிவார்ந்த நடவடிக்கைகள்தாம். வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல், நீடிக்கும் உக்ரேன் போர். அதானி சர்ச்சையில் (இது குறித்து சென்ற ஞாயிறு என் கட்டுரையில் விளக்கியிருந்தேன்), நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நடந்த சில நிகழ்வுகளால் பட்ஜெட் மீதான மக்களின் பார்வை சிறிதளவு திசை திருப்பப்பட்டுள்ளது.

அதானி விவகாரத்தில் உடனடி விவாதம் கோரி, எதிர்க்கட்சிகள் மீண்டும் மீண்டும் அரசின் மீதான தமது தாக்குதலை அதிகரித்த நிலையில், நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளும் ஒத்திவைக்கப்பட்டதையடுத்து, பிரதமர் மோடி, மூத்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் ஒரு முக்கிய கூட்டம் நடத்தினார். குறைந்த பட்சம் 16 எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க, மோடி ஆட்சியில் செல்வாக்கு பெற்று, உலகின் மூன்றாவது செல்வந்தராக இருந்த ஒருவர், மாபெரும் நிதி மோசடியில் ஈடுபட்டுத் தற்போது, பிபிசி குறிப்பிடும் விதத்தில், 20ஆவது இடத்தையும் தாண்டி சரிவைச் சந்தித்திருப்பது பற்றிப் பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தவும் மேற்கொள்ளவேண்டிய உத்திகள் குறித்தும் ஒரு கூட்டம் கூட்டின. தேர்தல்வரை இந்த விவகாரத்தைச் சூடு தணியாமல் வைத்திருக்க எண்ணுகிறது எதிர்தரப்பு. அண்மைக் காலத்தின் மாபெரும் பங்குச் சந்தை மோசடியாகக் கருதப்படும் இதைப்பற்றி மக்கள் தொடர்ந்து விவாதிக்கும் படி எதிர்க்கட்சிகள் என்ன செய்யும் என்றும், இதனை அரசு எப்படிச் சமாளிக்கப் போகிறது என்றும் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## நியாயத்தில் தவறிய நீதியரசர்?

நேற்று இலங்கையில் நாட்டின் 75ஆவது சுதந்தரதின விழாவை நீங்கள் அனைவரும் கொண்டாடியிருப்பீர்கள். இலங்கைச் செய்தித்தாள்களை நான் இன்னும் படிக்கவில்லை, என் இலங்கை நண்பர்களுடனும் இன்னும் பேசவில்லையாதலால், இந்தக் கொண்டாட்டங்கள் எப்படி இருந்தன என்பது பற்றி எனக்கு இன்னமும் தெரியாது. ஆனால், வடக்குப் பகுதிக்கும் மற்ற பகுதிகளுக்குமான ஆரவாரமும் ஈடுபாடும் வேறுபட்டிருக்கும் என்பது மட்டும் எனக்குத் தெரியும். காரணம், மக்கள் மட்டுமல்லாமல் அரசின்




ஈடுபாட்டிலும் உள்ள வேறுபாடுதான்.

ஐந்து மாதங்களுக்கு முன்னர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அலுவலகத்திலிருந்து வெளியான ஒரு செய்திக்குறிப்பில், 75ஆவது சுதந்தர தினத்தைக் குறைந்த செலவில், பெருமையுடனும் கௌரவத்துடனும் கொண்டாட அவர் விரும்புவதாகத் தெரிவித்திருந்தமை எனக்கு நினைவுக்கு வருகிறது. அதோடு, நாட்டைப் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து மீட்டெடுப்பதாகவும், மக்களின் நம்பிக்கை அதிகரிப்பதாகவும்கூட அவர் உறுதியளித்திருந்தார் அல்லவா? இந்திய-சீனக் கடன்களுக்கான காலம் மாற்றியமைப்பில் ஏற்படும் தாமதங்களால் சர்வதேச செலாவணி நிதியத்திடமிருந்து வரக்கூடிய நிதியுதவிகள் தாமதமாவதாலும், இன வேற்றுமைப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் அரசியல் கட்சிகள் குறிப்பாக, தமிழர் தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகளில் இருக்கும் தேக்க நிலையும் தமது நாட்டை மீட்கும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை போடுவதாக அவர் ஒரு சாக்குப்போக்கை முன்வைக்கலாம்.

150 ஆண்டு காலம் கோலோச்சிய ஆங்கிலேயர்கள், நாட்டைவிட்டுச் செல்லும்போது, பெரும்பான்மை சிங்களர்வகளிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்துச் சென்றனர். 1.2 மில்லியன் மக்களில் வெறும் 13 வீதம் மட்டுமே தமிழர்கள் இருந்ததால், மாபெரும் யாழ்ப்பாணப் பேரரசின் வரலாற்றை உதாசீனப்படுத்தி, பூர்வ தமிழ்க் குடிகளைச் சிங்கள அதிபர்கள், பிரதமர்கள் என்ற புதிய எஜமானர்களின் அடிமைகளாக விட்டுச் சென்றனர். 2021 டிசம்பரில், ‘கொழும்பு ரெலிகிராப்’ இதழில் வெளியாகியிருந்த நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரனின் சிறந்த ஆய்வுக் கட்டுரை ஒன்றைப் படித்த நினைவிருக்கிறது.

அதில், இந்தியாவின் தென் மாநிலமான தமிழகத்தின் தெற்குப் பகுதியிலிருந்து குடியேறியவர்கள்தான் இலங்கையின் பூர்வகுடிகள் என்று ஆணித்தரமாக ஆதாரங்களை அடுக்கியிருந்தார். அவர், உச்ச நீதி மன்றத்தில் சுத்தியலால் தட்டித் தீர்ப்பு வழங்கிய பாணியில், இந்தக் கட்டுரையை நிறைவு செய்திருந்தார். இந்த 75ஆவது சுதந்தர தினம் அல்லது இதை வேறு எப்படி நீங்கள் கொள்கிறீர்களோ, அந்த நாளில், அவரது சொற்களைப் பரிசாக இங்கு மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

அவரது 2878 சொற்கள் நிறைந்த கட்டுரையில், பெரிதும் மதிக்கப்பட்ட சிங்களர்வகள் உள்ளிட்ட பல ஆராய்ச்சியாளர்களை மேற்கோள் காட்டி, “இறுதியாக- இந்தத் தீவின் பூர்வ குடிகள் தமிழர்களே. அதன் பிறகு நடந்த பல தமிழ் அரசர்களின் ஆக்கிரமிப்புகளால், பதிவு செய்யப்பட்ட வரலாற்றுக்காலத்துக்கு முன்பிருந்தே இங்கு வாழ்ந்துவந்த பூர்வ தமிழ்க் குடிகளுடன் புதிதாகக் குடியேறிய தமிழர்கள் சேர்ந்து எண்ணிக்கை அதிகமானது. சோழர் படையெடுப்பும் அப்படித் தென்னிந்தியாவில் இருந்து வந்ததுதான். சிங்களக் குடியேற்றமும் சிங்கள மொழியும் மிக அண்மைக்காலத்தில் வட இந்தியாவிலிருந்து குடியேறியவர்களால் ஏற்பட்டது தான்” என்று குறிப்பிட்டுள்ளார்.

அந்த நீதியரசரைப்போல அறிஞனோ அறிவாளியோ அல்ல நான். ஆனால், இந்தப் பிராந்தியத்திலிருந்த சிறு தமிழ் மன்னர்கள் காட்டிக்கொடுத்ததால்தான் ஆங்கிலேயர்களால் யாழ்ப்பாண அரசரை வெல்ல முடிந்தது என்று நினைவுபடுத்தும் அளவுக்கு வரலாறு எனக்குத் தெரியும். இப்போது சிங்கள ஆட்சியாளர்கள் நம்மை அடக்கியாள்வதற்கும் நமது ஒருமைப்பாடின்மையே காரணம். தனது அகம்பாவத்தையும் தனிப்பட்ட முன்முடிவுகளையும் ஒதுக்கி வைத்து, தமிழர்களையும் தமிழர் கட்சிகளையும் ஒன்றிணைத்து ஒரே வலுவான சக்தியாக உருவாக்கி, கொழும்பிடம் நியாயத்தைப் பெற முயற்சிக்க நம் நீதியரசர் தவறிவிட்டது எனக்கு வருத்தமளிக்கிறது. அது மட்டும் போதாது. விக்னேஸ்வரன்போன்ற உயர்ந்த மனிதர்கள், இந்தத் தமிழர் ஒற்றுமையை இன்னும் பெரிய அளவில் கொண்டுசெல்ல முயற்சிக்கவேண்டும். இலங்கையின் சமூக-அரசியல் இழையை வலுப்படுத்த, தமிழர்கள், முற்போக்கு சிங்களத் தலைவர்களுடனும் அமைப்புகளுடனும் கைகோக்கவேண்டியது அவசியம்.

இதனால், நிரந்தரமான இன நல்லிணக்கம் ஏற்படுவதுடன், வடக்கில் இந்தியாவிடமும், மேற்கத்திய நாடுகள், சர்வதேச செலாவணி நிதியம், உலக வங்கியிடமும் கிழக்கில் சீனா, ஜப்பானிடமும் கையேந்தாமல், நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சியை நம்மால் நாமே வருங்காலத்தில் பெறமுடியும். உணவுப் பொருட்களின் விலை உயர்வாலும் வருமானம் குறைவதாலும் நமது குழந்தைகள் இன்னும் பட்டினியால் வாடுவதாக அண்மையில் ஒரு பிபிசி செய்தி பார்த்தேன். நாம் நமது ஞாயிறு காலை உணவுக்குத் தயாராகும்போது, நமது நாட்டை இந்த அவல நிலையிலிருந்து மீட்கவும் உறுதியெடுப்போமா?

இதை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதற்காக என்னை மன்னிக்கவும் - ஒற்றுமைக்காக நாம் இன்னும் அதிக முயற்சிகள் எடுக்கவேண்டும். சில நாட்களுக்கு முன், கொழும்பில் உள்ள எனது தமிழ் நண்பர் ஒருவர், “அங்கிள், தயவு செய்து ஒற்றுமை குறித்தே பேசாதீர்கள். நாங்கள் வீர சோழ பரம்பரை, சண்டை பிடிச்சுக்கிட்டேதான் இருப்போம். ஒன்று சேரமாட்டோம்” என்று நெஞ்சைத் தட்டிச் சொன்னதை நான் இங்கு எழுதியிருந்தது நினைவிருக்கிறதா? அடுத்தமுறை சுதனிடம் நான் பேசும்போது, அவரது வேர்கள் சோழ சாம்ராஜ்யத்தை விடவும் மிகப் பழமையானது என்பதையும், கிளிநொச்சியின் இரணைமடு மற்றும் சில தெற்குப் பகுதிகளின் அகழ்வாய்வுகள், அவரது முன்னோர்கள் இந்தத் தீவில் 1,25,000 ஆண்டுகளுக்கு முன்னரே வாழ்ந்திருப்பதைக் காட்டுவதைப் பெருமை கொண்டாடவேண்டும் என்றும் கூறவேண்டும்.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# தென்னிலங்கையில் மீண்டும் பெரும்பான்மை இனவாத அணிதிரட்டல் முயற்சிகள்!



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

தேசிய இனப்பிரச்சினைக்கு துரிதமாக அரசியல் தீர்வொன்றைக் கண்டுவிடும் நோக்குடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட்டும் பாராளுமன்ற கட்சிகளின் மகா நாடு இதுவரையில் இரு தடவைகள் கூட்டப்பட்டது. முதற்சுற்று கடந்த டிசம்பர் 13 ஆம் திகதியும் இரண்டாவது சுற்று ஜனவரி 26 ஆம் திகதியும் இடம்பெற்றன.

இந்த மகாநாட்டில் ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) கலந்துகொள்வதில்லை. அதன் தலைவர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ளாதமை பெரும்பாலும் காரணம் காட்ட இயலாததாகும். அவர்கள் கலந்துகொண்டிருக்கமுடியும், கலந்துகொண்டிருக்கவும் வேண்டும். கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சிக்குப் பிறகு தென்னிலங்கை மக்கள் மத்தியில் ஜே.வி.பி.யின் செல்வாக்கு கணிசமானளவுக்கு அதிகரித்திருப்பதாக கருதப்படும் நிலையில் -- மாற்று அரசியல் சக்தியாக தங்களை முன்னிலைப்படுத்தி அதன் தலைவர்கள் நாட்டை ஆட்சி செய்வதற்கு வாய்ப்பைத் தருமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துவரும் நிலையில் சர்வகட்சி மகாநாடு போன்ற முக்கிய செயன்முறைகளைப் புறக்கணிப்பது பிரதான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்கவேண்டிய பொறுப்பை தட்டிக் கழிப்பதற்கு ஒப்பானதாகும் என்று சில அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டினர்.

ஜே.வி.பி.யின் தலைவர்கள் ஜனாதிபதி கூட்டிய மகாநாட்டில் கலந்துகொண்டு அந்த செயன்முறையை ஆட்சேபிப்பதற்கான காரணத்தையாவது விளக்கிக் கூறி தங்களது மாற்று யோசனையை முன்வைத்திருக்கலாம். மாற்றமடைந்திருக்கும் அரசியல் நிலைவரங்களுக்கு மத்தியில் தங்களது முக்கியத்துவத்தை உணர்த்துவதற்கு கிடைத்த வாய்ப்பை அந்த தலைவர்கள் தவறவிட்டுவிட்டார்கள் என்றும் அவர்கள் கூறினர்.

மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் அவரது அரசாங்கமும் பதவியில் இருந்து இறங்கியதை அடுத்து சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு 2019 ஜனாதிபதி தேர்தலிலும் 2020 பாராளுமன்ற தேர்தலிலும் மக்கள் வழங்கிய ஆணை வலுவிழந்து விட்டது என்ற நிலைப்பாட்டைக் கொண்ட ஜே.வி.பி. அந்த பாராளுமன்றத்தினால் தெரிவான ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் பதவிக்கு ஒரு நியாயப்பாட்டை கொடுப்பதாக அமைந்துவிடக்கூடாது என்பதற்காக மகாநாட்டில் பங்கேற்பதை தவிர்த்திருக்கக்கூடும் என்று வேறு சில அவதானிகள் கூறினர்.

இப்போது அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் யோசனையை ஜனாதிபதி விக்கிரமசிங்க வெளியிட்ட பிறகு அதற்கு கடும்போக்கு சிங்கள தேசியவாத சக்திகளிடம் இருந்தும் பௌத்த மகாசங்கத்திடம் இருந்தும் கடுமையான எதிர்ப்புக்கள் கிளம்பியிருக்கும் நிலையில் ஜனாதிபதி கூட்டிய மகாநாட்டின் அடுத்த சுற்றின் கதி குறித்து சிந்திக்கவேண்டியிருக்கிறது. அவ்வாறு அடுத்த சுற்றைக் கூட்டினாலும் கூட அதனால் எந்தவிதமான பயனுடைய விளைவையும் கொண்டுவர முடியுமா என்ற கேள்வியும் எழுகிறது.

முதற்சுற்றில் பங்கேற்ற சில கட்சிகள் இரண்டாவது சுற்றில் பங்கேற்கவில்லை.13 வது திருத்தத்துக்கு ஆதரவாக பேசி வந்த எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச பங்கேற்காதமை குறிப்பிடத்தக்கதாகும். மகாநாட்டில் பங்கேற்றுவரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவும் தற்போதைய பிரதமர் தினேஷ் குணவர்தனவும் ஜனாதிபதியும் மற்றையவர்களும் பேசுவதை மௌனமாக கேட்டுக்கொண்டிருக்கிறார்களே தவிர தங்களது கருத்துக்களை வெளிப்படுத்துவதாக இல்லை.

13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் தனது யோசனைக்கு கிளம்பிய எதிர்ப்பைக் கண்ட ஜனாதிபதி விக்கிரமசிங்க

ஒன்றில் அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் அல்லது அதை ஒழித்துவிடவேண்டும், அதை ஒழிப்பதற்கு பாராளுமன்றத்தில் எவராவது அரசியல மைப்புக்கான 22 வது திருத்தத்தை தனிநபர் சட்டமூல மாக கொண்டுவரலாம்.13 வது திருத்தத்தை நடைமுறைப் படுத்தவும் போவதில்லை, அதை ஒழிக்கவும் போவ தில்லை என்று ஒரு இடைநடுவில் தொடர்ந்து நிற்கமுடி யாது என்று கடுமையான தொனியில் கூறியதைக் காணக் கூடியதாக இருந்தது.

இத்தகைய பின்புலத்தில், 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் யோசனை தொடர்பில் ஜே.வி.பி.யிடம் இருந்து வெளிவந்திருக்கும் பிரதிபலிப்பு மிகுந்த கவனத்துக்குரியதாகிறது.

தேசிய இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வாக 13 வது திருத்தம் ஏற்கெனவே முன்வைக்கப்பட்டிருப்பதால் அதை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரிய கடந்த வாரம் " த ஐலண்ட் " பத்திரிகைக்கு தெரிவித்திருக்கிறார்.

"அந்த திருத்தத்தின் முழுமையான நடைமுறைப்படுத்தல் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு உதவுமா என்பது குறித்து எமது கட்சிக்குள் விவாதம் ஒன்று இருக்கிறது. ஆனால் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் உறுதிமொழிகளிலும் 13 வது திருத்தத்தை முழுமயாக நடைமுறைப் படுத்துவதற்கு முன்னெடுக்கப்படுவதாக கூறப்படும் அவரது முன்முயற்சிகளிலும் எமக்கு நம்பிக்கை இல்லை.



**தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் பழைய போக்கை கைவிட்டு தெளிவான நிலைப்பாடொன்றை எடுப்பதன்மூலம் அத்தகைய அணிதிரட்டலின் பாதகங்களை சிங்கள மக்களுக்கு புரியவைக்க ஜே.வி.பி. முன்வரவேண்டும்.**

"இந்த கட்டத்தில் எதற்காக அவர் அந்த திருத்தத் தின் முழுமையான நடைமுறைப்படுத்தல் குறித்து பேசுகிறார். அதைச் செய்வதற்கு அவருக்கு தாராளமாக வாய்ப்புக்கள் இருந்தன. அதனால், அவரது உறுதிமொழிகள் வெற்று வார்த்தைகள் என்றே நாம் நம்புகிறோம். முழுமையான நடைமுறைப்படுத்தலை அவர் முன்னெடுக்கப் போவதில்லை " என்றும் கலாநிதி அமரசூரிய கூறினார்.

13 வது திருத்தத்தின் முழுமையான நடைமுறைப்படுத்தல் குறித்து தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடு என்ன என்று அவரிடம் கேட்கப்பட்டபோது "தேசிய இனப்பிரச்சினைக்கான ஒரு தீர்வாக அது முன்வைக்கப்பட்டிருக்கிறது. அது ஏற்கெனவே அரசியலமைப்பில் இருக்கிறது. அது நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று நாம் நம்புகிறோம். தேசிய இனப்பிரச்சினைக்கு சாத்தியமான ஒரு தீர்வாக அமையமுடியுமா என்பது தொடர்பில் எம்மிடையே ஒரு விவாதம் இருக்கிறது. தமிழ் மக்களின் பிரச்சினைகளை கையாள்வதில் மெய்யான அக்கறை கொண்ட ஒரு அரசாங்கம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வைக் காணவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. மற்றைய கட்சிகளில் எமக்கு நம்பிக்கையில்லை. தேசிய மக்கள் சக்தியால் அதைச் செய்யமுடியும்" பதிலளித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவத்தை அவரிடம் கொடுக்கவேண்டும் என்று பல அரசி யல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவிக்கின்ற அளவுக்கு ஒரு மதிப்பைப் பெற்றவராக கலாநிதி அமரசூரிய விளங்குகிறார். அவரின் கருத்துக்கு ஒரு கனதி இருக்கிறது என்று நம்பமுடியும்.என்றாலும் ஜே.வி.பி.யின் தலைவர்களிடம் இருந்து இது விடயத் தில் உறுதியான கருத்து வெளிப் படுவதே கூடுதல் நம்பிக்கையை தரும்.

ஜே.வி.பி.யின் தலைவர் அநுரா குமார திசாநாயக்க மாகாணசபை முறையை தாங்கள் எதிர்க்கப்போவதில்லை என்றும் ஆனால் அரசியல் தீர்வு என்ற பெயரில் தமிழ் பிரதிநிதிகளை பேச்சுவார்த்தை மேசைக்கு அழைத்து ஏமாற்ற முயற்சிக்கும் ஜனாதிபதி விக்கிரமசிங்கவின் சதிவலையில் தமிழ் மக்கள் ஏமாறக்கூடாது என்றும் கூறியி ருக்கிறார். ஆனால், 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பில் அவரிடமிருந்து உறுதியான கருத்து வெளிவந்ததாக இல்லை.

கடந்த நூற்றாண்டின் பின் அரைக்கூறில் இரு ஆயுதக் கிளர்ச்சிகளை முன்னெடுத்த ஜே.வி.பி. மார்க்சிய -- லெனினிச கொள்கைகளைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்கின்ற போதிலும், சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் முற்போக்கான கொள்கையை ஒருபோதும் கொண்டிருக்கவில்லை என்று ஒரு வரலாறு இருக்கிறது.

இனப்பிரச்சினைக்கு தீர்வாக 1957 ஆம் ஆண்டில் பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபோது ஜே.வி.பி. இருக்கவில்லை. ஆனால் 1965 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தத்தை எதிர்த்து கொழும்பில் சிறிலங்கா சுதந்திர கட்சியும் இடதுசாரிக் கட்சிகளும் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் ஜே.வி.பி.யின் தாபக தலைவர் ரோஹண விஜேவீர கலந்து கொண்டார்.

அப்போது என்.சண்முகதாசன் தலைமையிலான சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் இளைஞர் கழகத்தின் முக்கியமான ஒரு தலைவராக இருந்த விஜேவீர இன வாத நோக்கில் நடத்தப்பட்ட அந்த ஆர்ப்பாட்டத்தில் அதன் உறுப்பினர் எவரும் பங்கேற்கக்கூடாது என்று கட்சி எடுத்த முடிவையும் மீறி பங்கேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

1971 ஏப்ரில் கிளர்ச்சிக்கு பிறகு சிறிமா அரசாங்கத்தினால் சிறையில் அடைக்கப்பட்ட ஜே.வி.பி. தலைவர்களையும் உறுப்பினர்களையும் 1977 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்தன அரசாங்கம் விடுதலை செய்தது. அதற்கு பிறகு ஜனநாயக அரசியலில் இறங்கிய போதிலும் ஜே.விபி. இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசாங்கங்கள் முன்னெடுத்த எந்தவொரு முயற்சியையும் ஆதரிக்கவில்லை.

1987 ஜூலையில் ஜெயவர்தனவும் இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியும் இந்திய -- இலங்கை சமாதான உடன்படிக்கையைச் செய்துகொண்டபோது ஜே.வி.பி. தலைமறைவு இயக்கமாக செயற்பட்டபோதிலும், நாட்டில் இரத்தக்களரியை ஏற்படுத்தியது. "இந்திய விஸ்தரிப்புவாதத்துக்கு" எதிராக தீவிரமாக பிரசாரம் செய்த அவர்கள் இந்தியப் பொருட்களைப் பகிஷ்கரிக்குமாறு மக்களைக் கேட்டுக்கொண்டதுடன் சமாதான உடன்படிக்கையை ஆதரித்த சிங்கள அரசியல்வாதிகள் பலரை படுகொலை செய்தனர்.

13 வது திருத்தத்தின் மூலமாக அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபைகளை எதிர்த்த ஜே.வி.பி. அவற்றை நாட்டுப் பிரிவினையை நோக்கிய ஒரு அடியெடுத்து வைப்பு என்று வர்ணித்தது. கிளர்ச்சியை பிரேமதாச அரசாங்கம் கொடூரமான முறையில் ஒடுக்கியது.1989 நவம்பரில் தலைவர் விஜேவீர கொல்லப்பட்டார்.

அதையடுத்து ஒரு ஐந்து வருடங்கள் உறங்குநிலையில் இருந்த ஜே.வி.பி.யினர் 1994 பிற்பகுதியில் தொடங்கி ஜனநாயக அரசியலுக்கு வந்தனர். ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் மாகாணசபைகள் உட்பட சகல தேர்தல்களிலும் அவர்கள் போட்டியிட்டார்கள்.

பிரதமர் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் விடுதலை புலிகளுடன் போர்நிறுத்த உடன்படிக்கையைச் செய்துகொண்டு நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுத்த சமாதான முயற்சிகளுக்கு எதிரான போராட்டத்தில் ஜே.வி.பி. முன்னரங்கத்தில் நின்றது. பிறகு சந்திரிகா அரசாங்கத்துடன் அரசியல் கூட்டணியொன்றை ஏற்படுத்திக்கொண்ட ஜே.வி.பி.யின் தலைவர்கள் அமைச்சர் பதவிகளையும் ஏற்றுக் கொண்டார்கள். ஆனால் 2004 சுனாமியினால் வடக்கு - கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களின் புனர்வாழ்வு ஏற்பாடுகள் குறித்து விடுதலை புலிகளுடன் முன்னெடுக்கப்பட்ட பேச்சுவார்த்தையை அடுத்து அவர்கள் அரசாங் கத்தில் இருந்து வெளியேறினார்கள்.

2005 நவம்பர் ஜனாதிபதி தேர்தலில் நோர்வே அனுசரணையுடனான சமாதான முயற்சிகளுக்கு எதிரான நிலைப்பாட்டை பிரதான பிரசாரமாக முன்னிறுத்தி போட்டியிட்ட மகிந்த ராஜபக்சவை ஆதரித்த ஜே.வி.பி.

(18ஆம் பக்கம் பார்க்க)

# சர்ச்சைக்குரிய 13ஆவது திருத்தம் என்பது மாகாண சபை முறைமைக்கும் அப்பால் நாட்டின் பாதுகாப்புக்கான உத்தரவாதம்!

பனங்காட்டான்

இலங்கை அரசியலை மையப்படுத்தி, உள்நாட்டில் பல காரியங்கள் இப்போது இடம்பெறுகின்றன. இவை ஓரளவுக்கு எதிர்பார்க்கப்பட்டவையும்கூட.

வெளிநாடுகளிலும் சில விடயங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இவற்றில் முக்கியமானதாக ஐக்கிய நாடுகள் மன்றில் இலங்கை மீது மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை அங்கத்துவ நாடுகள் பட்டியலிட்டு வலியுறுத்தி வருகின்றன.

இந்தியா தனது பங்குக்கு 13ஆம் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும், மாகாண சபைகளுக்கான தேர்தல்களை தாமதமின்றி நடத்த வேண்டுமெனவும் இங்கு கோரியுள்ளது.

அடுத்த மாதம் 9ஆம் திகதி நடைபெற வேண்டிய உள்ளூராட்சித் தேர்தல், நிச்சயமாக இடம்பெறுமா காத்துக்கிடக்கிறது. இந்த விண்ணாணத்தில் 75வது ஆண்டு நிறைவு நூறாண்டை நோக்கிப் பயணிப்பதாக ரணில் பிரகடனம் செய்துள்ளார். அதனாற்தான் போலும் அடுத்த 20 ஆண்டுகளுக்கு ரணிலே ஜனாதிபதி என்று அவரது சகாக்கள் உரக்கக் கூவுகின்றனர்.

மகிந்தவின் இரண்டு ஜனாதிபதி ஆட்சிக்காலம், சகோதரர்களும் பிள்ளைகளும் மந்திரிகள், பசில் அரசியல் மூளைசாலி - பின்னர் கோதா ஜனாதிபதி... அடுத்தது நாமல் ராஜபக்ச என்று, அடுத்த இருபது ஆண்டுகளுக்கு ராஜபக்ச குடும்ப ஆட்சி என்று கடந்த ஆண்டு ஆரம்பத்தில் பெரமுனக்காரர் மேளமடித்து குரல் கொடுத்தது காதுக்குள் இன்னும் ரீங்காரம் இடுகிறது. மொட்டின் மெட்டு இப்போது யானையின் பக்கத்துக்கு மாறியுள்ளது.







என்பதை அதற்கு முதல்நாளான 8ஆம் திகதிவரை உறுதிபடச் சொல்ல முடியாத நிலைமையில், மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவது எவ்வாறு சாத்தியப்படுமென்று கேட்கத் தோன்றுகிறது.

உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியாகிவிட்டதால் தேர்தல் உற்சாகம் கரைபுரண்டு ஓடுகிறது. முக்கியமாக, தமிழர் தாயகத்தில் 'தூள் பறக்கும்' மேடைப்பேச்சுகளும் நீயா நானா ஜனநாயகவாதி என்ற சவால்களும், 'அன்பான வாக்காள' பெருமக்களுக்கு சில நாட்களுக்கு ரசிக்கவும் சுவைக்கவும் நல்ல தீனி கிடைத்துள்ளது. ஆரம்பமே இப்படியென்றால் அடுத்த முப்பது நாட்களும் குத்துவெட்டுகள், திடீர் தாக்குதல்கள், மாயமாற்றங்கள் மட்டுமன்றி சிலவேளை மறைமுக கொடுக்கல் வாங்கல்களும் (தமிழ்நாடுப் பாணியில்) இடம்பெறக்கூடும்.

இதற்கான நிதியை அள்ளிக்கொடுக்க சில வெளிநாடு (புலம்பெயர்) அமைப்புகள் தயாராகியுள்ளன. இதற்கெனவே வருடாந்த விருந்துகள், புதுவருட விருந்துகள், பொங்கல் விருந்துகள் என டிக்கட்டுகளுக்கு கொண்டாட்டங்களை நடத்தி வசூல் நடைபெறுவது நன்றாகத் தெரிகிறது. முன்னைய தேர்தல் காலங்களில் நடைபெற்றதன் தொடர்கதைதான்.

ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க இப்போது புது உருவம் எடுத்து, "நான் சொன்னால் சொன்னதுதான்" என்ற பாணியில் தம்மைக் காட்சிப்படுத்த முனைப்புடன் செயற்படுகிறார். வடக்கே படையினர் வசமிருந்த தமிழர் காணிகளில் சில அடையாளமாக மீளளிக்கப்பட்டுள்ளன. அரசாங்க மற்றும் படைத்தரப்பினருடன் தமிழரசுக் கட்சியின் சில பிரமுகர்களும் இந்நிகழ்வில் பங்கேற்று, மேடையில் அமர்ந்து வரலாற்றுக்குப் பதிவு செய்துள்ளனர்.

சிறையிலிருந்த இரண்டு தமிழ்க் கைதிகள் இன்னோர் அடையாளமாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர். சின்னத்திரை நாடகங்களின் பாணியில், 'இது தொடரும்' என்று ஆட்சித்தரப்பால் அறிவிக்கப்பட்டு வருகிறது.

வாராது வந்த வாய்ப்பை தவறவிடக்கூடாது என்பதற்காக, 45 வருட அரசியலில் முதன்முறையாகக் கிடைத்த ஜனாதிபதி பதவியை அரிய சந்தர்ப்பமாக்கி, சுதந்திர தினக்(?) கொண்டாட்டத்தை ரணில் பயன்படுத்துகிறார். நாடு வங்குரோத்து நிலையிலிருந்தாலும், ஒவ்வொரு நாட்டிடமும் பிச்சா பாத்திரம் ஏந்தினாலும், இந்தக் கொண்டாட்டத்தை நடத்தாவிட்டால் சர்வதேசம் ஏளனமாகப் பார்க்கும் என்பதாகச் சொல்லி பல கோடி ரூபாவில் படையினரை வீதியுலாக் காட்டும் இந்த நிகழ்வு தேவைதானா என்று பலரும் கேட்கின்றனர்.

எதிர்பார்க்கும் சர்வதேச நிதியுதவி நிச்சயம் என்று அமெரிக்கா கூறிவிட்டது. 'நான் உங்கள் தோழன்' என்று இந்தியா அபயக்கரம் நீட்ட, 'நான் உன்னுடன் தான்' என்று சீனா கட்டியணைக்க - இவை இரண்டும் போதாதென்றால் காசு அடிக்கும் இயந்திரம்

இவை ஒருபுறமிருக்க, ரணிலின் 'தனிநல்லாட்சி' எப்படிப் போகிறது? 13 என்பது இவருக்கும் ஒரு கண்டமாகி வருவது போலவே தெரிகிறது.

1987ம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் ராஜிவ் காந்தியும் செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அறுவடையே 13வது திருத்தம். இரு நாடுகளுக்கிடையிலான சட்டபூர்வமான இந்த ஒப்பந்தத்தை எந்தத் தரப்பும் இலகுவாக ரத்துச் செய்ய முடியாது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்தான அந்த வேளையிலேயே கணிசமான எதிர்ப்பும் உருவானது. தமிழீழ விடுதலைப் புலிகள் இதனை மனதாரவும் இலட்சியக் கொள்கை ரீதியாகவும் ஏற்கவில்லையென்பது அடிப்படையில் முக்கியமானது.

சிங்களத் தரப்பைப் பொறுத்தளவில் அன்றைய

**1987அன் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் வழியாக அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13ஆம் திருத்தம், மாகாண சபை முறைமைக்கு மட்டுமானதல்ல. ராஜிதவும் - ஜே.ஆரும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர், இணைப்பு ஆவணம் என்ற பெயரில் ஒன்றை பரிமாறிக் கொண்டனர். இதில் இலங்கையின் பாதுகாப்பையும், வெளிநாட்டு சக்திகளிலிருந்து இலங்கையை காப்பாற்றுவதையும் இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது என்பது மூலவாசகம். இப்போது 13ஆம் திருத்த நடைமுறையை எதிர்ப்பவர்கள் அந்த இணைப்பு ஆவணத்தை ஒரு தடவை படித்துப் பார்ப்பது நல்லது.**

பிரதமர் பிரேமதாசவும், தேசிய பாதுகாப்பு அமைச்சராகவிருந்த லலித் அத்துலத்முதலியும் பகிரங்கமாக எதிர்த்தனர். ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தமது பதவியை ராஜினாமா செய்தார். ராஜிவ்காந்தியை கொழும்பு அணிவகுப்பில் கொலை செய்யும் முயற்சியும் இடம்பெற்றது.

ஜே.வி.பி.யினர் நாடு தழுவிய ரீதியில் பல ஆர்ப்பாட்டங்களையும் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். இந்திய கர்ப்பூரம், திருநீறு, சந்தனம், வேட்டி-சால்வை விற்றவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். தமிழர் வணிக நிறுவனங்கள் பல நிர்மூலமாக்கப்பட்டன.

13ம் திருத்தம் நாட்டின் பூர்வீக குடிகளான தமிழருக்கு தனியாட்சியை - தனிநாட்டை கொடுக்குமென சிங்கள தேசத்தில் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. அப்போதைய ஜே.வி.பி.யினர் கைது, கொலை என்பவற்றையும் சந்தித்தனர். இன்றைய ஜே.வி.பி. திடீரென 13ஆம் திருத்தம் மாகாண சபை முறைமையை ஆதரிப்பாக அறிவித்திருப்பது அதிர்ச்சி வைத்தியமாகக் காணப்படுகிறது.

13ம் திருத்தத்தின் முக்கிய அம்சங்கள் இரண்டு. அதிலொன்றுதான் மாகாண சபை முறைமை. இலங்கையில் மாகாண சபைகளை உருவாக்கவென 42ம் இலக்கச் சட்டம் 1987 நவம்பர் 14ம் திகதி நாடாளுமன்றத்தல் நிறைவேற்றப்பட்டது. வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபை 1988 இறுதியில் உருவானதாயினும், ஒன்றரை வருடத்தில் அகால மரணமானது. வடக்குக்கான தனி மாகாண சபைத் தேர்தல் 2013ல் நடைபெற்று, அதன் முதலாவது ஆட்சிக்கால முடிவில் அது இயற்கை எய்தியது.

தமிழருக்கென உருவாக்கப்பட்ட வடக்கு கிழக்குக்கான மாகாண சபைகளின் அழிக்க முடியாத தடங்கள் இவை. இப்போது இனப்பிரச்சனைக்கு தீர்வு காணவென ரணில் கூட்டிய கட்சித் தலைவர்களின் மாநாட்டில், "13ம் திருத்தத்தை 'முழுமையாக' நடைமுறைப்படுத்துவேன்" என்று அவர் அறிவித்ததன் விளைவே இன்றைய களேபரத்துக்கான மூலகாரணம்.

இலங்கையின் ஒன்பது மாகாணங்களிலும் நிறுவப்பட்ட மாகாண சபை நிர்வாகம் கடந்த ஐந்தாண்டுகளுக்கு மேலாக அரச தரப்பின் பின்கதவு ஏஜன்டுகளான ஆளுனர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இதனை தேர்தல் மூலம் மீள நிறுவி முழுமையான அதிகாரங்களுடன் அதனை நடைமுறைப்படுத்தப் போவது என்பதே ரணிலின் அறிவிப்பு. 'முழுமையாக' என்பதானது, மாகாண சபைகள் சட்டத்தின் கீழான காணி மற்றும் காவற்துறை அதிகாரங்களை அவற்றுக்கு வழங்குவது என்பதாகும்.

1988ம் ஆண்டிலிருந்து இதுநாள்வரை மாகாண சபைகள் இயங்கி வருகின்றனவாயினும், அவற்றுக்கு சட்டத்துக்கு உட்பட்ட காணி மற்றும் காவற்துறை அதிகாரங்கள் வழங்கப்படவில்லையென்பதை இதனூடாக விளங்கிக் கொள்ளலாம்.

1987ல் இலங்கை இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்ட வேளையிலும், 13வது திருத்தம் நாடாளுமன்றதில் நிறைவேற்றப்பட்ட போதும் அந்த அரசாங்கத்தின் ஓர் உறுப்பினராகவும் அமைச்சராகவும் - அன்றைய ஜனாதிபதி ஜே.ஆரின் பெறாமகன் (சொந்த மச்சாளின் மகன்) என்ற வகையிலும் மாகாண சபைகளுக்கு முழுமையான அதிகாரங்களை வழங்க வேண்டுமென்ற தார்மிக கடமையும் உரிமையும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு.

இந்தப் பின்னணியில், இதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமென ரணில் உண்மையாகவே எண்ணுகிறாரா, அல்லது இதனைப் பகிரங்கமாகக் கூறி சிங்களத் தரப்பின் எதிர்ப்பை லாபமாக்கி இதற்கு முடிவுகட்ட விரும்புகிறாரா என்பது அவருக்கு மட்டும்தான் தெரியும். கிழட்டு நரியை குள்ள நரி விஞ்சுமா?

இச்சந்தர்ப்பத்தில்தான் எதிர்பார்த்தவாறு பூதங்கள் குகைக்குள்ளிருந்து வெளியே வருகின்றன. தமிழருக்கு காணி, காவற்துறை அதிகாரங்கள் வழங்க அனுமதிக்க மாட்டோமென விமல் வீரவன்ச - உதய கம்மன்பில கூத்தாடிகள் தங்கள் எதிர்ப்பை சூளுரைக்க ஆரம்பித்துள்ளனர். கோதாவை வீட்டுக்கு அனுப்பியதுபோல ரணிலையும் அனுப்புவது இலகுவென இவர்கள் எண்ணுகிறார்கள்.

கடற்படையின் முன்னாள் அட்மிரலான சரத் வீரசேகர முழுமூச்சுடன் ரணிலை எதிர்க்க ஆரம்பித்துள்ளார். கோதபாய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட போது தமக்கு ஆதரவாக 'வியத்மக' (அறிவாளிகள் குழு) என்ற பெயரில் தனிச்சிங்கள அணியொன்றை உருவாக்கினார். கடந்த பொதுத்தேர்தலில் இந்த அணியைச் சார்ந்த எட்டுப் பேர் வெற்றி பெற்றனர்.

கப்டன் கொத்தலாவலை என்ற ராணுவ அதிகாரி யாழ்ப்பாணத்தில் கடமையாற்றியபோது விடுதலைப் புலிகளின் தளபதியாகவிருந்த கிட்டுவுடன் தொடர்பு கொண்டு கைதிகள் பரிமாற்றம் இடம்பெற்ற வேளையில் யாழ்ப்பாணக் குடாநாட்டின் ராணுவத் தளபதியாகவிருந்தவர் மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர. ராணுவத் தளபதியாகவிருந்த கொப்பேகடுவவின் படுகொலை, ஜே.வி.பி.யினரின் படுகொலைகள் ஆகியவற்றில் சம்பந்தப்பட்டவரென பெயரிடப்பட்ட ஆனந்த வீரசேகர, ராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் பௌத்த பிக்குவாக மாறி, அம்பாறையில் புத்தங்கல ஆனந்த தேரோவாக பெயர்சூடி, 2021ல் மரணமானார். இவரது இளைய சகோதரரே இந்த சரத் வீரசேகர என்பது இங்கு தவறாது குறிப்பிட வேண்டிய தகவல்.

சில தினங்களுக்கு முன்னர் கண்டிக்கு மகாநாயக்க தேரர்களிடம் ஆசி பெறச் சென்றார் ரணில். அங்கு அவர்களால் இவரிடம் ஒரு கடிதம் கையளிக்கப்பட்டது.

(10ஆம் பக்கம் பார்க்க)

# 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதிக்கு அதிகாரமில்லையா?



கந்தையா அருந்தவபாலன்

அண்மைமையில் இடம்பெற்ற பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் கட்சித்தலைவர்களுடனான சந்திப்பின் போதும் தமிழ்க்கட்சிகளுடனான தனியான சந்திப்பின் போதும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெயசங்கருடனான சந்திப்பின் போதும் இறுதியாக அமெரிக்காவின் அரசியல் விவகாரங்களுக்கான துணை இராஜாங்கச் செயலர் விக்ரோறியா நூலண்டுடனான சந்திப்பின் போதும் இலங்கை அரசியலமைப்பின் 13ஆவது சேர்க்கையிலுள்ள முழு விடயங்களையும் நடைமுறைப் படுத்தப் போவதாக அதாவது மாகாண சபைகளுக்கு அரசியலமைப்பில் வழங்கப் பட்ட முழு அதிகாரங்களையும் வழங்கப்போவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா வெளிப்படுத்தியிருந்தார்.

13ஐ முழுமையாக உண்மையில் நடைமுறைப்படுத்துவாரா என்ற ஐயம் அவரின் கடந்தகால செயற்பாடுகளை நன்கறிந்த தமிழர்தரப்பிடம் காணப் படும் அதேவேளை அவரது குறிப்பிட்ட வெளிப்படுத்தலுக்கு எதிராக தென்னிலங்கைப் பேரினவாதத் தரப்புகள் வழமைபோலவே களத்தில் வேகமாக இறங்கியுள்ளதையும் காணமுடிகிறது. ஒருபுறத்தில் பௌத்தபீடங்களின் மகாநாயக்கர்களும் மறுபுறத்தில் விமல் வீரவன்ச, சரத் வீரசேகர, அமரசேகர போன்ற இனவாதிகளும் வெளிப்படையாக எதிரக்கும் அதேவேளை பிரதமர் தினேஸ் குணவர்த்தனா போன்ற பொது ஜன பெரமுனவின் இனவாத உறுப்பினர்கள் சூழ்நிலைக் கைதிகளாகி மௌனங் காக்க, சஜித் தரப்பினர் பட்டும் படாமல் நழுவல் கதைகளை தெரிவித்து வருவதையும் காணமுடிகிறது. அதேவேளை இது வரைகாலமும் மாகாணசபை முறைமையை எதிர்த்து வந்த ஜே.வி.பி கட்சியின் தற்போதைய தலைவர் அனுரகுமார திசநாயக்க அதைத் தாம் எதிர்க்க மாட்டோம் எனத் தெரிவித்துள்ளார். அவர் தற்போது நடைமுறையிலுள்ளதைக் கருதிச் சொன்னாரா அல்லது 13ஐ முழுமையாகக் கருதிச் சொன்னாரா அல்லது ஏனைய அரசியல்வாதிகளைப் போல தேர்தலைக் கருதிச் சொன்னாரா என்பது வருங்காலத்தில்தான் தெரிய வரும். மேலும்அரசியல் தீர்வு தொடர்பான ரணிலின் முன்னெடுப்புகளை நம்பி ஏமாறவேண்டாம் எனக் கோரஸ் பாடும் எதிர்கட்சிகள் எவையும் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான தங்களது முன்மொழிவுகள் எவையென இதுவரைக்கும் வெளிப்படுத்தவில்லை என்பது கருத்திற் கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறான களநிலைமைகளில் எதிர்க் கட்சிகளின் தலைவர்கள் எல்லோராலும் முன்வைக்கப்படும் ஒருவிடயம் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு தற்போதைய ஜனாதிபதிக்கு அதிகாரம் இல்லை என்பதாகும். அதற்கு அவர்கள் கூறும் காரணம் ரணில் மக்களால் தெரிவுசெய்யப்படாத ஜனாதிபதி என்பதாகும். அதாவது மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதி ஒருவருக்கு இதுபோன்றவற்றுக்கான அதிகாரம் கிடையாது என்பதாகும். இவ்வாறு கூறுபவர்களில் கடந்தகால அரசாங்கங்களில் முக்கிய அமைச்சுப் பதவிகளை வகித்தவரும் அரசியல் தீர்வு தொடர்பான பல்வேறு பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டவருமான அரசியல் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் முக்கியமானவராக உள்ளார். இவ்வாறு கூறும் பீரிஸ் அரசியலுக்கு வந்த காலம் தொடக்கம் இன்றுவரை மக்களால்தெரிவுசெய்யப் படாது தேசியப் பட்டியல் மூலம ான நியமன உறுப்பினராகவே இருந்து வருகிறார் என்பதை அவர் மறந்திருக்க மாட்டார்.



எவ்வாறாயினும் இவர்களால் முன்வைக்கப்படும் “மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை” என்ற வாதம் எவ்வளவு தூரம் சரியானது அல்லது உண்மையானது என்பது ஆராயப்படவேண்டிய ஒரு விடயமாகும். அதாவது மக்களால் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதிக்குரிய அதிகாரத்துக்கும் பாராளுமன்றினால் தெரிவுசெய்யப்படும் ஜனாதிபதியின் அதிகாரத்துக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளனவா என்பதாகும். இலங்கை அரசியலமைப்பின் எந்தவொரு உறுப்புரையிலும் இவ்வாறான அதிகார வேறுபடுத்தல்கள் காணப்படவில்லை.

இலங்கை அரசியல் அமைப்பின் ஏழாம் அத்தியாயத்தில் ஜனாதிபதி ஒருவரைத் தேரந்தெடுக்கும்முறையும் அவரது அதிகாரமும் பணிகளும் தொடர்பாக கூறப்பட்டுள்ளன. அதில் தெரிவு செய்வதற்கான இரு வழிமுறைகள் சொல்லப்பட்டுள்ளன.

உறுப்புரை 30(2) பின்வருமாறு கூறுகிறது.

“குடியரசின் ஜனாதிபதி மக்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்பதுடன் அவர் ஐந்து ஆண்டுகள்கொண்ட தொரு தவணைக்குப் பதவி வகித்தலும் வேண்டும்”

அதேவேளை உறுப்புரை 40(1)இன் பிரிவுகளில்

“ஜனாதிபதி ஒருவரின் பதவி அவரது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன் வறிதானால் பாராளுமன்றம் அதன் உறுப்பினர்களிலிருந்து ஒரு மாதத்திற் குள் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதுடன் அவ்வாறு தெரிவு செய்யப்படுபவர் எஞ்சிய காலத் திற்கு பதவியிலிருக்க முடியும்” எனக்கூறப்பட்டுள்ளது.

இதன்மூலம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனாதிபதியின் பதவி ஏதோவொரு காரணத்தால் வறிதாகும் போது அப்பதவிக்குத் தெரிவாகும் ஜனாதிபதி அப்பதவிக்குரிய சகல அதிகாரங்களையும் கொண்டிருப்பார் என்பது அரசியலமைப்பினால் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது. இவ்வடிப்படை யில் அவ்வதிகாரங்களைக் கொண்டு ஜனாதிபதி தன்பணிகளைச் செய்வதில் எந்தத் தடையுமில்லை. தற்போதைய

**உண்மையில் ஒரு நாட்டினுடைய அரசியல்அமைப்பில் கூறப்படும் விடயங்களை நடைமுறைப்படுத்தாதிருத்தல் அல்லது நடைமுறைப் படுத்துவதைத் தடுத்தல் போன்றனவே சட்டத்துக்கு முரணான விடயங்களாகும்.**

ஜனாதிபதி போலவே முன்னரும் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் படுகொலையையடுத்து டிங்கிரி பண்டா விஜேதுங்கவை பாராளுமன்றம் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்திருந்தது டன் அவர் குறித்த பதவிக்காலம் முடியும் வரைக்கும் பதவியில் இருந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. அரசியலமைப்பிலுள்ள ஏனைய விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரமுள்ள ஒரு ஜனாதிபதிக்கு 13ஐ நடைமுறைப் படுத்தவதற்கு மட்டும் அதிகாரம் இல்லை எனக்கூறுவது தர்க்கரீதியாகக் கூட ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒன்றல்ல. எனவே ஜி.எல்.பீரிஸ் போன்ற எதிர்த் தரப்பினரின் வாதம் என்பது வெறும் அரசியல் ரீதியானதேயன்றி சட்டரீதியானதொன்றல்ல.

உண்மையில் ஒரு நாட்டினுடைய அரசியல்அமைப்பில் கூறப்படும் விடயங்களை நடைமுறைப்படுத்தாதிருத்தல் அல்லது நடைமுறைப்படுத்துவதைத் தடுத்தல் போன்றனவே சட்டத்துக்கு முரணான விடயங்களாகும். நாட்டின் ஜனாதிபதி, பிரதமர், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஏனைய சபைகளின் உறுப்பினர்கள் மட்டுமல்ல அரச பணியாளர்கள் கூட அரசியலமைப்பைப் போற்றிப் பாதுகாப்பேன் என உறுதி செய்த பின்னரே அப்பதவியை முறைப்படி ஏற்றுக்கொள்ள முடியும். அரசியலமைப்பின் அத்தியாயம் பத்தின் உறுப்புரை 63 இல் இது சுட்டிக் காட்டப் பட்டுள்ளது. இவ்வடிப்படையில் அரசியலமைப்பைப் போற்றிப் பாதுகாப்போம் என உறுதிசெய்த ஜனாதிபதி, பிரதமர், பாராளுமன்ற உறுப்பினர்கள் அதனை நடைமுறைப் படுத்தாது இருப்பது அல்லது அதற்கு முரணாகச் செயற்படுவது எல்லாமே சட்டத்தை மீறிய செயற்பாடுகளாகும். உதாரணமாக அரசியலமைப்பின் ஆறாவது சேர்க்கைக்கு அமைய உறுப்புரை 157(அ) இல் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கு எதிராக தனியரசு ஒன்றை உருவாக்கும் நோக்கிலான பேச்சு உட்பட அனைத்து வகையான செயற்பாடுகளும் தண்டனைக்குரிய குற்றங்களாகக் கூறப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்ட முடியும். அரசியலமைப்பின் ஆறாவது சேர்க்கையின் உறுப்புரைகளை மீறுவது தண்டனைக்குரிய குற்றமெனில் 13 ஐ நடைமுறைப்படுத்துவதற்கு எதிரான செயற்பாடுகளும் தண்டனைக்குரிய குற்றமாகவே கொள்ளப்படவேண்டும்.

இவ்வகையில் அரசியலமைப்புக்கான 13ஆவது இணைப்பிலுள்ள விடயங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவது ஜனாதிபதியின் கடமை மட்டுமன்றி அரசியலைப்பைப் போற்றிப் பாதுகாப்போம் என உறுதியெடுத்த அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களின் கடமையுமாகும். அத்துடன் அதற்கெதிரான செயற்பாடுகள் அனைத்தும் சட்டமீறலாகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கவேண்டியதும் அவர்களது கடமையாகும். ஆனால் நமது நாட்டில் இது நடப்பதற்கான சாத்தியம் இல்லை. ஏனெனில் இங்கு அரசியலமைப்பும் ஏனைய சட்டங்களும் ஆட்சியாளர்களதும் பௌத்த சிங்களவர்களதும் நலன்சார்ந்து அணுகப்படுவதால் அரசியலமைப்பினால் ஏனைய தேசிய இனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஒருசில உரிமைகளும் பெயரளவிலேயே இது வரை இருந்து வந்துள்ளன.

# சர்ச்சைக்குரிய 13ஆவது திருத்தம் என்பது…

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

“13ம் திருத்தத்தை எக்காரணம் கொண்டும் முழுமையாக அமல்படுத்தக்கூடாது” என்பது இக்கடிதத்தின் அச்சாரம்.

சிங்கள இனவாதிகள், கோதபாயவின் அறிவாளிகள், பௌத்த மகாசங்கங்கள் அனைத்தும் தனித்தனியாக 13ம் திருத்தத்தை முழுமையாக அமல்செய்யக்கூடா தென ஆரம்பித்துவிட்டன. இவர்கள் கூட்டாக களத்தில் குதிக்க வேண்டியதுதான் மிச்சம்.

ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்படும் 13ம் திருத்தத்தை இவர்கள் எதிர்க்கவில்லை. மாகாண சபை முறைமையையும் இவர்கள் எதிர்க்கவில்லை. காணி மற்றும் காவற்துறை அதிகாரங்களையே எதிர்க்கின்றனர். இதனை வழங்குவதால் தமிழருக்கு தனிநாடு கிடைத்துவிடுமாம்!

இவ்வாறு கூச்சல் போடுபவர்களுக்கு முக்கியமான விடயமொன்றை நினைவுபடுத்த வேண்டும். 13ம் திருத்தம் என்பது அரசியல் அமைப்பில் இடம்பெற்றுள்ள ஒன்று. இது நிறைவேற்றப்பட்ட பின்னர் இது வரை - எட்டுத் திருத்தங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஆக, மொத்தம் 21 திருத்தங்கள் இலங்கையின் அரசயிலமைப்பில் இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு சட்டரீதியாக அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள இத்திருத்தம் 1987ன் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் வழியாக ஏற்படுத்தப்பட்டது. இரு நாட்டுத் தலைவர்களும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின்னர், இணைப்பு ஆவணம் என்று சொல்கின்ற ஒன்றை பரிமாறிக் கொண்டனர். இலங்கையின் பாதுகாப்பையும், வெளிநாட்டு சக்திகளிலிருந்து இலங்கையை காப்பாற்றுவதையும் இந்தியா ஏற்றுக் கொண்டுள்ளது என்பது இந்த ஆவணத்தின் மூலவாசகம்.

13ம் திருத்தத்தையும் மாகாண சபை முறைமையையும் மறுப்பவர்கள் நாடாளுமன்றத்தில் புதிதாக 22ம் இலக்க திருத்தத்தை கொண்டு வந்து நிறைவேற்றி 13ஐ நீக்கலாம் என்ற ரணிலின் ஆலோசனையின்படி செயற்பட விரும்புபவர்கள், இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் இணைப்பு ஆவணத்தில் கூறப்பட்டிருக்கும் இலங்கையின் எதிர்காலப் பாதுகாப்பை ஒரு தடவை சிந்திப்பார்களா?



# கண்டுகொள்ளப்படாத ரணிலின் மற்றுமொரு வாக்குறுதி!

## 75ஆவது சுதந்திர தினம் முடிந்தும் தமிழர் பிரச்னைக்கு தீர்வு காணப்படவில்லை!

சுதந்திர இலங்கையின் 75 வருட காலமாக தமிழர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்னைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுக்கும் ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்கவின் காலக்கேடு முடிவடைந்து விட்டது.

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்திற்கு முன்பாக தமிழர் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, நாடாளுமன்றத்தில் கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 23ம் தேதி உறுதி வழங்கியிருந்தார்.

தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் அவர் இந்த உறுதிமொழியை அன்றைய தினம் வழங்கியிருந்தார்.

2023ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட உரையில் ஜனாதிபதி இவ்வாறு உறுதி வழங்கிய நிலையில், வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் அதற்கான பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதாகவும் குறிப்பிட்டார்.

இவ்வாறான நிலையில், வரவு செலவுத்திட்டம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சர்வகட்சி மாநாட்டிற்கு அழைப்பு விடுத்தார்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் வகையில், இந்த சர்வகட்சி மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

பல்வேறு சுற்று பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்ட போதிலும், 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பல்வேறு தரப்பினர் தமது எதிர்ப்புக்களை பதிவு செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுக்கும் வகையிலான இறுதி சர்வகட்சி மாநாடு, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் கடந்த மாதம் 26ம் தேதி நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்துக்கொண்ட பலர், ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு எதிராகவே இருந்தனர்.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், பல கட்சிகளின் தலைவர்கள் மாநாட்டை புறக்கணித்திருந்தனர்.

பிரதான எதிர்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி, தமிழ் முற்போக்கு கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த டொலோ, புளொட் உள்ளிட்ட கட்சிகள் மாநாட்டை புறக்கணித்தனர்.

முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான மஹிந்த ராஜபக்ஸவின் கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுன இந்த மாநாட்டில் கலந்துக்கொண்ட போதிலும், கட்சி சார்பில் பங்குப்பற்றியவர்கள் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த தமது எதிர்ப்புக்களை முன்வைத்தனர்.

மஹிந்த ராஜபக்ஸ ஜனாதிபதியாக இருந்த சந்தர்ப்பத்தில், 13வது திருத்தத்திற்கு அப்பாற் சென்று, 13 பிளஸ் அதிகாரங்களை வழங்குவதாக உறுதி வழங்கிய போதிலும், அவர் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சி உறுப்பினர்கள், 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

நாட்டை பிளவுப்படுத்தும் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது என்ற நிலைப்பாட்டிலேயே தாம் உள்ளதாக மஹிந்த ராஜபக்ஸ தலைமையிலான சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கூறுகின்றார்.

“13வது திருத்தத்தை நடைமுறைப் படுத்துவது குறித்து பேசப்பட்டது. 13வது திருத்தம் நடைமுறைப்படுத்தக் கூடாது என நான் கூறினேன். இது நாட்டை பிளவுப்படுத்தும் என்பதற்காகவே இதுவரை இருந்த எந்தவொரு ஜனாதிபதியும் இதனை நடைமுறைப்படுத்தவில்லை.

இந்த சந்தர்ப்பத்தில் இதனை நடைமுறைப்படுத்தினால், நிச்சயமாக நாடு பிளவுப்படும். அவரும் வரலாற்றில் இணைவார். 13வது திருத்தம் அரசியலமைப்பில் உள்ளமையினால், அதனை அமல்படுத்தும் பொறுப்பு தமக்கு உள்ளதாக ஜனாதிபதி கூறினார். 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த இடமளிக்கக்கூடாது என நிலைப்பாட்டி





லேயே இருக்கின்றோம்” என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர குறிப்பிடுகின்றார்.

இந்த கூட்டத்தில் கலந்துக்கொண்ட இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

“இந்த ஆண்டு பெப்ரவரி 4ஆம் தேதிக்கு முன்னர், அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வை பெற்றுத் தருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதி வழங்கியிருந்தார். எனினும், இதுவரை அவர் எதையும் செய்யவில்லை. அது குறித்து எமது கவலையை வெளியிட்டோம். எனினும், இந்த விடயங்களை தான் நிச்சயமாக செய்வேன் என ஜனாதிபதி மீண்டும் உறுதியளித்தார்.

13வது திருத்தம் அரசியலமைப்பில் இருக்கின்றமையினால், அதனை அமல்படுத்தும் பொறுப்பு நிறைவேற்று அதிகாரத்தை கொண்ட தனக்கு உள்ளதாக அவர் கூறுகின்றார். அதனால், அதனை தான் நிறைவேற்றுவேன் என கூறினார். காணி விடுவிப்பு தொடர்பிலும் விரிவாக தெளிவூட்டினார். இதனை ஒரு நாளில் நடைமுறைக்கு கொண்டு வர முடியும் என நான் கூறினேன். இதனை அமலுக்கு கொண்டு வருவதற்கு அனைத்து ஆவணங்களும் இருக்கின்றமையினால், ஒரு நாள் போதுமானது.:” என எம்.ஏ.சுமந்திரன் குறிப்பிடுகின்றார்.

சுதந்திர தினத்திற்கு முன்பாக தமிழர் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பதாக ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட உறுதிமொழி மீது நம்பிக்கை இல்லை என புளொட், டெலோ போன்ற கட்சிகள் கூறி வந்தன.

அத்துடன், வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் பிரச்சினைகளை அவதானிப்பதை போன்று, மலையக மக்களின் பிரச்சினைகளையும் அவதானிக்க ஜனாதிபதி தவறியுள்ளதாக கூறி, தமிழ் முற்போக்கு கூட்டணி, சர்வகட்சி மாநாட்டை புறக்கணித்திருந்தது.

வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டதன் பின்னர், மலையக தமிழர்கள் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உறுதி வழங்கினார்.

அரசியலமைப்பில் காணப்படுகின்ற 13வது திருத்தத்தை தான் நிச்சயம் நிறைவேற்றுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இறுதியாக நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் உறுதியளித்துள்ளார்.

13வது திருத்தத்தை நடைமுறைப் படுத்தாதிருப்பதற்கு, யாராவது 22வது திருத்தமொன்றை புதிதாக நாடாளுமன்றத்திற்கு கொண்டு வந்து, 13வது திருத்தத்தை இல்லாது செய்ய வேண்டும் என கூறிய ஜனாதிபதி ரணில் விக்மரசிங்க, அவ்வாறன்றி தன்மீது கோபப்படுவதில் எந்தவித பிரயோசனமும் இல்லை என கூறியுள்ளார்.

நான் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர். அந்த வகையில் இருக்கும் சட்டத்தை நான் நடைமுறைப்படுத்துவேன். எமது அரசியலமைப்பில் கடந்த 37 ஆண்டுகளாக 13ஆவது அரசியல் திருத்தம் உள்ளடக்கப்பட்டுள்ளது. நான் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும். நான் அதனை நடைமுறைப்படுத்தாமல் இருக்க வேண்டுமாயின் நாடாளுமன்றத்தில் யாராவது 22ஆவது மறுசீரமைப்பைக் கொண்டு வந்து 13ஆவது திருத்தத்தை இல்லாமல் செய்ய வேண்டும். இங்கு என் மீது சத்தம் போடுவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. எனவே இரண்டில் ஒன்று நடைபெற வேண்டும். 13ஆவது அரசியல் மறுசீரமைப்பை நீக்குங்கள். அல்லது 13ஆவது அரசியலமைப்பை நடைமுறைப்படுத்துங்கள். அதனை இல்லாமல் ஒழிக்காவிட்டால், எமக்கு நடுவில் இருக்க முடியாது. ஒன்றில் அதனை ஒழிக்க வேண்டும் இல்லையேல் அதனை நடைமுறைப் படுத்த வேண்டும். தனிப்பட்ட பிரேரணையொன்றைக் கொண்டு வந்து யாருக்கு வேண்டுமானாலும் அதனை நீக்க முடியும். அதற்கு பெரும்பான்மையானோர் தமது விருப்பத்தை தெரிவிக்காவிட்டால் ஒன்றும் செய்ய முடியாது. அபப்டியாயின், 13ஐ நடைமுறைப்படுத்த நேரிடும். ஆனால் இதனால் நாடு பிளவுபடாது. விசேடமாக 13ஆவது அரசியலமைப்பு மறுசீரமைப்பு தொடர்பில் ஐந்து நீதிபதிகள் அடங்கிய குழுவின் தீர்மானத்துக்கமைய பார்த்தால் நாம் ஒற்றையாட்சியில் இருக்கிறோம். அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு நான் உடன்படுகின்றேன்.” என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார்.

### மகாநாயக்க தேரர்கள் எதிர்ப்பு

அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை எந்த வகையிலும் அமல்படுத்தக்கூடாது என மூன்று பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு அறிவித்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே மகாநாயக்க தேரர்கள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டின் சுயாதீனம், ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாரிய பிரச்சினைகளை தோற்றுவிக்கும் 13வது திருத்தத்தை நடைமுறைப்படுத்தக் கூடாது என அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்த கருத்து, நாட்டில் சிக்கல் நிலைமையை ஏற்படுத்தியுள்ளதாகவும் மகாநாயக்க தேரர்கள் கூறுகின்றனர்

போலீஸ் அதிகாரங்கள், காணி, புராதன வரலாற்று சின்னங்கள், மத அமைப்புக்களை ஒழுங்குப்படுத்தும் அதிகாரம் ஆகியவற்றை மாகாண சபைகளுக்கு வழங்குவதன் ஊடாக, நாட்டில் பிரிவினைவாதம் ஏற்படுத்தப்படும் சந்தர்ப்பம் உருவாகும் எனவும் மூன்று பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் குறிப்பிடுகின்றனர்.

நாடு எதிர்நோக்கும் பாதகமான நிலைமைகளை கருத்திற் கொண்டு, இதுவரை காலம் ஜனாதிபதிகளாக பதவி வகித்தவர்கள் அரசியலமைப்பின் 13வது திருத்தத்தை முழுமையாக அமல்படுத்த தவிர்த்துக்கொண்டதாகவும் மகாநாயக்க தேரர்கள் கூறுகின்றனர்.

மத்திய அரசாங்கத்தின் இறையான்மையை சீர்குலைக்கும் இத்தகைய அரசியலமைப்பு திருத்தத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையானது, மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்துவதற்கான காரணமாக அமையும் எனவும் மகாநாயக்க தேரர்கள் குறிப்பிடுகின்றனர்.

பொருளாதார நெருக்கடியினால் பிராந்திய மற்றும் உலக வல்லரசுகளின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதற்கு சில நிபந்தனைகளுக்கு இணங்குமாறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும், நாட்டின் ஒருமைப்பாடு, சுயாதீனத்தன்மையை இல்லாது செய்யும் இவ்வாறான நடவடிக்கைகளை நிராகரிக்க வேண்டும் என மகாநாயக்க தேரர்கள், ஜனாதிபதிக்கு கூறியுள்ளனர்.

மகாநாயக்க தேரரை ஜனாதிபதி அண்மையில் சந்தித்தார். 13ஐ அமல்படுத்துவதன் ஊடாக எந்த பிரச்சினையும் இல்லை என மகாநாயக்க தேரர்களுக்கு அவர் தெளிவூட்டியுள்ளார். தேசிய பாதுகாப்பு, இறையான்மைக்கு நான் பொறுப்பு என கூறியுள்ளார்.

**திரைப்படம் - பொம்மை நாயகி**
**இயக்கம் - ஷான்**
**இசை - கேஎஸ் சுந்தரமூர்த்தி**
**நடிப்பு - யோகிபாபு, சுபத்ரா, பேபி ஸ்ரீமதி**




எளியவனை வலியவன் ஆட்டிப் படைக்கும் மற்றுமொரு கதை. இதில் ஒரு சிறுமி மீதான பாலியல் வன்கொடுமை, சாதிப் பிரச்னை என இரண்டையும் கலந்து கொடுத்திருக்கிறார்கள். இதில் எதை மையக் கருத்தாக வைத்து படத்தைக் கொடுப்பது என இயக்குநர் ஷான் கொஞ்சம் தடுமாறியிருக்கிறார். சிறுமி பிரச்னை, சாதிப் பிரச்னை இரண்டில் ஒன்றை மட்டும் மையமாக எடுத்துக் கொண்டிருந்தால் அந்த தடுமாற்றம் வந்திருக்காது.

கடலூர் அருகில் ஒரு தேநீர் கடையில் வேலை பார்ப்பவர் யோகிபாபு. அவரின் முதலாளிக்கு உடல் நிலை சரியில்லாததால் வேலை இல்லாமல் இருக்கிறார். அந்த சமயத்தில் ஊர்த் திருவிழா நடக்கும் போது அவரின் 9 வயது மகளை மேல்சாதியினர் சிலர் பாலியல் வன்கொடுமை செய்ய முயற்சிக்கிறார்கள். தக்க சமயத்தில் அதைத் தடுத்து விடுகிறார் யோகிபாபு. பொலிஸார் முறைப்பாட்டை ஏற்க மறுக்க, நீதிமன்றத்திற்கே சென்று முறைப்பாடு கொடுக்கிறார். வழக்கு நடந்து குற்றவாளிகளுக்கும் தண்டனை கிடைக்கிறது. ஆனால், மேல் முறையீட்டில் அவர்கள் பிணையில் வெளியில் வருகிறார்கள். யோகிபாபுவை பழி வாங்க நினைக்கிறார்கள். அதன்பின் என்ன நடக்கிறது என்பதுதான் படத்தின் மீதிக் கதை.




இப்படி உணர்வுபூர்வமான கதைகளை படமாக்கும் போது சம்பந்தப்பட்ட முக்கிய கதாபாத்திரம் மீது நமக்கு அதிக அளவிலான அனுதாபம் வர வேண்டும். அப்போதுதான் படத்துடன் ஒன்ற முடியும். இந்தப் படத்தில் அது ஆரம்பத்திலிருந்தே இல்லாமல் போவது படத்தின் ஜீவனை குறைத்துவிடுகிறது. கதைக்களம், கதாபாத்திரங்களுக்காக யோசித்த இயக்குநர் அந்த உணர்வுக்கும் கொஞ்சம் யோசித்திருந்தக்கலாம்.

இந்தப் படத்தின் டிரைலரைப் பார்த்ததும் யோகிபாபு நடித்து வந்த "மண்டேலா" படம் போல இருக்கும் என்ற ஓர் எதிர்பார்ப்பு ரசிகர்களுக்கு எழுந்தது. படம் அந்த அளவுக்கு இல்லையென்றா லும் யோகிபாபு நடிப்பில் ஏமாற்றவில்லை. சாதி ரீதியாக ஒடுக்கப்பட்ட ஓர் அப்பாவி அப்பாவின் தயக்கத்தை படம் முழுவதும் இயல்பாகக் காட்டியிருக்கிறார். யோகி பாபுவின் மனைவியாக சுபத்ராவும் அதே அளவுக்கு ஈடுகொடுத்து நடித்திருக்கிறார்.

யோகிபாபுவின் அண்ணனாக அருள்தாஸ், அப்பாவாக ஜி. எம். குமார், யோகிபாபுவின் மகளாக சிறீமதி ஆகியோரும் அவரவர் கதாபாத்திரங்களில் நிறைவாக நடித்திருக்கிறார்கள்.

கடலூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளை அதன் இயல்புடனேயே படமாக்கியிருக்கிறார் ஒளிப்பதிவாளர் அதிசயராஜ். கே. எஸ். சுந்தரமூர்த்தியின் பின்னணி இசை காட்சிகளுக்கான உணர்வை அதிகமாக்குவதில் கவனம் செலுத்தியிருக்கிறது.

இடைவேளைக்குப் பின் பெரிய திருப்பங்கள் எதுவும் இல்லாமல் கதை பயணிப்பது பெரும் குறையாக உள்ளது. ஏதோ பெரிதாக நடந்து கதை முடியும் என எதிர்பார்த்தால் சாதாரணமாக முடித்திருக்கிறார் இயக்குநர்.

# ஓ. டி. டியில் துணிவு

அஜித் நடிப்பில் திரையரங்குகளில் வெளியான 'துணிவு' திரைப்படம் வரும் பிப்ரவரி 8ஆம் திகதி ஓடிடியில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எச்.வினோத் இயக்கத்தில் அஜித் நடித்துள்ள 'துணிவு' சாமானியர்கள் மீது வங்கிகள் நிகழ்த்தும் அத்துமீறல்களை பேசுகிறது. இப்படம் கடந்த ஜனவரி 11ஆம் திகதி பொங்கல் பண்டிகையை முன்னிட்டு திரையரங்குகளில் வெளியானது.

இதுவரை இந்தப் படம் ரூ.300 கோடியை வசூலித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்நிலையில் படம் வரும் பிப்ரவரி 8ஆம் திகதி நெட் பிளிக்ஸ் ஓடிடி தளத்தில் வெளியாகும் என அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.






# லியோ...!

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்துக்கு 'லியோ' என பெயரிடப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் இந்தப் படம் வெளியாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

படப்பிடிப்பு பணிகள் கடந்த ஜனவரி 2ஆம் திகதி துவங்கியது. இந்தப் படத்தில் த்ரிஷா, மன்சூர் அலிகான், இயக்குநர் மிஷ்கின், நடன இயக்குநர் சாண்டி, நடிகை ப்ரியா ஆனந்த், நடிகர் அர்ஜுன், இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன், மலையாள சினிமா நடிகர் மேத்யூ தாமஸ், சஞ்சய் தத் ஆகியோர் நடிக்கின்றனர். இசையை அனிருத் அமைக்கிறார்.

மேலும் படம் இந்தாண்டு ஒக்ரோபர் 19ஆம் திகதி வெளியாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


# வசூல் மழையில் பதான்

சாருக்கான் நடிப்பில் வெளியான 'பதான்' திரைப்படம் உலகம் முழுவதும் ரூ. 667 கோடியை வசூலித்துள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சாருக்கான், தீபிகா படுகோன், ஜோன் ஆபிரஹாம் நடித்து கடந்த 25ஆம் திகதி வெளியான ஹிந்தி படம், 'பதான்'. சித்தார்த் ஆனந்த் இயக்கியுள்ளார்.

படத்துக்கும் கடும் எதிர்ப்பு கிளம்பியது. இந்த எதிர்ப்புகளை மீறி 'பதான்' வசூலில் சாதனை படைத்து வருகிறது. 4 ஆண்டுகளுக்கு பிறகு சாருக்கான் நடித்த படம் என்பதால், ரசிகர்கள் திரையரங்கில் குவிந்து வருகின்றனர்.





# நாயகியாகிறார் ஜாக்குலின்

விஜய் தொலைக்காட்சியின் நட்சத்திர தொகுப்பாளினி ஜாக்குலின். நயன்தாரா நடித்த கோல மாவு கோகிலா படத்தின் மூலம் திரையில் அறிமுகமானார். அதன்பிறகு சிறிய இடைவெளிக்கு பிறகு தற்போது கெவி என்ற படத்தின் மூலம் நாயகி ஆகியிருக்கிறார். படத்தின் இன்னொரு கதாநாயாகியாக ஷீலா ராஜ்குமார் நடிக்கிறார்.



# மிரட்டும் சஞ்சய்

லோகேஷ் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படத்துக்கு லியோ எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் படத்தில் கே ஜி எவ்- 2 படத்தில் வில்லனாக நடித்து பெரிய அளவில் மிரட்டிய பொலிவூட் நடிகர் சஞ்சய் தத் இதிலும் முக்கிய வில்லனாக நடிப்பது மிகப்பெரிய எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி இருக்கிறது.

இந்த நிலையில் தற்போது இந்த படத்தில் வில்லனாக நடிப்பதற்கு அவர் 10 கோடி இந்திய ரூபாய் சம்பளம் பேசியிருப்பதாக ஒரு தகவல் வெளியாகி இருக்கிறது.

# இரு படங்களில் சூர்யா

தற்போது சிறுத்தை சிவா இயக்கி வரும் தனது 42ஆவது படத்தில் நடித்து வருகிறார் சூர்யா. 13 மொழிகளில் தயாராகி வரும் இந்த படத்தின் சரித்திர காலகட்ட காட்சிகளை தற்போது படமாக்கி வருகிறார்கள்.

இதைத் தொடர்ந்து, சூரரைப் போற்று படத்தை இயக்கிய சுதா கொங்கரா இயக்கும் ஒரு படத்தில் நடிக்க திட்டமிட்டுள்ளாராம் சூர்யா. அந்த படத்தின் மொத்த படப்பிடிப்பையும் இரண்டே மாதத்தில் இடைவெளி விடாமல் நடித்து



கொடுத்துவிட்டு அதையடுத்து மீண்டும் வாடிவாசல் படத்தின் படப்பிடிப்பில் கலந்து கொள்ள அவர் திட்டமிட்டுள்ளார்.



# 2026 உலகக் கிண்ணம் பங்கேற்பாரா மெஸ்ஸி?

எதிர்வரும் உதைபந்தாட்ட உலகக் கிண்ணம் 2026 தொடரில் விளையாடுவது குறித்து மனம் திறந்து பேசியுள்ளார் ஆர்ஜென்ரீனா உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரர் மெஸ்ஸி. இதனை ஆர்ஜென்ரீனா நாட்டின் நாளேடு ஒன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் தெரிவித்துள்ளார்.

அனைத்து விளையாட்டு வீரர்களும் தங்கள் அணி தான் வெற்றி பெற வேண்டும் என விரும்புவார்கள். அதுவும் உலகக் கிண்ணம் மாதிரியான தொடர் என்றால் சொல்லவே வேண்டாம். கிண்ணத்தை வெல்ல வேண்டும் என்ற துடிப்பு ஒவ்வொரு வீரரின் இதயத் துடிப்பு போலவே இருக்கும். அதுவும் அதில் மெஸ்ஸி விளையாடினால் அவரோடு சேர்த்து அவரின் பல இலட்சக்கணக்கான ரசிகர்களின் துடிப்பும் அதில் இருக்கும்.

கடந்த டிசெம்பரில் உலகக் கிண்ணக் கனவை அதே துடிப்போடு நிஜமாக்கினார் மெஸ்ஸி. ஆர்ஜென்ரீனா அணியை திறம்பட வழிநடத்தி, தொடரில் தன் சார்பாக 7 கோல்களை பதிவு செய்து கிண்ணத்தை வென்று காட்டினார். இறுதிப் போட்டிக்கு பிறகு ஓய்வு முடிவையும் மாற்றிக் கொண்டார்.

“எனது வயது காரணமாக 2026 உலகக் கிண்ணத் தொடரில் விளையாடுவது மிகவும் கடினம்தான். அதற்கு இன்னும் நீண்ட நாட்கள் உள்ளன. எனக்கு உதைபந்து விளையாடுவது மிகவும் பிடிக்கும். நான் நல்ல உடற்திறனோடும், அதே ரசனையோடும் இருந்தால் நிச்சயம் அதை தொடருவேன். ஆனால், அது எனது வாழ்க்கை போக்கை பொறுத்தே அமையும்” என மெஸ்ஸி தெரிவித்துள்ளார்.

ஆர்ஜென்ரீனா அணியின் பயிற்றுநரும் அடுத்த உலகக் கிண்ணத் தொடரில் மெஸ்ஸி விளையாடுவார் என தான் நம்புகிறார் என்றும் கடந்த மாதம் தெரிவித்திருந்தார். அவரின் வாய்ப்புக்கான கதவுகள் எப்போதும் திறந்தே இருக்கும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

# இந்தியாவின் புதிய ஓட்ட இயந்திரம்!



இந்திய கிரிக்கெட் அணியில் தொடக்க ஆட்டக்காரரான ஷுப்மன் கில்லின் திறமை சந்தேகத்துக்கு இடமில்லாதது. ஆனால், அவரின் முதல் இருபது - 20 கிரிக்கெட் சதமானது அனைத்து வடிவ கிரிக்கெட் போட்டியிலும் ஓட்ட இயந்திரமாக திகழும் விராட் கோலியுடன் ஒப்பிடப்பட்டு பேசி வருகின்றனர் ரசிகர்கள்.

நியூசிலாந்துக்கு எதிராக அகமதாபாத்தில் நடைபெற்ற இருபது - 20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் தொடக்க வீரரான ஷுப்மன் கில் 63 பந்துகளில் 12 பௌண்ட்ரிகள், 6 சிக்ஸர்களுடன் 126 ஓட்டங்களை வேட்டையாடினார். சர்வதேச இருபது - 20 கிரிக்கெட்டில் ஷுப்மன் கில்லின் முதல் சதமாக இது அமைந்திருந்தது. அதிலும் தனது 6ஆவது ஆட்டத்திலேயே சதம் அடித்திருப்பது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

சதம் அடித்தது மட்டும் இல்லாமல் இருபது - 20 கிரிக்கெட்டின் ஓர் இனிங்ஸில் அதிக ஓட்டங்கள் விளாசிய இந்திய வீரர் என்ற சாதனையையும் படைத்தார் /ப்மன் கில். இதற்கு முன்னர் விராட் கோலி, ஆப்கானிஸ்தானுக்கு எதிராக 122 ஓட்டங்கள் சேர்த்ததே அதிகபட்சமாக இருந்தது. மேலும் டெஸ்ட், ஒருநாள் போட்டி மற்றும் இருபது 20 என அனைத்து வடிவிலான சர்வதேச போட்டிகளிலும் சதம் விளாசிய 5ஆவது வீரர் என்ற பெருமையையும் குறுகிய காலத்திலேயே பெற்றுள்ளார் ஷுப்மன் கில். 23 வயதான ஷுப்மன் கில் அனைத்து ஷொட்களையும் விளை யாடுவதில் திறமை பெற்றிருந்தாலும் கடந்த ஆண்டு நடைபெற்ற இருபது - 20 உலகக் கிண்ணத்தில் எந்தப் பங்கையும் அளிக்கவில்லை. மேலும் அனைத்து வடிவிலான கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியில் தனக்கான இடத்தை இன்னும் அவர், உறுதியாக தக்கவைத்துக் கொள்ளவில்லை.

டி 20 கிரிக்கெட் போட்டிக்கான இந்திய அணியின் கப்டன் ஹார்திக் பாண்டியா கூறும்போது, “அகமதா பாத்தில் நடைபெற்ற போட்டியில் ஷுப்மன் கில் வெளிப்படுத்திய திறனுக்காக மட்டும் அல்ல, பணி நெறிமுறை மற்றும் விளையாட்டின் மீதான நேர்மையின் காரணமாக அவர் தனது வாழ்க்கையில் நிச்சயமாக பெரிய உயரங்களை அடைவார்.

அனைத்து வடிவிலான கிரிக்கெட்டையும் விளையாடும் பாணியும், தொழில் நுட்பமும் ஷுப்மன் கில்லிடம் இருப்பதை நான் முன்பே கண்டறிந்து விட்டேன். அதனால் அது எனக்கு ஆச்சரியமாக இல்லை. அவரால் செய்யக்கூடிய சிரமமற்ற துடுப்பாட்டத்தை பலரால் செய்ய முடியாது. ஒரு இளைஞனாக எல்லா வடிவங்களிலும் விளையாடுவது அவருக்கு நிறைய அர்த்தத்தையும், விளையாட்டுக்கு ஒரு புதிய பரிமாணத்தையும் சேர்க்கிறது” என்றார்.

நியூசிலாந்துக்கு எதிரான 3 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரில் ஷுப்மன் கில் 360 ஓட்டங்கள் குவித்திருந்தார். இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட இருதரப்பு தொடரில் அதிக ஓட்டங்கள் சேர்த்த பாகிஸ்தானின் பாபர் அஸாமின் சாதனையை சமன் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. விராட் கோலியை தொடர்ந்து இந்திய அணியின் ஓட்டங்கள் குவிக்கும் புதிய இயந்திரமாக உருவெடுத்துள்ளார் ஷுப்மன் கில். இது அடுத்து நடைபெற உள்ள அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரிலும் அவர், மீதான எதிர்பார்ப்பை அதிகரிக்க செய்துள்ளது.



# 18 நொடிகளால் பறிபோன வாய்ப்பு...!

வெறும் 18 விநாடிகளில் என்ன செய்துவிட முடியும்! அதுவொரு நீண்ட நெடிய விவாதங்களுக்கு கிரிக்கெட் உலகைக் கூட்டிச் செல்லும் என யாருக்கு தான் தெரியும்?!

ஆம், கடந்த சில நாட்களாக கிரிக்கெட் உலகில் பரபரப்பாக விவாதிக்கப்படும் கருத்துக்கான உந்துவிசை தென்னாபிரிக்க பெண்கள் அணியின் தலைவரும் சகலதுறை வீராங்கனையுமான டெனே வான் நீக்ரிக்.

2 கிலோமீற்றர் தூரத்தை 9 நிமிடம் 30 விநாடிகளுக்குள் கடக்க வேண்டும் என்ற தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையின் நிபந்தனையை எட்ட முடியாமல் வெறும் 18 நொடிகள் அதிகமாக எடுத்துக் கொண்டதால் இருபது -20 உலகக் கிண்ண அணியில் தனது இடத்தை இழந்துள்ளார்.

இது குறித்து, தென்னாபிரிக்க பயிற்றுநர் ஹில்டன் மொரிங் கூறியதாவது, ஹடஉடற்தகுதி விஷயத்தில் எந்த சமரசமும் செய்ய முடியாது.“

தலைவரை அணியிலிருந்து வெளியேற்றியிருக்கும் இந்த விவகாரம் பெரும் பரபரப்பை கிளப்பியுள்ளது. இதுகுறித்து பல வீரர்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்துள்ளனர். இருபது - 20 உலகக் கிண்ணத்தில் ஆடப்போகும் இங்கிலாந்தின் கேட் க்ராஸ், “ஆண்களை விட பெண்கள் உடல் தகுதியை பராமரிப்பது மிகவும் கடினம். நாங்கள் உடற்தகுதியை விரைந்து இழந்துவிடுவோம். அத்தகைய உடலமைப்பைதான் நாங்கள் கொண்டுள்ளோம்!”

மேலும், “நான் கிரிக்கெட்டில் தான் சிறந்து விளங்குவேன், இரண்டு கி.மீ ஓடுவதில் நாங்கள் சிறந்தவர்கள் அல்ல! நான் வீசப்போகும் 10 ஓவர்களுக்கு ஏற்றவாறு உடற்பலத்துடன் இருந்தால் போதுமானது!” என்றும் கூறியுள்ளார்.

கடந்த வருடம் சிசாண்டா மகாலா, லிசெல்லா லீ ஆகியோரும் இந்தத் தெரிவுமுறை குறித்து தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியிருந்தனர்.

இது மட்டுமில்லாமல் உலகக் கிரிக்கெட்டில் ரக்கீம் கார்ன்வால், ஆசாம் கான் உள்ளிட்ட பல வீரர்கள் உடல் பருமன் காரணமாக அவர்களுக்கு சிறந்த உடற் திறன் இல்லை என கூறி தேசிய அணியில் வாய்ப்புகள் மறுக்கப்பட்டதும் நடந்தேறியது.

டெனே வான் நீக்ரிக் கடந்த 2021-ல் காலில் முறிவு ஏற்பட்டதிலிருந்து எந்த வொரு சர்வதேச போட்டியிலும் பங்கேற்கவில்லை. கடைசியாக "நூறு பந்துகள்" தொடரில் பங்கேற்றிருந்தார். இப்போது நடக்கும் முத்தரப்பு தொடரில் கூட அவர் இடம் பெறவில்லை. தென்னாபிரிக்கா அணிக்கு அவர் இல்லாதது மிகப்பெரிய பின்னடைவு என்பதில் சந்தேகமில்லை.

ஒரு வீரருக்கு உடற்தகுதி முக்கியம் தான். ஆனால், அவரின் திறமைகளும் அதே அளவுக்கு முக்கியமான ஒன்றாகும்!

# உள்ளூராட்சி சபைகளில் பெண்களுக்கான வகிபாகம் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறதா?

கணபதி சர்வானந்தா

நடைமுறைச் சூழலில், பெண்கள் அரசியல் பிரவேசம் பற்றிப் பல தளங்களில் பலவாறு பேசப்படுகிறது. கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது பெண்களின் 25சூ ஒதுக்கீடு பற்றி அதிகம் பேசப்பட்டுத் தேர்தலில் கேட்போர் பட்டியலில் பெண்கள் பலர் உள்வாங்கப்பட்டனர். அதில் அதிகம் பேர் வெற்றி பெற்றுச் சபைகளுக்குள் நுழைந்து கொண்டனர். அது மட்டுமல்லாது சிலர் தேசியப் பட்டியல்கள் ஊடாகவும் உள்வாங்கப்பட்டனர்.

இருந்தும் அவ்வாறு உள்வாங்கப்பட்டவர்கள் பலருக்கு அரசியல் ஞானம் இல்லை என்றும் தேர்தல் சட்டத்தைக் கடைப்பிடிக்கச் சமூகத்தில் இருந்து நின்டவர்கள் கண்டவர்கள் எனப் பலர் உள்வாங்கப்பட்டுப் பட்டியலைப் பூர்த்தி செய்தனர் என்ற குறையும் எம்மிடையே உண்டு.

கடந்த உள்ளூராட்சித் தேர்தல் நடைபெற்று ஆண்டுகள் பல கடந்துவிட்ட நிலையில் நிலைமைகள் மாறி இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அவைகளில் பங்குகொண்டு அனுபவரீதியாகத் தமது அரசியல் அறிவை வளர்த்துக் கொண்டதோடு, தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பல நடத்திய பெண்களுக்குரிய அரசியல் அறிவூட்டல் தொடர்பான ஆளுமை விருத்திப் பயற்சிகளில் பங்கு பற்றி அவர்கள் தமது திறன்களை வளர்த்துள்ளதாச் சொல்லப்படுகிறது. அத்துடன் தமக்குக் கிடைத்த அந்த வாய்ப்பினுடாகப் பல சமூகப் பணிகளை நிறைவேற்றியுள்ளதாகவும் இன்னும் நிறைவேற்ற விருப்பதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

அந்தவகையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினராக உள்ள திருமதி.சி.கவிதாவிடம் அது பற்றிக் கேட்டோம்.

**கேள்வி :** இலங்கையில் ஒரு மத்திய தர குடும்பப் பெண்ணுக்கோ அல்லது வருமானம் குறைந்த ஒரு பெண்ணுக்கோ அரசியல் என்பது எட்டாக்கனியாக இருப்பது ஏன்?

**கவிதா :** அடிப்படையில் வருமானம் குறைந்த மத்தியதரப் பெண், சமூக மட்டத்திலும் அரசியல் மட்டத்திலும் பல்வேறு சவால்களை எதிர்வு கொள்கிறாள். அவள் தன் குடும்பத்தின் மீது பற்றுள்ளவளாகவும், அதன் எதிர்காலம் பற்றியும் யோசிக்கிறாள். சமூகத்தின் மதிப்புகள் மீதும் கவனம் கொள்கிறாள். அவளைப் பொறுத்தவரையில் அரசியலில் மட்டுமல்ல, கல்வியும், பொருளாதாரமும் அவளுக்கு எட்டாக்கனிதான். இருந்தும் குடும்ப ஆதரவும்,தற்துணிவும்,முயற்சியும், தன்னம்பிக்கையும் உள்ள பெண்கள் முன்னோக்கி வருகிறார்கள்.

**கேள்வி :** 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபை



மட்டங்களில் பெண்களுக்கான வகிபாகம் 25 வீதம் என்ற ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டபோது சில கட்சிகள் அரசியல் தொடர்பற்ற அல்லது ஞானமற்ற பெண்களை எடுத்துப் பட்டியலைப் பூர்த்தி செய்திருந்தனர் என்று சொல்லப்படுகிறது. இது எதனை எடுத்துக் காட்டுகிறது?

**கவிதா :** உள்ளூராட்சி சபைகளில் பெண்கள் பிரதிநிதித்துவம் சட்டமாக்கப் பட்டதினால், கட்சிகள் விரும்பியோ விரும்பாமலோ அப் பிரதிநிதித்துவத்தை அளிக்கின்றன.பெரும்பாலான கட்சிகளிற்கு வெற்றிடத்தை நிரப்ப ஒரு நபரே தேவைப்படுகிறார். முதற்கேள்விக்கான எனது பதிலில் இதற்கான சவாலையும் கருத்திற் கொள்ளுங்கள்.பெரும்பாலான கட்சிகளின் தெரிவு அவ்வாறு அமைந்தமை உண்மை.!ஆனால் எல்லாக் கட்சிகளின் எல்லாப்பிரதிநிதித்துவமும் அவ்வாறில்லை.

**கேள்வி :** இலங்கை அரசியலைப் பொறுத்தவரை பெண்களுக்கு ஐம்பது சதவீதமான ஒதுக்கீட்டைக் கொடுக்க முடியும். ஐம்பது சதிவீத வாக்குகளைப் பெண்கள் வைத்திருக்கிறார்கள்.அப்படி இருந்தும் அவர்களை அரசியலில் வலுப்படுத்துவதற்கு, அரசியல் சார்ந்த அறிவுகளை அவர்களுக்குப் புகட்டுவதற்கு அவர்கள் சார்ந்த கட்சிகள் எந்த ஒரு ஏற்பாடையும் செய்யவில்லை என்று சொல்லப்படுவது உண்மையா?

**கவிதா :** கட்சிகள், உள்ளூராட்சி பெண்பிரதிநிதிகளை செயற்றிறன் மிக்க,வலுவூட்டப்பட்ட பிரதிநிதிகளாக மாற்றுவதில் கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது கசப்பான உண்மை.எல்லாக் கட்சிகளும் மகளிர் அணி என்ற ஒன்றை வைத்திருக்கிறார்கள். ஆனால், இச்செயற்பாட்டை சில அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுத்ததை நன்றியுடன் பதிவு செய்கிறேன்.

**கேள்வி :** நீங்கள் தெரிவு செய்யப்பட்டுப் பதவிக்கு வந்து இப்போது நான்கு வருடங்களுக்கு மேலாகச் சபையில் இருந்துள்ளீர்கள்? உங்கள் அனுபவம் என்ன?

கட்சிகள், உள்ளூராட்சி பெண்பிரதிநிதிகளை செயற்றிறன் மிக்க,வலுவூட்டப்பட்ட பிரதிநிதிகளாக மாற்றுவதில் கவனம் செலுத்தியிருக்கவில்லை என்பது கசப்பான உண்மை.எல்லாக் கட்சிகளும் மகளிர் அணி என்ற ஒன்றை வைத்திருக்கிறார்கள். ஆனால் , இச்செயற்பாட்டை சில அரச சார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுத்ததை நன்றியுடன் பதிவு செய்கிறேன்.

**கேள்வி :** ஆண் ஆதிக்கச் சமுதாயத்தில் இருந்து வந்தவர்கள் என்றவகையில், உங்களால் சாதிக்க முடிந்ததா? தொடர்ந்தும் சாதிக்கலாம் என்னு எண்ணுகிறீர்களா?

**கவிதா :** எனது மக்களின் ஒரு பிரதிநிதியாக ,ஒரு பெண்ணாக சபையில் இருப்பது பெருமையானதும் பொறுப்புடையதுமானதுமாகும்.தேர்தல் விதிகளும் கட்சியின் தெரிவுமே இதற்குக் காரணம் என்பதை நான் அறிவேன்.உள்ளூராட்சி சபையின் விதிகளிற்குட்பட்டவாறு தவிசாளரின் கட்சியைச் சாராதவராக இருந்தும் எனது மக்களிற்கு பணிபுரிந்திருக்கிறேன்.

**கேள்வி :** அரசியலில் பெண்களின் பங்கை அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்? அதாவது சமூகம் என்ன செய்ய வேண்டும்? கட்சிகள் என்ன செய்ய வேண்டும்?


**கவிதா :** உள்ளூராட்சி சபைகளிலும்,மாகாணசபைகளிலும்,நாடாளுமன்றிலும் சமபாதிப்பிரதிநிதித்துவம் சட்டமாக்கப்படல் வேண்டும். இருக்கின்ற சட்டங்களிற்கு உட்பட்டு பெண்கள் , அரசியலில் பெருவாரியாகப் பங்கெடுக்க வேண்டும்.கட்சிகளிற்குள் இருக்கும் பெண்கள் இதனை முன் கொண்டு செல்லவேண்டும். கட்சிக்குள்ளும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். சமூக மட்டத்தில் இயங்குகின்ற பெண்கள் அமைப்புகள், குழுக்கள்,சங்கங்கள் ஒருங்கிணைக்கப்பட்ட வேலைத் திட்டம் ஒன்றுக்குள் உள்வாங்கப்படல் வேண்டும்.

**கேள்வி :** பெண்கள் அரசியலில் பிரவேசிக்க அவர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரைகள் என்ன? அதாவது அவர்களின் மனோபலத்தை அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்?

**கவிதா :** எமது மண்ணில் பெண்கள் அரசியலிற்குப் புதியவர்கள் அல்லர்.ஒரு பொற்காலம் இருந்ததை நீங்கள் அறிவீர்கள்.யுத்தத்திற்குப் பின்பான எமது பெண்களின் நிலைமை மிக மோசமானது.இனத்துவ ஒடுக்குமுறைக்கும் உள்ளானவர்கள் நாம்.பெண்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை உறுதியாகப் பெற்றுக் கொள்வார்கள் என்பதை நான் நம்புகிறேன்.

---

# வியுக்தியார் பதில்கள்



உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**க. சிவநாதன் கோப்பாய் மத்தி, கோப்பாய்.**

**கேள்வி:** பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புக்குள் எதற்கு வந்தாரோ அதைச் சரியான முறையில் செய்து முடித்திருக்கிறார் என்று தமிழரசுக்கட்சியின் மத்திய, அரசியல் குழுக்களின் உறுப்பினரும், கொழும்புக் கிளைத் தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி. தவராசா தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** இது தமிழ் மக்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை இல்லை என்பதால் அதுபற்றி நாம் அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. இது இரண்டு பேருக்கு இடையிலான தனிப்பட்ட பிரச்சினை என்றே நினைக்கின்றேன். அதுசரி எப்போது பார்த்தாலும் ஊடகர் மாநாடு நடாத்துகின்றபோது அருகில் இரண்டு பேரை தவராசா வைத்திருக்கிறரே. அவர்கள் அவரது மெய்ப்பாதுகாவலர்களா என்று என்னிடம் சிலர் கேட்டார்கள். முதலில் இந்த மெய்ப்பாதுகாவலர்களுடன் மக்களுக்கு கருத்துச் சொல்வதை அவர் நிறுத்த வேண்டும். அப்போதுதான் மக்கள் அவர் சொல்வதைக் கூட காதுகொடுத்து கேட்பார்கள்.

**எஸ்.சுதர்மன், நுணாவில், சாவகச்சேரி.**

**கேள்வி:** இலங்கை தமிழ் அரசுக் கட்சியிலிருந்து தமிழ்த்தேசிய உணர்வாளர்கள் அகற்றப்பட்டு வருகிறார்கள். கட்சித்தலைவர் மாவை சேனாதிராசா அடுத்த ஓரிரண்டு மாதங்களில் கட்சியை விட்டு வெளியே அனுப்பப்படுவார். அதன் பின்னர் சி.சிறிதரன் வெளியே அனுப்பப்படுவார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள்வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தெரிவித்திருந்தாரே கவனித்தீர்களா?

**வியுக்தியார்:** அவர் ஏன் சொன்னார் என்பது அவரிடம்தான் கேட்கவேண்டும். ஆனால் மாவை சேனாதிராசா கட்சித் தலைவராக இப்போதும் இருக்கி றாரா? அவர் கட்சிக்கு உள்ளே இருந்தாலும் இருப்பது யாருக்காவது தெரிந்தால்தானே வெளியே அனுப்ப வேண்டும் என்று யோசிப்பதற்கு. சிறிதரனையும் வெளியே அனுப்பினால், பிறகு தமிழ் அரசில் என்ன தான் மிஞ்சப் போகின்றது? அதற்குப்பிறகு கட்சியில் யார் மிஞ்சுகிறார்களோ அவர்கள், சங்கரி ஐயா கூட்டணியை வைத்துக் கொண்டு காலம் கடத்துவதுபோல கடத்தவேண்டியதுதான்.!

**எஸ். சதீஸ்குமார், பாண்டிருப்பு, கல்முனை**

**கேள்வி:** 13ஆவது திருத்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட்டால் நாட்டில் சிங்கள - தமிழ் இனக் கலவரம் மீண்டும் தோற்றம் பெறும் என்று ஆளும்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகரா எச்சரிக்கை விடுக்கிறாரே?.

**வியுக்தியார்:** மனுசன் அறிவிச்சால் கொஞ்சம் கவனமாகத்தான் இருக்கவேண்டும். இனக்கலவரம் என்பது இதுவரை மக்கள் கலவரம் செய்ததால் நடந்ததில்லையே. தலைவர்கள் திட்டமிட்டே கலவரத்தை நடாத்தியுள்ளனர். ஆனால் பாராளுமன்ற உறுப்பினரான ஒருவரே அரசியலமைப்பு சட்டத்தை அமுல்படுத்தினால் கலவரம் வெடிக்கும் என்கின்றபோது, அரசியலமைப்பை மீறிய குற்றச்சாட்டில் அவர் மீது நடவடிக்கை எடுக்கலாமே. போராட்டம் செய்யும் மாணவர்கள் மீதும், இந்துக் குருமார் மீதும் நடவடிக்கை எடுக்கும் அரசாங்கம் அவர் மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்பது தெரியவில்லை.

**யூட் நிரோசன், 3ம் குறுக்குத் தெரு, யாழ்.நகர்.**

**கேள்வி:** தமிழ் அரசுக்கட்சி யாழ்ப்பாணத்துக்கான மேயர் வேட்பாளரை இதுவரை அறிவிக்கவில்லையே. ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமது மேயர் வேட்பாளர் யார் என்பதை முன்கூட்டியே அறிவித்து விட்டதே. இதிலிருந்து தமிழ் அரசுக்கட்சிக்கு துணிவு இல்லை என்பது தெரிகின்றது அல்லவா?

**வியுக்தியார் :** அவர்கள் அறிவித்து விட்டார்கள் என்பதற்காக அவர்களுக்கு துணிவு இருக்கின்றது என்று அர்த்தம்கொள்ளத் தேவையில்லையே. ஆனாலும், தமிழ் அரசு கட்சியின் நாற்பத்து ஐந்து வேட்பாளர்க ளும் மேயராக தகுதியானவர்கள் என்று அறிவித்திருப்பது, அவர்களில் ஒருவரும் மேயர் ஆகப்போவதில்லை என்பதைத்தான் சொல்லியிருக்கின்றது. நாற்பத்தி ஐந்து உறுப்பினர் கொண்ட சபையில் கூட்டமைப்பாக மூன்று கட்சிகளுடன் இருந்தபோதே பதினாறு உறுப்பினர்கள் தான் கிடைத்தார்கள். இப்போது தாங்கள் எப்படித்தான் யாரைத்தான் அறிவித்தாலும் ஆட்சியைப் பிடிக்கப் போவதில்லை என்பதால் அப்படி அறிவிக்காமல் விட்டி ருக்கலாம். சிலவேளை மூன்று நான்கு உறுப்பினர்களை பெறும் கட்சியிலிருந்தும் ஒருவர் மேயரானாலும் ஆச்சரியப்படத் தேவையில்லையே. தமிழ் அரசில் இப் போது உள்ளூராட்சி சபைகளைப் பிடிப்பதில் போட்டி நடக்கவில்லை. கட்சியின் தலைமையை பிடிப்பதில் தான் போட்டி நடக்கின்றது.

# “நீள நாக்கு…!”

உஷாதீபன்

ஆனாலும் ஒரு ஐம்பது ரூபாயை நான் அவன் கையில் வலியத் திணித்து விட்டுத்தான் வந்தேன். அப் பொழுதுதானே என் மனதுக்கு சமாதானம் ஆகும். அந்தக் கண்ணுக்குத் தெரியாத சாட்சிக்கு யார் பதில் சொல்வது? நான்தானே சொல்லியாக வேண்டும். இல்லையென்றால் பொழுது பொழுதாய் அறுத்துக் கொண்டிருக்குமே? ஏற்கனவே என்னைப் பாடாய்ப் படுத்தியது போதாதா?

அதற்காக இப்படியா வருவார்கள் என்று கேட்குமே?

காசு மிச்சம்னுட்டு வந்திட்ட! அதானே? சரியான ஆள்டா நீ? அன்னைக்கு உங்கப்பா நாள் பூராவும் நெருப் புல கிடந்து, அடுப்பு முன்னால நின்னு, வெந்து, உழைச்சு உழைச்சு ஓடாப் போயி அத்தக் கூலி மாதிரி என்னத் தையோ கொடுத்ததை வருஷக்கணக்கா கம்முன்னு வாங் கிட்டு வந்திட்டிருந்தாரே, ஞாபகமிருக்கா? ஞாபகமிருக் காங்கிறேன்? இல்ல, மறந்திட்டியா? அதுலயும் படு மோசமால்லடா இருக்கு இப்ப நீ செய்திட்டு வந்திருக் கிறது?

ஒரு தொழிலாளியைப் போய் ஏமாத்தலாமா? மன சறிஞ்சு ஏமாத்திட்டு வந்து நிக்கிறியே! இது நியாயமா? அவன் வயிறெறிஞ்சான்னா?

இல்ல அவன்தான் வேணாம்னான்…

அவன் சொல்வாண்டா எதையாச்சும்… மனசாரச் சொன்னான்னு நீ கண்டியா? …. உனக்கெங்கடா புத்தி போச்சு…. எங்கயானும் அடகு வச்சிட்டயா…

இல்ல… அப்டியெல்லாம் இல்ல…

என்ன நொள்ள..? அப்புறம் எதுக்கு இப்டி வந்து நிக்கிறே… மனசு அரிக்குதுல்ல இப்ப…அத முதல்லயே செய்திருக்க வேண்டிதான…இனி அந்தப் பக்கம் போற போதெல்லாம் அவன் மூஞ்சியை எப்படிப் பார்ப்பே…. அப்படியே பார்த்தாலும் உன்னால சிநேக பாவமா சிரிக்க முடியுமா? பழைய பழக்கம் போல தொடர முடியுமா? நல்லாயிருக்கீங்களான்னு கேட்க முடியுமா? உனக்கு மனுஷங்க வேணாமா? காசுதான் பிரதானமா? நீ நலம் விசாரிச்சாலும் அவனால முழு மனசோட நல்லாயிருக் கேன் சார்னு சொல்ல முடியுமா? காசு தராமப் போனவன்ங் கிற எண்ணம்தானே அவனுக்கும் இருக்கும்…ஏமாத்தின வன்ங்கிற எண்ணம்தானே உனக்கும் இருக்கும்… இதுக்குத் தான் சொல்றது… நாம நம்மள முதல்ல புரிஞ்சிக் கணும்னு… புரிஞ்சிக்கிட்டிருக்கமா? இல்ல…ஆனா வயசாயிடுச்சி… வயசு மட்டும் ஆயிடுச்சி…அவ்வளவுதான்…

நீ என்ன சொல்ற…புரியல… வயசான அளவுக்கு உனக்கு அனுபவம் பத்தல… அவ்வளவுதான்..

என்ன அனுபவம்?

வாழ்க்கை அனுபவம்டா… மனுசங்களைப் புரிஞ்சிக்கிற அனுபவம்… புரிஞ்சி நடந்துக்கிற அனுபவம்… அதவிட….

அதவிட?

நம்ம இயல்பு என்னென்னு புரிஞ்சி நமக்கு எது பொருந்துமோ அப்டி நடந்துக்கணும்… அதத்தான் செய்யணும்… ஒரிஜினாலிட்டின்னு கேள்விப்பட்டி ருக்கியா?

இல்ல…

அதுதான் அது…இப்ப நா சொன்னது…அதாவது அசலா இருக்கிறது…

சரி நா வர்றேன்…

எங்க கிளம்பிட்டே…?

இந்தா வந்திடறேன்…சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு பட்டன்களைப் போட்டு இதயத்தை மூடினான்.

சார், வேணாம் …வைங்க சார….இருக்கட்டும்….

இல்லப்பா… முதல்ல உன் காசப் பிடி… பிறகு பேசுவோம….

ஊகும்….வேண்டாம் சார்… எனக்கு மனசே சரியில்ல சார்… இப்டி ஆயிப்போச்சேன்னு அரிக்குது….காசு வாங்க மாட்டேன் சார்…

அதென்னவோ உண்மைதான்… கிளம்புற போதே என் பொண்டாட்டி வாய வச்சா… இன்னும் இதுக்கு வேறே அம்பது நூறு செலவான்னு… முதல் கோணல் முற்றும் கோணல்னு ஆயிப்போச்சு… அபசகுனமாப் பேசினா…? அத மாதிரியே ஆயிப் போச்சு…”

இல்ல சார்… இதுவரைக்கும் இப்படி ஆனதில்ல… இது நா பண்ணின தப்பு… இந்த வேலய நா செய்திருக் கணும்… என் தம்பிட்ட கொடுத்தது தப்பாப் போச்சு…

என்னங்க நீங்க? … நீங்க கடைல உட்கார்ந்திருக் கிறதப் பார்த்துட்டுத்தான நா கொடுத்திட்டுப் போனேன்… உங்க தம்பிட்டயா கொடுத்தேன்… நீங்க இப்டிச் சொல்றதுனால சரி பரவால்லன்னு வாங்கிக் கிடச் சொல்றீங்களா… உங்க தம்பிய இங்க கடை விளம் பரத்துக்காக வச்சிருக்கிற படங்களை லேமினேட் பண் ணச் சொல்லுங்க… தொழில் பழகிக்கட்டும… வர்ற ஆர்டரை ஏன் அவன்ட்டக் கொடுக்கிறீங்க…? பலி கடாவா என் படம்தான் கிடைச்சிதா…

சே…சே…! அப்டியெல்லாம் இல்ல சார்..அதான் சொல்லிட்டேன்ல சார… இது நா பண்ணின தப்புன்னு…

சரி, அதுக்காக…பேசாம வாங்கிட்டுப் போன்னு சொல்றீங்களா…?

சே…சே…அப்டி சொல்வனா சார்… இதமாதிரி இன்னொன்னு இருந்தாக் கொண்டுவாங்க… பைசா வாங்காம என் செலவுல ஃப்ரேம் போட்டுக் கொடுத்திடுறேன்னு சொன்னேன்..

இன்னொரு படத்துக்கு நா எங்கய்யா போவேன்… இல்ல இதமாதிரி போஸ் கொடுக்கத்தான் முடியுமா? நா என்ன சினிமா நடிகனா? அதென்னமோ அந்த விழாவுல எடுத்தாங்க… அது தற்செயலா அம்சமா அமைஞ்சிருச்சு… ஏதோ புண்ணியத்துக்கு அவுங்க அனுப்பி வச்சிருக்காங்க… சரி, ஞாபகார்த்தமா இருக்கட்டுமேன்னு லேமினேட் பண்ணி வீட்டுல தொங்க விடலாம்னு பார்த்தா…இதெல்லாம் வேறே ஒண்ணுமில்ல… என் நேரம்யா… எந் நேரம்….தூக்கிட்டுக் கிளம்பேலயே அவ அழுதா…எதுக்கு வெட்டிச் செலவுன்னு வாய வச்சா… அது வெளங்காமப் போச்சு…வேறென்னத்தச் சொல்ல…

அப்டியெல்லாம் இல்ல சார்..நீங்களா எதையாச்சும் சொல்லிக்கிற வாணாம்… நா செய்து தர்றேன்கிறன்ல…

அப்டியில்லாமப் பின்ன எப்டி? இங்க தொங்குற படங்களயெல்லாம் பார்த்திட்டுத்தானய்யா லேமினேஷன் நல்லாயிருக்குன்னு நம்பிக் கொடுத்தேன்… கொடுக்கைலயே படம் கசங்கியிருந்திச்சா… நல்லா, நீட்டாத்தான இருந்திச்சு… நீ சொன்ன காசை ஏதாச்சும் குறைச்சனா? இல்லேல்ல… அப்புறம் இப்டி பண்ணினா? ஏகப்பட்ட சுருக்கத்தோட பார்க்கவே நல்லால்லாம லேமினேட் பண்ணியிருக்கீங்களே? புத்தகங்களுக்குத் தான்யா லேமினேஷன் சுருக்கம் சுருக்கமா இருக்கிறதை ஒரு ஃபாஷன் மாதிரி செய்யுறாங்க… படங்களுக்கில்ல… அதுவும் போட்டோ கொடுக்கிறவங்களுக்கு தப்பித் தவறிக் கூட அப்டிச் செய்திறக் கூடாது… என்னவோ 3டி படம்மாதிரி ஆக்கி வச்சிருக்கீங்க…? ஒவ்வொரு சைடுலேயும் ஒவ்வொரு மாதிரித் தெரியுது… லேமினேஷன் ஒர்க் பழகியிருக்கீங்களா, இல்லையா? அதுவே எனக்கு சந்தேகமாயிருக்கு…

அவன் தலை குனிந்து நின்றான். இப்பொழுது அவனிடம் பேச்சு முற்றிலுமாக நின்றிருந்தது. இனி எதுவும் பேசிப் பயனில்லை என்று நினைத்து விட்டானோ என்னவோ? என்ன சொன்னாலும் கேட்டுக் கொள்ள வேண்டியதுதான் என்று முடிவுக்கு வந்திருக்கலாம்.

என் மனது இன்னும் ஆறவில்லை. படத்தைப் பார்க்கப் பார்க்க வயிற்றெரிச்சலாய் இருந்தது. ஏதோ முக்கியமான விழாவாயிற்றே என்று தலைக்கு டையெல்லாம் அடித்து, சற்று சிறப்பு கவனத்தோடு இளமையாய்ச் சென்றிருந்தேன். என் தலையைப் பற்றி எனக்கே ஒரு பெருமை. டை அடிச்சாலும், நேச்சராத் தெரியுதே… எவனும் கண்டுபிடிக்க முடியாது.

இன்னும் முடியெல்லாம் நரைக்கவே இல்லையே சார்… எங்களப் பாருங்க… இப்பவே இப்டிக் கிழண்டு போயிட்டோம்… ஒங்களுக்கு முடி அடர்த்தி வேறே…ம்ம்…கூந்தலுள்ள சீமாட்டி…அள்ளி முடியிறீங்க…

அவர்கள் புகழ்ந்த பெருமை முகத்தில் தவழ்ந்ததோ என்னவோ… படமும் அழகாய் விழுந்து விட்டது. எனக்கே என்னை நம்ப முடியவில்லைதான்…அதைப் போய் இந்தப் படுபாவி இப்படி அசிங்கப்படுத்தி விட்டானே..லேமினேஷனுக்குப் பதிலாகக் கண்ணாடி போடக் கொடுத்திருக்கணுமோ? இப்டிக் கெடுத்து வச்சிருக்கானே? .இவனை இன்னும் நாலு வாங்கினால் தான் என்ன?

இந்த வீதில போற வர்றவங்களெல்லாம் உங்களப் பார்த்திட்டுக் கொடுக்கிறாங்களா? இல்ல எப்பயாச்சும் கண்ணுல பட்டு மறையுற உங்க தம்பிட்டக் கொடுக்கிறாங்களா?

இல்ல சார்… மத்தியானம் சாப்பிட வீட்டுக்குப் போவேன்… அந்நேரம் அவன் இருப்பான்….நல்லாத் தான் செய்வான்… இந்தா பாருங்க… அம்பது லேமினேஷன்… மொத்த ஆர்டர்… பூரா சாமி படம்….அவன்தான் செய்தான்… எந்தப் படமாவது கசங்கியிருக்குதா பாருங்க? ஒண்ணு சொத்தையா இருந்தாலும் எனக்குக் காசு வேணாம்… நா தொழில அப்டிச் சுத்தமா செய்றவன் சார்…

அப்போ சாமி படமாக் கொடுத்தாத்தான் நல்லா செய்வீங்களா… மனுஷங்க படம்னா இப்டித்தான் இருக்குமா… உங்களுக்கு மனுஷங்க வேணுமா… இல்ல சாமி வேணுமா…?

என்ன சார் இப்டிக் கேட்குறீங்க… மனுஷங்கதான் சார் வேணும்… அவுங்கள வச்சிதான தொழில்….

அப்போ மூஞ்சில இப்டிக் கரியைப் பூசினமாதிரி ஃப்ரேம் பண்ணினீங்கன்னா? ஒரு வேளை ஒங்க தம்பிக்கு என் முகத்தைப் பார்த்ததும் பிடிக்கலையோ? அவனக் கடுப்படிச்ச வேறே யார் மாதிரியேனும் நான் இருந்திருப்பனோ…

பார்ட்டி பெரிய வில்லங்கம் என்று நினைத்திருப் பானோ என்னவோ அமுங்கியே போனான். மூஞ்சி இறுகி, செத்துப் போனது.

நானே இருந்திருந்தும் ஆசப்பட்டு ஒண்ணைக் கொண்டாந்தேன். அதையும் நீங்க இப்டிச் செய்திட்டீங்க….என்னங்க தொழில் பண்றீங்க…தொழில்னா அர்ப்பணிப்பு உணர்வு வேணுங்க… கொடுக்கிறவங்ககிட்ட மரியாதை வேணும… இல்லன்னா இப்டியெல்லாம்தான் ஆகும… உங்களுக்கென்ன, நம்மள விட்டா இந்த ஏரியாவுக்கு வேறே யார் இருக்கான்னு நினைச்சிருப்பீங்க… எவன் இங்கேயிருந்து டவுனுக்குள்ள எடுத்துப் பிடிச்சிப் போகப்போறான்னு மெத்தனம…அதான்…

அப்டியெல்லாம் இல்ல சார…சொன்னா நம்புங்க… இந்த ஏரியாவுல நா ஒருத்தனா இத்தன வருஷம் தாக்குப் பிடிச்சி நிக்கிறேன்னா என் தொழில் சுத்தம்தான் சார் காரணம். எத்தனை பேர் படக்கடை வச்சிட்டு மூடிட்டுப் போயிட்டாங்க தெரியுமா…? இந்தப் படங்களயெல்லாம் எப்டி லேமினேட் பண்ணியிருக்கான் பாருங்க… எங்கயாச்சும் பசை தெரியுதா… எங்கயாச்சும் ஒட்டாம தூக்கிக்கிட்டு நிக்குதா? எந்த எடத்துலயாவது தீற்றியிருக்கானா… கறைபட்டமாதிரி… இருக்காது சார்… இருக்கவே இருக்காது…என்னவோ இதுல அப்டி ஆயிப்போச்சி… என் கெட்ட நேரம…. திட்டுத் திட்டா வேறே நிறையப் படிஞ்சி போச்சி… தாய்ளி… என் பொழப்பக் கெடுத்திட்டான் இன்னைக்கு… இத்தனை பேச்சு கேட்க வச்சிட்டானே….வரட்டும்… அவனச் சவட்டிடுறேன்…

வருத்தத்தோடு முகத்தில் எரிச்சல் தெரிந்தது இப்போது. இவ்வளவு சொல்லியும் இந்த மனுஷன் கேட்கமாட்டேங்குறானே என்ற கடுப்பும் ஏறியிருக்கலாம்.

அந்த சார் வந்தா கொடுத்திடுறான்னு சொல்லி பேசாம வீட்டுலயே நான் ரெஸ்ட் எடுத்திருக்கலாம்… அவன்னா சாமர்த்தியமாப் பேசி கொடுத்தனுப்பிச்சிருப்பான்… அஞ்சு பத்தைக் குறைய வாங்கிக் கூட பேரத்தை முடிச்சிருப்பான்… மொத்தமா காசே வேணாங்கிறேன… கேட்கமாட்டேங்கிறானே ராட்சசன்… நல்லதுக்குக் காலமில்ல…வேறேன்ன சொல்றது? இவனுக்கெல்லாம் இவ்வளவு தாழ்ந்து போறதே தப்புதான் போலிருக்கு…

சார… அந்தப் படத்தைக் இப்டிக் கொடுங்க… எங்கிட்ட இருக்கட்டும்… இந்த லேமினேஷனப் பிரிச்சிட்டு, வேறே ஒண்ணு ஸ்கேன் பண்ணிப் போட்டுத் தரேன்…என் செலவுலயே செய்றேன் சார்…நீங்க ஒண்ணும் பைசா தர வேணாம்… நானே நீட்டா செய்து தரேன்…

அதெப்படிய்யா… ஒரிஜினல் போட்டோ மாதிரி வருமா ஸ்கேன்ங்கிறது? ஃபிலிமிலேர்ந்து எடுக்கிறதுக்கும் எடுத்த போட்டோவ காப்பி பண்றதுக்கும் வித்தியாச மில்லியா…போனது போனதுதான…. பாரு கரெக்டா மூஞ்சி மேல பசை….கரியப் பூசின மாதிரி….

போ… உனக்கு இந்தக் காசு வெளங்காது…அவ்வளவுதான…..

அய்யய்யோ… எனக்கு துட்டே வாணாம் சார்…நீங்க படத்தக் கொண்டு போங்க… கையெடுத்துக் கும்பிட்டான் அவன். வாழ்வில் இப்படி ஒரு நபரை இதற்கு முன் பார்த்திருக்க மாட்டான் போலும். கும்பிடுதலின் கோணம் அதை எனக்கு உணர்த்தியது.

சொன்னது நூறு… கொடுத்ததும் நூறு. அவன் செய்த தப்புக்கு நான் பேசியதே போதும்… மாலை அலுவலகம் விட்டு வந்த என் மனைவியிடம் கூறினேன்.

நல்லாக் குடுத்தனே காசு… நானா ஏமாறுவேன்… அவன் பண்ணின வேலைக்கு… முடியாதுய்யா… உன்னால ஆனதப் பார்த்துக்கன்னு வந்துட்டேன்…

போறுமே… இந்தப் படத்துக்கென்ன குறைச்சல்… கொஞ்சூண்டு பசை உங்க மூஞ்சில ஒட்டியிருக்கு… அவ்வளவுதானே… … இருந்திட்டுப் போகட்டும்… மூஞ்சியே அவ்வளவுதானே….காசு மிச்சம்… என் மூஞ்சியை விட காசு எவ்வளவு பிரதானமாகிவிட்டது அவளுக்கு.

வீட்டில் யார் கண்ணிலும் சட்டென்று படாத ஒரு இடமாகத் தேடிக் கொண்டிருக்கிறேன் அந்தப் படத்தை மாட்ட…!!!.மாட்டத்தான் வேண்டுமா என்று ஒரு யோசனையும் உள்ளது.

ஆனாலும் மனசாட்சி இன்னொன்றை இப்பொழுது அழுத்தி உறுத்திக் கொண்டிருக்கிறது.

கொடுத்ததுதான் கொடுத்தே… அது ஏன் வெளங்காதுன்னு அழுகுணித்தனமா சபிச்சிட்டே கொடுத்தே… கிளம்பும்போது உன் மனசுல இருந்த நேர்மை கொடுக்கும்போது இல்லையே? இதுக்கு உன்னோட இத்தனை பேச்சையும் அமைதியாக் கேட்டுக்கிட்டு, துளிக் கூட டென்ஷனாகாம, காசே வாணாம்னு சொன்ன அவன் எவ்வளவோ பரவாயில்லையே… உண்மையைச் சொல்லி எவ்வளவு மன்றாடியிருக்கான் உன்கிட்டே… அதுவே அவன் தொழில் நேர்மைக்கு அப்பட்டமான சாட்சி…! சரியாச் சொல்லப் போனா உன்னை விட அவன் ஒரு படி மேல்தான…

“டங் ஸ்லிப் “என்கிறார்களே, அந்தக் கண்றாவி இதுதானோ? இது “டங் ரன்னிங் ஸ்லிப்..” என் மனதுக்குள் ஒரு ரம்பம் இன்னமும் அறுத்துக் கொண்டுதான் இருக்கிறது.

இனிமேல் வெளியில் கணிசமாப் பேச்சைக் குறைக்கணும்… இல்லன்னா எங்கயேனும் நிச்சயம் மாட்டுவோம்… நினைத்துக் கொண்டு உஷாரானேன். ●

# உக்ரைன் - ரஷ்ய போர் ஏன் இன்னமும் தொடர்கிறது?



கேணல் ஆர். ஹரிஹரன்

ரஷ்யா உக்ரைன் மீது கடந்த ஆண்டு பெப்ரவரி 24ந் தேதி தொடர்ந்த போர் புத்தாண்டில் தொடர்ந்து நீடிப்பது உலக அளவில் கவலை தரும் விஷயம். ஏற்கனவே, போரின் விளைவாக உக்ரைன் மற்றும் ரஷ்யாவில் இருந்து மற்ற நாடுகளுக்கு கோதுமை,சோளம் மற்றும் பெட்ரோலியம் சார்ந்த எரி பொருட்கள் ஆகியவற்றின் ஏற்றுமதிகள் தடைப்பட்டுள்ளன. அதன் விளைவாக ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் மட்டுமல்ல, ஐரோப்பிய நாடுகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்க பாதுகாப்பு துறை அனுமானப்படி இந்தப் போரில் ஈடுபட்டுள்ள இரு நாடுகளும் ஒட்டு மொத்தமாக இரண்டு லட்சம் வீரர்களை இழந்துள்ளன. ஐ.நா மனித உரிமை ஆணையத்தின் கணிப்பின்படி ஜனவரி 15ந் தேதி வரை அப்போரில் குழந்தைகள் உட்பட 7000 அப்பாவி மக்கள் உயிரிழந்துள்ளார்கள். அமெரிக்காவின் கூற்றுப்படி 20,000 போரில் ஈடுபடாத சாதாரண மக்கள் இந்தப் போரில் உயிர் இழந்துள்ளார்கள்.



உக்ரைனில் போரின் விளைவாக பல முக்கிய நகரங்கள் தரைமட்டமாகியுள்ளன. ஏறத்தாழ ஒரு கோடியே 74 லட்சம் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளதாக ஐ.நா மனித உரிமை ஆணையம் கூறுகிறது.

ரஷ்ய அதிபர் புடின் இந்தப் போரில் ரஷ்யா அணு ஆயுதங்களை உபயோகிக்காது என்று மற்ற நாடுகள் எண்ணக்கூடாது என பல முறை எச்சரித்துள்ளார். அத்தகைய ஆபத்தான சூழ்நிலை இருந்த போதிலும், ஐக்கிய நாடுகள் சபையும் அதற்கு செயலாக்கம் அளிக்கும் பாதுகாப்பு கவுன்சிலும் போரை முடிவுக்கு கொண்டு வர உருப்படியான முயற்சிகள் எதையும் இதுவரை எடுக்கவில்லை.

இதற்கு முக்கிய காரணம், 15 அங்கத்தினர் கொண்ட ஐ.நா. பாதுகாப்பு கவுன்சலின் 'வீட்டோ' உரிமை பெற்ற நிரந்திர அங்கத்தினர்களான அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ரஷ்யா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் செயல்பாடே காரணம். ஆகவே அவர்கள் இணக்கம் இருந்தால்தான் உக்ரைன் போரை முடிவுக் கொண்டு வரமுடியும். அதற்கான முயற்சிகள் எதுவும் பாதுகாப்பு சபையில் இதுவரை வெற்றி பெறவில்லை.

இந்தியாவும் பாகிஸ்தானும் கார்க்கில் போரில் பத்து நாட்கள் மோதிக்கொண்ட போதே, அது அணு ஆயுதப் போராக மாறும் ஆபத்து ஏற்படலாம் என்று ஐரோப்பிய, அமெரிக்க அரசுகள் கூக்குரலிட்டன. ஆனால் அதைவிட பயங்கரமான அணு ஆயுதப் போர் மூளும் சூழ்நிலை உக்ரைனில் நிலவினாலும் அதை இந்த நாடுகள் ஏன் கண்டு கொள்ளவில்லை?

அதற்கு முக்கிய காரணம் தற்போது உலகில் நிலவும் பிரெட்டன்வுட் ஒழுங்கு முறையாகும். இரண்டாம் உலகப்போரின் இறுதி கட்டத்தில், அமெரிக்காவின் தலைமையில் மேற்கத்திய நாடுகள் சர்வதேச பொருளாதாரத்தை வழி நடத்த பிரெட்டன்வுட் ஒப்பந்தத்தை உருவாக்கினர். அந்த ஒப்பந்தத்தின் வாயிலாக உலக நாடுகள் போரைத் தவிர்த்து வாழ பல்வேறு ஒழுங்கு முறைகள் அமைக்கப்பட்டன. அவற்றின் விளைவாகவே அமெரிக்க டாலர் உலக பொருளாதரத்தின் அடிப்படை செலவாணியாக தற்போது கருதப்படுகிறது.

இந்த பிரெட்டன்வுட் ஒழுங்கு முறைதான் இன்று வரை அமெரிக்கா உலகின் ஒரே வல்லரசாக ஆளுமை செய்ய உதவுகிறது. பிரெட்டன்வுட் ஒப்பந்தத்தில் பங்கு பெற அப்போதைய வல்லரசுகளில் ஒன்றான சோவியத் யூனியன் மறுத்து விட்டது. சோவியத் அரசுக்கும் அமெரிக்காவுக்கும் நடந்த பனிப்போருக்கு அதுவும் ஒரு காரணமாகும்.

அந்த பனிப்போர் காலத்தில், ஐரோப்பாவில் சோவியத் யூனியினின் அச்சுறுத்தலை தவிர்க்க, அமெரிக்கா மற்றும் 30 ஐரோப்பிய நாடுகள் அங்கம் வகிக்கும் 'நேட்டோ பாதுகாப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டது. நேட்டோ படைகள் அமெரிக்காவுடன் இணைந்து ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக் போர்களில் பங்கு பெற்றன. நேட்டோ அமைப்பு 1991ல் சோவியத் யூனியன் சிதறுண்ட பிறகு, ஐரோப்பாவில் ஏற்பட்ட பூகோள மற்றும் அரசியல் மாற்றங்களை தனக்கு சாதகமாக உபயோகிக்க ஆரம்பித்தது. ரஷ்யாவால் மீண்டும் ஐரோப்பிய நாடுகளுக்கு அச்சுறுதல் ஏற்படலாம் என்று காரணம் காட்டி, அமெரிக்காவுடன் சேர்ந்து ரஷ்யாவின் எல்லை நாடுகளில் நேட்டோ தன்னை பலப்படுத்தி வருகிறது. இந்த முயற்சியின் முன்னணியில் ரஷ்யாவின் பங்காளி நாடான உக்ரைனும் ஒன்று. அதைக் கண்டு கலக்கம் கொண்ட ரஷ்யா நேட்டோவின் முயற்சிகளை உக்ரைனில் தவிர்ப்பது தனது படையெடுப்புக்கு ஒரு காரணம் என்று கூறிகிறது. இத்தகைய சந்தேக சூழ்நிலையை தவிர்க்க நேட்டோ அமைப்பு இதுவரை எந்தமுயற்சியும் மேற்கொள்ளவில்லை.

அதற்கு மாறாக, நேட்டோ அமைப்பு அமெரிக்காவின் உந்துதலுடன் ரஷ்யாவை எதிர்த்து உக்ரைன் வெற்றி பெற பெருமளவில் பொன்னும், பொருளும், ஆயுதங்களும் அளித்து வருகின்றது. கீல் இன்ஸ்டிடுயூட் என்ற அரசு சாரா அமைப்பு கடந்த ஆண்டு ஜனவரி 24 முதல் நவம்பர் 22 வரை மேற்கொண்ட கணிப்பின் படி, உக்ரைனுக்கு 46 நாடுகள் ஒட்டு மொத்தமாக அளித்த உதவியின் மதிப்பு 109 பிலியன் யூரோ. அந்த உதவியில் அமெரிக்காவின் பங்கு 53 விழுக்காடு ஆகும். இந்த போர் தொடருவதற்கு, இந்த பொருளாதார மற்றும் ஆயுத உதிவிகள் உக்ரைனுக்கு தரும் உந்துதல் மற்றொரு முக்கிய காரணமாகும்.

சீனாவுக்கும் ரஷ்யா இருந்த நெருங்கிய உறவு 1961ல் இருந்து விரிசல் காண ஆரம்பித்த போது அதை அமெ ரிக்க அதிபர் நிக்சன், அமெரிக்காவுக்கு சாதகமாக உபயோகிக்க ஆரம்பித்தார். அவருக்கு பின் வந்த அதிபர்களும் அமெரிக்க-சீன உறவை மேலும் வலுப்படுத்தினர். அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகள் சீனாவில் பெருமளவில் முதலீடு செய்ய, சீனாவில் தொழில் வளர்ச்சி உலக அளவில் பெறுகியது. அமெரிக்கா தனது சீன உறவை, தனது ஒரு முனை உலக ஆதிக்கத்துக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டது.

அமெரிக்க சீன உறவில் ஏற்பட்ட முன்னேற்றத்தை சீனாவும் தனது பொருளாதாரத்தையும் போர்படைகளின் திறனையும் விரிவுபடுத்த உபயோகித்துக் கொண்டது. சீனா தற்போது உலக பொருளாதாரத்தில் வலிமையான நாடுகள் பட்டியலில் இரண்டாம் இடத்தை வகிக்கிறது. அதற்கு ஏற்றார் போல் சீன ராணுவமும் உலகிலேயே வலிமை வாய்ந்ததாக கருதப்படுகிறது.

அமெரிக்காவின் தலைமையில் மேற்கத்திய நாடுகளின் பிரெட்டன்வுட் ஒழுங்குமுறைக்கு எதிரான கருத்து, வளர்ச்சி அதிகம் காணாத உலக நாடுகளில் தொடர்ந்து பல ஆண்டுகளாக பரவி வருகிறது. முக்கியமாக பன்னாட்டு வணிகம் உலக மயமாக்கப் பட்ட பிறகு அதைப் பயன்படுத்தி வளர்ச்சி பெற்ற ரஷ்யா, சீனா, இந்தியா, பிரேசில் மற்றும் தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகள் உலக ஒழுங்குமுறை பாரபட்சமின்றி எல்லா நாடுகளும் பயன்படும் விதமாக மாற்றி அமைக்கப்படவேண்டும் என்று கருதத் தொடங்கின. ரஷ்யா மீண்டும் வலிமை பெறத் தொடங்கி சீனாவுடனான தனது உறவை புதுப்பித்தது. இந்தியாவும் 1962 சீனப் போருக்குப் பின் சிதறுண்ட சீன உறவை புதுப்பிக்க ஆரம்பித்தது. ஆகவே, இந்த நான்கு நாடுகளும் உலகின் பிரெட்டன்வுட் ஒழுங்கு முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பிரிக்ஸ் (பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா, மற்றும் தென் ஆப்ரிக்கா ஆகிய நாடுகளின் ஆங்கில முதல் எழுத்து) என்ற அமைப்பை ஆரம்பித்து 2009 முதல் ஒருங்கிணைந்து செயல்படத் தொடங்கின. இந்த அமைப்பை அமெரிக்காவும் அதன் மேற்கத்திய பங்காளி நாடுகளும் சந்தேக கண்ணுடன் பார்க்க ஆரம்பித்தன.

2013-ம் ஆண்டு ஷி ஜின்பிங் சீனஅதிபராக பதவி ஏற்ற பின்பு உலக ஆளுமை கனவுகள் சீனாவை ஆக்கிரமிக்க தொடங்கின. அதிபர் ஷி படிப்படியாக, சீன கம்யூனிஸ்ட் கட்சி அமைப்பிலும், சீன அரசமைப்பு மற்றும் கம்யூனிச அதிகாரத்தை நிலை நாட்ட உதவும் ராணுவத்தின் உள் அமைப்பிலும் தனது ஆதரவை பலப்படுத்திக் கொண்டார். அதன் பிறகு அவர் எடுத்த மனித உரிமை மீறல்கள் மற்றும் உலக வணிகத்தில் கையாண்ட முறைகளும் மேற்கத்திய நாடுகளிடையே சலசலப்பை ஏற்படுத்தின.

ஹாங்காங், பல ஆண்டுகளாக சீனாவின் ஒரு பகுதி ஆனாலும், ஓரளவு தன்னிச்சையுடன் இயங்கி வந்தது. ஆனால் ஷி தனது ஆளுமையின் கீழ் அதை கொண்டு வர எடுத்த தடலடி முயற்சிகள் மேற்கத்திய நாடுகளிடையே சலசலப்பை எற்படுத்தின. மேலும், தென் சீன கடலில் ஷி சீனாவின் கடல் எல்லையை விரிவாக்கி அதில் உள்ள பல குட்டித் தீவுகளின் மீது தீவிரமாக உரிமை கொண்டாட ஆரம்பித்தார். சிலவற்றை சீனா ஆக்கிரமித்தது. அதனால் சீனாவுடனான உறவை தென் கிழக்கு ஆசிய நாடுகள் சந்தேக கண்ணுடன் பார்க்க ஆரம்பித்தன. தென் சீன கடலில் கோலோச்சி வந்த அமெரிக்க கடற்படை அடிக்கடி சீன போர் விமானங்களையும் போர்கப்பல்களையும் எதிர் கொள்ள ஆரம்பித்தன. இது அமெரிக்காவின் சீன உறவில் விரிசல்களை ஏற்படுத்தின. இப்போது சீனா தைவான் தீவை ஆக்கிரமிப்பதாக பயமுறுத்தி வருகிறது.

மேலும் 2013ல் ஷி சீனாவை ஆசியா மற்றும் ஐரோப்பிய பகுதிகளுடன் இணைத்து, சீனாவின் செல்வாக்கை பெருக்க 'பால மற்றும் சாலை இணைப்பு (Belt and Road Initiative) திட்டத்தை பெரும் அளவில் மேற்கொண்டுள்ளார். இதன் விளைவாக சீனாவின் அரசியல் மற்றும் வணிக செல்வாக்கு தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளில் பெருமளவில் பரவி உள்ளது. அத்தகைய முயற்சிக்கு பாதுகாப்பு அளிக்க சீன போர்கப்பல்கள் இந்திய-பசிபிக் பெருங்கடலில் அதிக அளவில் பிரவேசிக்க தொடங்கி உள்ளன. இந்தியாவின் சீன எல்லையில், சீனப்படைகள் அத்துமீறி பிரவெசிப்பது வழக்கமாகி விட்டது.

சீனாவின் பெருகி வரும் ஆதிக்கத்தை கட்டுக்குள் வைக்க இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் குவாட் என்னும் நாற்கர கட்டமைப்பை அமைத்துள்ளன. இந்த முயற்சியை சீனா தனது ஆளுமைக்கு எதிரான சவாலாகப் பார்க்கிறது.

இத்தகைய சூழ்நிலையில், தொடர்ந்து வரும் உக்ரைன் போரில் உலகின் மூலோபாய பாதுகாப்பு அமைப்புகள் உருமாறி வருகின்றன. அமெரிக்க - ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா மீது திணித்துள்ள பொருளாதார மற்றும் வியாபாரத் தடைகளை பெரும்பான்மையான ஆசிய ஆப்ரிக்க நாடுகள் பின்பற்ற மறுக்கின்றன. இவற்றில் இந்தியா, சீனா, துருக்கி, ஈரான், தென் ஆப்ரிக்கா, சவுதி அரேபியா ஆகிய நாடுகள் அடங்கும். இந்த நாடுகள் தங்கள் நாட்டின் சுய நலனுக்காகவே மையம் அத்தகைய முடிவுகளை எடுக்கின்றன. ஆகவே இந்த நாடுகள் ஒருங்கிணைந்து போரை நிறுத்த முயற்சிப்பார்களா என்பது சந்தேகமே.

ஏனெனில், போரை முடிக்க பேச்சு வார்த்தைகள் துவக்கவே உக்ரைன் முன் வைத்துள்ள நிபந்தனை ரஷ்யா வசம் உள்ள ரஷ்ய வம்சாவளியினிர் வாழும் கிழக்கு உக்ரைன் மற்றும் க்ரிமியா பகுதிகளை விட்டு முழுமையாக அகல வேண்டும் என்பதே. அதற்கு மாறாக, அமைதி பேச்சுவார்த்தைக்கு ரஷ்யாவின் நிபந்தனை - செப்டம்பர் 2022 வரை தான் ஆக்கிரமித்த உக்ரைன் பகுதிகளை தன் வசம் நிரந்தரமாக அளிக்க வேண்டும் என்பதே.

இத்தகைய இழுபறியான சூழ்நிலையில், அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் போரில் வெற்றி காணாவிட்டாலும் ரஷ்யாவின் போர்திறனை அழிக்க கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகின்றன. ஆகவே அவை நேரடியாக போரில் ஈடுபட தயக்கம் காட்டினாலும், பொன்னையும் பொருளையும் அளித்து உக்ரைனை உசுப்பி விட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த சமயத்தில் கோவிட் 19 தொற்று மகாமாரியின் விளைவாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் உலக பொருளாதாரத்தில் மிகப்பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இந்தியா ஓரளவு இதன் தாக்கத்தில் இருந்து தன்னை மீட்டுக் கொண்டாலும், அமெரிக்கா, சீனா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார சரிவு இந்த ஆண்டும் தொடரும் என்பது வல்லுனர்கள் கணிப்பு. உலக பொருளாதார தட்டுப்பாடு உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர ஐ.நாவை ஊக்குவிக்குமா? அதுவும் சந்தேகமே. ஆகவே வரும் மாதங்களில் போரின் உக்கிரம் குறைந்து, இரு நாடுகளும் களைத்தாலும் சீற்றம் காட்டுவதில் குறைவு இருக்காது.

இந்த இழுபறி இன்னும் எவ்வளவு காலும் நீடிக்கும்? தற்போது, போரின் போக்கை அனுமானிக்க, ஜெலன்ஸ்கி மற்றும் புடின் ஆகியோரின் ஜாதகத்தை டி.வி.ஜோசியர்தான் பார்க்க வேண்டும்.

# வீதியில் குப்பை வீசுவதை எதிர்த்தவரை காரில் ஒரு கி. மீ. இழுத்து சென்றவர் கைது!

கொழும்பு, பெப். 05

சொகுசு காரில் வந்து வீதியோரத்தில் குப்பை பொதியை வீசிவிட்டு சென்றவருக்கு எதிர்ப்பு தெரிவித்த ஒருவர் காரின் முன்பகுதியில் விழுந்த போது, அவர் ஆபத்தான நிலையில் சிக்கியதையும் பொருட்படுத்தாமல் ஒரு கிலோமீற்றர் தூரம் பயணித்த சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு - ஹோமாகம - ஹபரகட சந்தியில் காரொன்று குப்பைப் பொதியை விட்டுச் செல்ல முற்பட்ட போது, முச்சக்கர வண்டி சாரதிகள் சிலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

அவர்கள் காரை சூழ்ந்து எதிர்ப்பு தெரிவித்ததுடன், வீசப்பட்ட பொதியை மீள எடுக்குமாறு, கார் சாரதியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தகராறில் ஈடுபட்ட கார் சாரதி, திடீரென காரை இயக்கி செலுத்தினார். இதன்போது காரின் அருகில் நின்று சாரதியுடன் தகராறில் ஈடுபட்ட முச்சக்கர வண்டி சாரதியொருவர் காரை நிறுத்த முயன்றார். இதன்போது, அவர் காரின் “பொனட்“டில் விழுந்துள்ளார்.

காரின் பொனட்டில் ஒருவர் விழுந்து தவித்துக் கொண்டிருந்த நிலையிலும், காரை நிறுத்தாமல் சாரதி செலுத்திச் சென்றார். ஒரு கிலோமீற்றர் தூரம் தப்பிச் சென்ற கார் பனாகொடையில் மோட்டார் சைக்கிள் மீது மோதி நின்றது.

காரை விரட்டி வந்த முச்சக்கரவண்டி சாரதிகள் குழு, கார் சாரதியை பிடித்து நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். காரின் முன்பகுதியில் சிக்கியிருந்தவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

முச்சக்கரவண்டியின் சாரதி ஒருவலைப் பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், அவரது நிலைமை மோசமாக இல்லை எனவும் மருத்துவ மனை பேச்சாளர் தெரிவித்தார்.

(ஐ)



# தியாகி திலீபன் நினைவிடத்தில் மணவாழ்வில் இணைந்த தம்பதி!

யாழ்ப்பாணம், பெப். 05

யாழ்ப்பாணத்தில் புதுமண தம்பதியர் தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபியில் நேற்று அஞ்சலி செலுத்தி தமது மண வாழ்வை ஆரம்பித்துள்ளனர்.

தமிழ் மீதும் தமிழர்கள் தியாகத்தின் மீதும் அவர்கள் கொண்ட பற்றால் தாம் இவ்வாறு நடந்து கொண்டனர் என்று அவர்கள் தெரிவித்தனர்.

விவேகானந்தா தமிழ்ஈசன், போசிந்தா ஆகியோரே இவ்வாறு திருமண பந்தத்தில் இணைந்தனர். தமிழ்ஈசன் தனியார் துறை ஆசிரியராக கடமையாற்றி வருகின்றார்.

இவர்களின் திருமணத்துக்கு சமூக ஊடகங்களிலும் நேரிலும் பலரும் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர். (ஐ)

# வெள்ளை வானில் கடத்தப்பட்டவர் சித்திரவதைகளின் பின் கொலை!

கொழும்பு, பெப். 05

24 வயது நபர் ஒருவரை வெள்ளை வானில் கடத்திச் சென்ற குழு அவரை கடுமையாகத் தாக்கி சித்திரவதை செய்து கொலை செய்துள்ளது என்று தெமட்டகொடை பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

கொழும்பு -மாளிகாவத்தை - தெமட்டகொட லக் ஹிரு செவன அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் இந்த இளைஞனை ஒரு குழுவினர் விசாரணை செய்யவுள்ளதாகக் கூறி கடத்தியுள்ளனர்.

கடத்தப்பட்ட இளைஞன் கடுமையாகத் தாக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு அன்றைய தினம் ஏழு மணியளவில் அவர் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்புக்கு முன்பாக விடப்பட்டுள்ளார். பின்னர், கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் இந்த இளைஞன் உயிரிழந்தார்.

சம்பவம் தொடர்பில் தெமட்டகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெல்லம்பிட்டி கொலை; நான்கு பேர் கைதாகினர்

கொழும்பு, பெப். 05

பாதாள உலகக் குழுவை சேர்ந்த பிரசாத்தின் சகோதரன் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, மகன் இருவரும் அடங்குவர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் கொலைக்கு பயன்படுத்திய இரண்டு வாள்கள் மற்றும் சந்தேக நபர்கள் கொலைக்காக வந்த காரும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த வருடம் ஜூலை மாதம் 25 ஆம் திகதி கொழும்பு - வெல்லம்பிட்டி ஒருகொடவத்த மேம்பாலத்தின் கீழ் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. (ஐ)

கல்வி tv CHANNEL-1

**05.02.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**05.02.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# 75ஆவது சுதந்திர தினவிழா கொண்டாட்டம்









## தென்னிலங்கையில்...

(08ஆம் பக்கத் தொடர்ச்ச)

அவரது அரசாங்கத்தில் பங்கேற்காவிட்டாலும் முழுவீச் சில் முன்னெடுக்கப்பட்ட போரை உறுதியாக ஆதரித்தது.

ஜே.வி.பி. இந்த சுருக்கமான வரலாற்றுக் குறிப்பு தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான எந்த முயற்சியையும் ஒருபோதுமே ஆதரிக்காத -சிறுபான்மைச் சமூகங்களின் நியாய பூர்வமான அரசியல் அபிலாசைகளை ஆதரிக்கின்ற முற்போக்கு சக்திகளுடன் தன்னை ஒருபோதுமே அடையாளம் காட்டிக்கொள்ளாத ஓர் அரசியல் கட்சியாக அதை வெளிச்சம் போட்டுக்காட்டுகிறது.

இந்த நேர்மறையான வரலாற்றை மாற்றியமைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது என்பதை ஜே.வி.பி. யின் இன்றைய தலைவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். காலமாற்றம் வேண்டிநிற்கும் அரசியல் கடமையை நிறை வேற்ற அவர்கள் தொலைநோக்குடன் செயற்படக் கூடியதாக துணிவாற்றலை வரவழைத்துக்கொள்ள வேண்டும். இலங்கையின் இன்றைய அரசியல் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு காலங்காலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த இனவாத அரசியலும் முக்கியமான ஒரு காரணி என்பதை அவர்கள் சிங்கள மக்களுக்கு விளங்கவைக்க வேண்டும்.

இலங்கை அதன் வரலாற்றில் கண்டிராத பொருளாதார நெருக்கடிக்கும் அரசியல் குழப்பங்களுக்கும் காரணமான ராஜபக்சாக்களின் தவறான ஆட்சிமுறைக்கு எதிரான கடந்த வருடத்தைய மக்கள் கிளர்ச்சியின்போது இனவாத அரசியலின் பாதகங்கள் பற்றிய ஒரு புரிதல் தென்னிலங் கையில் ஓரளவுக்கு ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்டன.

ராஜபக்சாக்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவருவதற்கு பெரிதும் காரணமாக இருந்த கடும்போக்கு சிங்கள தேசியவாத சக்திகள் அப்போது பதுங்கிக் கொண்டன. ராஜபக்சாக்களுக்கு எதிராக சிங்கள மக்கள் கிளர்ந்தெழுந்ததை அந்த சக்திகளினால் சீரணிக்கமுடியவில்லை. மீண்டும் தலைகாட்டுவதற்கான சந்தர்ப்பம் ஒன்றுக்காக அவர்கள் காத்திருந்தார்கள். இப்போது 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது பற்றி ஜனாதிபதி விக்கிரமசிங்க பேசுகின்ற சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அந்த கடும்போக்கு சிங்கள தேசியவாத சக்திகள் சமூகங்களுக்கிடையில் குரோதங்களை வளர்க்கும் தங்களது நச்சுத்தனமான பிரசாரங்களை படிப்படியாக அதிகரிப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. இதனால் மீண்டும் பெரும்பான்மையினவாத அணிதிரட்டலுக்கான சூழ்நிலைகள் தோன்றும் ஆபத்து இருக்கிறது. இது மக்களினால் அதிகாரத்தில் இருந்து விரட்டப்பட்ட ராஜபக்சாக்களுக்கும் அவர்களுக்கு ஆதரவான அரசியல் சக்திகளுக்குமே அனுகூலமாக அமையும்.

அத்தகைய சூழ்நிலை தோன்றுவதை தடுப்பதற்கு சிங்கள மக்கள் மத்தியில் ஆரோக்கியமான பிரசாரங்களை முன்னெடுக்கக்கூடிய அரசியல் இயக்கக் கட்டமைப்பு ஜே.வி.பி.யிடம் இருக்கிறது. பெரும்பான்மையினவாத அணிதிரட்டல் எப்போதுமே தவறான ஆட்சிமுறையையும் ஊழல் மோசடிகளையும் அதிகார துஷ்பிரயோகத்தையும் மூடிமறைப்பதற்கே பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. ராஜபக்சாக்களின் வீழ்ச்சியை பெரும்பான்மையினவாத அணிதிரட்டலின் தோல்வியாகவும் நோக்கவேண்டும். அத்தகைய அணிதிரட்டல் சிங்கள மக்களுக்கு எந்த பயனையும் கொண்டுவரவில்லை. மாறாக நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்து மக்களை அது நடுத்தெருவுக்குத்தான் கொண்டு வந்திருக்கிறது.

அதனால், மீண்டும் நாட்டின் அரசியல் திசை மார்க்கத்தை பேரினவாத சக்திகள் தீர்மானிக்கக் கூடிய நிலைமை தோன்ற அனுமதிக்கக்கூடாது. இதில் ஜே.வி.பி.பெரும் பங்களிப்பைச் செய்ய முடியும்.

## பாகிஸ்தான் தூதுவருடன் வர்த்தக சபையினர் சந்திப்பு

கொழும்பு, பெப். 05

இலங்கை - பாகிஸ்தான் வர்த்தக சபையின் தலைவர் தெய்வநாயகம் மற்றும் அதன் உறுப்பினர்கள் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரை நேற்று நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையில் வர்த்தகம் மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை மேம்படுத்துவதற்காக வர்த்தக சபையினால் திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு நடவடிக்கைகள் மற்றும் முன்முயற்சிகள் குறித்து உயர்ஸ்தானிகருக்கு இதன் போது விளக்கமளிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக, பாகிஸ்தானில் உள்ள வணிக வாய்ப்புகளை கண்டறிய வர்த்தக சபை இவ்வருடம் மார்ச் தொடக்கத்தில் பிரதிநிதிகள் குழு ஒன்றை பாகிஸ்தானுக்கு அனுப்பவும் திட்டமிட்டுள்ளது.

இதன்போது தற்போதைய பொருளாதார சூழ்நிலையின் பின்னணியில் இரு தரப்பு வர்த்தகத்தை மேம்படுத்துவது சம்பந்தமாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

தற்போதைய சவால்களுக்கு மத்தியிலும் இலங்கையில் இருந்து இறக்குமதியை இலகுபடுத்துவதற்கு பாகிஸ்தான் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை வர்த்தக சபை வரவேற்றது.

அனைத்து தரப்பு ஒத்துழைப்பிலும் இலங்கையுடனான தனது உறவுகளுக்கு பாகிஸ்தான் தொடர்ந்து முன்னுரிமை அளிக்கும் என்று உயர்ஸ்தானிகர் வலியுறுத்தினார்.

பாகிஸ்தான் தனது வர்த்தக, வணிக மற்றும் பொருளாதார உறவுகளை மென்மேலும் மேம்படுத்த விரும்புகின்ற மிக முக்கியமான பிராந்திய நாடாக இலங்கை கருதப்படுவதாக உயர்ஸ்தானிகர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய, வணிக வீசா விண்ணப்பங்கள் 24 - 48 மணி நேரத்துக்குள் உயர் ஸ்தானிகராலயத்தால் முன்னுரிமை அடிப்படையில் வெளியிடப்படுகின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

இதன்போது பாகிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் வர்த்தகம் மற்றும் முதலீட்டு இணைப்பாளரான திருமதி. அஸ்மா கமால், பாகிஸ்தானில் வர்த்தக அமைச்சகம், பாகிஸ்தான் அரசாங்கம் மற்றும் பாகிஸ்தானின் வர்த்தக மேம்பாட்டு ஆணையம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்படும் பல்வேறு துறை சார்ந்த வர்த்தக கண்காட்சிகள் குறித்து பங்கேற்பாளர்களுக்கு விளக்கமளித்தார்.

## போராட்டத்துக்கு...

யாழ்.நகரம் உட்பட மாவட்டத்தி லுள்ள சகல நகரங்களிலும் வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு ஹர்த்தா லுக்கு வர்த்தக சமூகம் ஆதரவு தெரிவித் துள்ளது.

மேலும் யாழ். நகரிலிருந்து இடம் பெறும் தனியார் பேருந்து சேவைகள் இடம்பெறவில்லை. இ.போ.ச சேவை கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயங் கின என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போராட்டங்களால்...

இந்தப் பேரணியில் பல நூற்றுக் கணக்கானவர்கள் தொடர்ச்சியாக பங் கேற்றுள்ளனர். இதேசமயம், பல இடங் களிலும் மக்கள் பெருந்திரளாகப் பங் கேற்றனர்.

இதேநேரம், யாழ்ப்பாணம், முல் லைத்தீவு, மன்னார், வவுனியா, கிளி நொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நேற்று போராட் டங்கள் நடைபெற்றன. இதேசமயம், தமிழ் மக்கள் அதிகம் வாழும் பகுதி களில் கடைகள் மூடப்பட்டு பல இடங் களிலும் கறுப்புக் கொடிகளும் பறக்க விடப்பட்டிருந்தன.

வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப் பட்ட போராட்டங்களின்போது அந்தப் பகுதிகளில் ஆயுதம் ஏந்திய பொலிஸ், இராணுவத்தினர் கண்காணிப்பு நட வடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த மையை அவதானிக்க முடிந்தது. (ஐ)

(தொடர்புடைய செய்திகள் - படங்கள் 2, 4, 12ஆம் பக்கங்களில்)

## யாழிலிருந்து...

முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான இந்தப் பேரணி நாச்சிமார் கோயிலை அடைந்து அங்கிருந்து காங்கேசன்துறை வீதி வழியாக யாழ். நகரை அடைந்து தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலை நினைவுத்தூபியில் அஞ்சலி செலுத்திய தைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் கச் சேரியை அடைந்தது.

அங்கு எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், தொடர்ந்து செம் மணியை அடைந்தனர். அங்கு இராணு வத்தினரால் படுகொலை செய்யப்பட்ட கிருஷாந்திக்கு அஞ்சலி செலுத்தியதைத் தொடர்ந்து ஏ- 9 நெடுஞ்சாலை வழியே சாவகச்சேரி நகரத்தைத் தொடர்ந்து வாகனங்களில் பேரணி ஆரம்பமானது.

சாவகச்சேரி நகரப் பகுதியில் மக்களின் ஆதரவுக்கு மத்தியில் நகர்ந்த பேரணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ரவிராஜின் சிலைக்கு முன்பாக அஞ்சலி செலுத் தியது. இதைத் தொடர்ந்து நகர்ந்த பேரணி பரந்தனை அடைந்து கிளி நொச்சி நகரை அடைந்தது.

நகரப் பகுதியை அடைந்ததும் நடைபயணமாக ஆரம்பித்த பேரணி யுடன் கந்தசுவாமி கோயிலில் காத்தி ருந்த பலநூறு மக்கள் இணைந்தனர். இந்தப் பேரணி கோஷங்களை எழுப்பியவாறு இரணைமடு சந்திவரை நகர்ந்தது. இரவு 7 மணியளவில் இரணைமடு சந்தியில் போராட்டம் நிறைவடைந்தது.

நீண்ட இந்தப் பேரணி இராணுவ முகாம்களின் அருகே சென்றபோது, இராணுவமே வெளியேறு என்று முழக்கமிட்டது. பேரணி நகர்ந்தபோது இராணுவத்தினர், பொலிஸார், புல னாய்வு பிரிவினர் என்று பலர் போராட் டக்காரர்களை அச்சுறுத்தும் வகையில் செயல்பட்டனர். அத்துடன், போராட் டக்காரர்களை காணொலி, ஒளிப்படம் எடுத்துக் கொண்டனர்.

இந்தப் போராட்டத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்களுடன் தவத்திரு வேலன் சுவாமிகள், பாராளுமன்ற உறுப்பினர்க ளான செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சிறீதரன் மற்றும் எம். கே. சிவாஜிலிங்கம், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் அரசியல்வாதிகள் எனப் பலரும் பங்கேற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அதிக பாதுகாப்பு ஏற்பாட்டுடன் சுதந்திர தினக் கொண்டாட்டம்!

கொழும்பு, பெப். 05

நாட்டின் 75ஆவது சுதந்திர தின விழா உச்ச பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று காலிமுகத்திடலில் கொண்டா டப்பட்டது.

காலி முகத்திடலில் பிரதான நிகழ்வு கள் ஆரம்பமாவதற்கு முன்னர் டி. எஸ். சேனாநாயக்கவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. அத்துடன், ஜனாதிபதி அலுவலகத்துக்கு முன்னால் அமைந்துள்ள சுதந்திர வீரர்கள் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தப் பட்டது.

**பலத்த பாதுகாப்பு**

தேசிய சுதந்திர தின நிகழ்வுகளுக்கு உயர் பாதுகாப்பு வழங்கப்பட்டது. காலிமுகத்திடலுக்குச் செல்லும் பிரதான வீதிகளில் பெருமளவான பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப் பட்டிருந்தனர்.

காலிமுகத்திடலிலிருந்து கொள்ளுப் பிட்டி சந்தி வரையான பகுதிகளில் சில இடங்களில் நீர்த்தாரை பிரயோக வாக னத்துடன் கலகம் அடக்கும் பிரிவினரும் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**பிரமுகர் வருகை**

பிரதான நிகழ்வுகள் ஆரம்பமாவதற்கு முன்னர் பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்ரமரத்ன, விமானப்படை தளபதி எயா மார்ஷல் எஸ்.கே.பத்திரண, கடற் படை தளபதி வைஸ் அத்மிரல் பிரியந்த பெரேரா, இராணுவ தளபதி ஜெனரல் விக்கும் லியனகே மற்றும் பாதுகாப்பு பதவிநிலைப் பிரதானி ஜெனரல் சவேந் திர சில்வா ஆகியோர் வருகை தந்தனர்.

மேலும், பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன, பிரதமர் மற்றும் ஜனாதிபதியின் செய லாளர்கள், மேல் மற்றும் வடமேல் மாகாண ஆளுநர்கள், பாதுகாப்பு, உள் நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச் சர்கள், பிரதம நீதியரசர், சபாநாயகர் உள்ளிட்டோரும் வருகை தந்தனர்.

**வெளிநாட்டு இராஜதந்திரிகள்**

இந்திய வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் வ.முரளிதரன், பாக்கிஸ்தான் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஹீனா ரப்பானி, ஜப்பான் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் டகெய் ஷூன்சுகே, பூட் டான் கல்வி மற்றும் திறன்விருத்தி



அமைச்சர் ஜெய்பர் ராய், பொதுநலவாய நாடுகளின் செயலாளர் நாயகம் பெட் ரீசியா ஸ்கொட்லண்ட், நேபாள வெளி விவகார அமைச்சர் பிமலா ராயி பௌடி யால், மாலைதீவு வெளிவிவகார அமைச் சர் அப்துல்லாஹ் ஷஹீத், பங்களாதேஷ் வெளிவிவகார அமைச்சர் ஏ.கே.அப்துல் மூமன் ஆகியோர் பங்கேற்றனர்.

**ஜனாதிபதி வருகை**

இராஜதந்திரிகளின் வருகையை தொடர்ந்து 8.15 மணியளவில் ஜனாதி பதி ரணில் விக்ரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் வருகை தந்தனர். ஜனாதிபதி தேசிய கொடியை ஏற்றியமையை தொடர்ந்து சுதந்திர தின நிகழ்வுகள் உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன. இதன்போது 105 பாடசாலை மாணவர்க ளால் தேசிய கீதம் மற்றும் ஜயமங்கள கீதமும் பாடப்பட்டது.

**மௌன அஞ்சலி**

இலங்கையின் சுதந்திரம், தேசிய ஒரு மைப்பாடு, இறைமை, ஒற்றுமை என்ப வற்றின் நிலைப்பாட்டின் பொருட்டு உயிர் நீத்த சகல தேசாபிமானிகளையும் நினைவுகூருவதற்காக இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

**பீரங்கி வேட்டுக்கள்**

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மரியாதை செலுத்தும் வகையில் அனை வரும் ஆசனங்களிலிருந்து எழுந்து நிற்க 21 மரியாதை பீரங்கி வேட்டுக்கள் தீர்க் கப்பட்டன.

**அணிவகுப்பு**

இராணுவம், கடற்படை, விமா னப்படை, பொலிஸ், சிவில் பாதுகாப்பு படை, தேசிய மாணவர் படையணி உள்ளிட்டவற்றின் மரியாதை அணி வகுப்பு இடம்பெற்றது. இதில், 3,284 தரைப்படையினர், 867 கடற்படையி னர், 695 விமானப் படையினர், 336 பொலிஸார், 220 அதிரடிப் படையினர், 437 சிவில் பாதுகாப்பு படையினர், 546 தேசிய மாணவர் படையினர், ஓய்வு பெற்ற மற்றும் அங்கவீனமுற்ற படை யினர் ஆகியோர் பங்கேற்றனர்.

எவ்வாறிருப்பினும், இம்முறை வழமையாக இடம்பெறும் கலை நிகழ்வு கள் (நடனங்கள்) நடைபெறவில்லை.

**பரஷூட் சாகசம்**

நிகழ்வின் இறுதிக்கட்டத்தில் சுதந்திர நிகழ்வில் முதன்முறையாக முப்படை யினர், பொலிஸார் உள்ளிட்டோரால் பரஷூட் சாகசங்கள் நிகழ்த்தப்பட்டன. சுமார் 7000 அடி உயரத்தில் தேசிய கொடி, முப்படைகளின் கொடி மற்றும் பொலிஸ் கொடியை ஏந்தியவாறு பரஷூட் சாகசம் நிகழ்த்தப்பட்டது. (ஐ)

## வாணி...

கூறப்படுகிறது. இவருக்கு, இந்தியாவின் உயரிய விருதுகளில் ஒன்றான பத்ம பூஷன் விருது இந்திய குடியரசு தினத்தன்று அறிவிக்கப்பட்டிருந்தது.

கலைவாணி என்ற இயற்பெயர் கொண்ட வாணி ஜெயராம் தமிழ்நாடு வேலூரை சேர்ந்தவர். கர்நாடக இசை குடும்ப பின்னணியை சேர்ந்த இவர் 1971ஆம் ஆண்டு திரை இசைப் பாடல்களை பாட ஆரம்பித்தார்.

1974இல் இவர் பாடிய “மல்லிகை என் மன்னன் மயங்கும்”, பாடல் மூலம் அதிகம் அறியப்பட்டார். தொடர்ந்து மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஹிந்தி, மராத்தி, குஜராத்தி, பெங்காளி எனப் பல மொழிகளில் சுமார் 10 ஆயி ரத்துக்கும் மேற்பட்ட பாடல்களை பாடியுள்ளார்.

இலங்கையில் தமிழரின் விடுதலைப் போராட்டம் தீவிரம் பெற்ற 80களின் பிற்பகுதியில் புரட்சி பாடல்கள் பிரபல மடைந்த காலத்தில் இவர் பல பாடல் களை பாடினார். இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலத்தில் அவர்களின்செயல்களை விமர்சிக்கும் விதமான பாடல்களையும் அவர் பாடியிருந்தார். இதனால், அக் காலத்தில் இந்திய ஆட்சியாளர்களின் அதிருப்தியையும் சம்பாதித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 75ஆவது சுதந்திர நாளில் தெற்கிலும் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, பெப். 05

நாட்டின் 75 ஆவது ஆண்டு சுதந்திர தினமான நேற்று வடக்கு கிழக்கில் மட்டுமின்றி தலைநகர் கொழும்பிலும் போராட்டங்கள் நடைபெற்றன. அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்தப் போராட்டங்கள் நடைபெற்றன.

நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளா தார நெருக்கடி, மக்கள் உண்மையான சுதந்திரத்தை அனுபவிக்கின்றனரா? ஊழல் மோசடிக்காரர்கள் சுதந்திரமாக நாட்டில் சுற்றித் திரிகின்றனர் என பதாகைகளை ஏந்தியபடியும், கோஷங் களை எழுப்பியபடியும் போராட் டக்காரர்கள் தமது எதிர்ப்பை வெளிப் படுத்தினர்.

**கொழும்பில் ஆர்ப்பாட்டம்**

கொழும்பு, எல்பின்ஸ்ட் அரங்குக்கு முன்னால் நேற்று முன்தினம் இரவு ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்களை கலைப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர். இதன்போது பெரும் களே பரம் ஏற்பட்டது. பலர் கைது செய்யப் பட்டனர். (தொடர்புடைய செய்தி பக்கம் 05இல்)

**பௌத்த மதகுருமார்கள் எதிர்ப்பு**

இதேவேளை, பாராளுமன்றத்துக்கு நுழையும் பத்தரமுல்லை தியத்த உய னவுக்கு அருகே பௌத்த மத குருமார்கள் பலர் ஒன்றிணைந்து அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தை முன்னெ டுத்தனர். இதன்போது சிவில் சமூகத்தி னர் பலரும் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிக்காட்டினர்.

**அமைதி போராட்டம்**

கொழும்பு 10 , மருதானையிலுள்ள சீ.எஸ். ஆர். நடுநிலைய கத்தோலிக்க அருட் தந்தையர்களால் ஏற்பாடு செய் யப்பட்ட அமைதிவழி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த அமைதி வழி போராட்டத்தில் கத்தோலிக்க அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகள் பலரும் பங்கேற்று அரசாங்கத்துக்கு எதிரான பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

## கிளிநொச்சி...

மாவட்டங்களிலிருந்து வருகை தரும் பேரணிகள் இணைந்துகொள்ளும். இதையடுத்து காலை 9 மணியளவில் பரந்தன் சந்தியிலிருந்து நகரும் பேரணி விசுவமடு - புதுக்குடியிருப்பு ஊடாக இறுதிப் போரில் தமிழின் அழிப்பு இடம்பெற்ற முள்ளிவாய்க்காலை சென்றடையும்.

அங்கு அஞ்சலி செலுத்திய பின்னர் அங்கிருந்து முல்லைத்தீவு நகரத்தை அடைந்து போராட்டம் நிறைவடை யும். (ஐ)

## ஒற்றையாட்சி...

உரையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், வடக்கு, கிழக்கு மக்கள் எதிர்நோக்கும் விசேடமான பிரச்னைகள் தொடர்பில் உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அதற்கான அமைச்சரவை உபகுழுவை ஏற்கனவே நியமித்துள் ளோம். அங்கு எடுக்கப்படும் தீர்மா னங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தப் படும் காலப்பகுதி, அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் அறிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஜனாதிபதியின் முழு உரை பக்கம் 3இல்)

## தமிழில்...

தேசிய பாடசாலை, கொழும்பு இந்து கல்லூரி மாணவர்கள் தேசிய கீதத்தை தமிழில் இசைத்தனர்.

கடந்த 2020ஆம் ஆண்டின் பின்னர் இம்முறை தேசிய சுதந்திர தின நிகழ்வில் தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக் கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# வவுனியா சிறையிலிருந்து ஐந்து கைதிகள் விடுதலை!



வவுனியா, பெப். 05

நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு வவுனியா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒரு பெண் கைதி உட்பட ஐவர் விடுதலை செய்யப்பட்டனர்.

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் இருந்து 622 கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

சிறு குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு பொது மன்னிப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

வவுனியா சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ். இந்திரகுமார் தலைமையில் பிரதான சிறைச்சாலை சிறைக்காவலர் சந்திரசிறி மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலுடன் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து ஒரு பெண் கைதி உட்பட ஐவர் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

# போதைப்பொருள் விருந்து; 9 பெண்களுட்பட 34 பேர் கைது!

கொழும்பு, பெப். 05

முகநூல் மூலம் ஒன்றிணைக்கப்பட்ட போதைப் பொருள் விருந்து ஒன்றை சுற்றிவளைத்த பொலிஸார் 34 பேரை நேற்று கைது செய்தனர்.

பாணந்துறை, ஹோரதுடுவ பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த விருந்தில் கைது செய்யப்பட்டவர்களில் 9 பெண்களும் உள்ளனர் என்று பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சோதனையின் போது சந்தேகநபர்கள் வசம் இருந்த கஞ்சா போதைப்பொருள் மற்றும் மதுபானங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

பிரதான சந்தேகநபர்கள் குழுவை பாணந்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளனர் என்றும் ஏனையோரை பொலிஸ் பிணையில் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டனர். (ஐ)

# 37,500 சிறார்களுக்கு முன்பள்ளி கட்டணம்!

கொழும்பு, பெப். 05

முன்பள்ளி கட்டணத்தை செலுத்த முடியாத நிலையிலுள்ள 37 ஆயிரத்து 500 சிறார்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாயை முன்பள்ளிக் கட்டணமாக அரசாங்கம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தக் கொடுப்பனவு அவர்களின் பெற்றோருக்கு வழங்கப்படும் என்று ஆரம்பக் குழந்தைப் பருவ அபிவிருத்தித் திட்டத்தின் பணிப்பாளர் சந்திரலால் பிரேமகுமார தெரிவித்தார்.

முன்பள்ளிக் கட்டணத்தை செலுத்த முடியாதவர்கள் அதிகளவில் இருப்க்கின்றனர் என்று தெரியவந்துள்ளது. அந்தக் குழுவில், முன்பள்ளி பெற்றோர் குழுக்களின் மூலம் அடையாளம் காணப்பட்ட கடினமான பொருளாதார நிலைமைகளைக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த 37 ஆயிரத்து 500 குழந்தைகளுக்கு உலக வங்கி உதவியின் அடிப்படையில் மாதம் ஆயிரம் ரூபாய் வீதம் நிவாரணம் வழங்கப்படும்.

ஒரு முன்பள்ளியிலிருந்து அதிகபட்சமாக ஐந்து பிள்ளைகள் தெரிவு செய்யப்படுவார்கள் என ஆரம்பக் குழந்தைப் பருவ அபிவிருத்தித் திட்டத்தின் பணிப்பாளர் சந்திரலால் பிரேமகுமார மேலும் தெரிவித்தார். (ஐ)






# சுதந்திர தினமல்ல கரிநாளே! முல்லைத்தீவில் போராட்டம்!!

முல்லைத்தீவு, பெப். 05

**சுதந்திர தினமான நேற்று முல்லைத்தீவு மாவட்டத்தில் கரிநாள் அனுஷ்டிக்கப்பட்டது. இதையொட்டி பெருமளவான மக்கள் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றையும் முன்னெடுத்திருந்தனர்.**

நாட்டின் 75ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் நேற்று தென்னிலங்கை யில் கொண்டாடப்பட்ட அதே சமயம், வடக்கு - கிழக்கு மாகா ணங்களில் வாழும் மக்கள் நேற்று கரிநாளாக இந்நாளை கடைப்பிடித் தனர்.

அந்த வகையில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பல்வேறு பகுதிக ளிலும் எதிர்ப்பு போராட்டங்கள் இடம்பெற்று வருவதோடு வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டு கறுப்பு கொடிகள் தொங்க விடப்பட்டு கறுப்பு தினமாக முன்னெடுக்கப்பட் டது.

இந்தநிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த கவனவீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

முற்பகல் 11 மணியளவில் முல் லைத்தீவு சந்தைக்கு அருகாமையில் இருந்து ஆரம்பமான கவனவீர்ப்பு பேரணி முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக நிறைவடைந்தது.

இந்தப் போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணி காண்டீபன் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் கட்சி முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (ஐ)

# ஜானக ரத்நாயக்கவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை!

கொழும்பு, பெப். 05

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜானக ரத்நாயக்கவுக்கு எதிராக 14 அம்சங்கள் கொண்ட குற்றப்பத்திரிகையை சமர்ப்பிக்க மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சு தயாராகி வருகிறது.

இந்தக் குற்றப்பத்திரிகை நேற்று முன்தினம் சட்ட வரைவு திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சட்ட வரைவுத் திணைக்களத்தின் சட்டத்தின் பிரகாரம் குற்றப் பத்திரிகையை தயாரித்த பின்னர், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர அதனை அடுத்த வாரம் 8 ஆம் திகதிக்கு பின்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

## மருதானை போராட்டம்:
# கைதானோரை பார்வையிட சட்டத்தணிகளுக்கும் மறுப்பு!

கொழும்பு, பெப். 05

மருதானையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவேளை நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட ஆர்ப்பாட்டக்காரர்களை சட்டத்தரணிகள் பார்ப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுதந்திர தினத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து மருதானையில் நேற்றுமுன்தினம் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைதுசெய்யப்பட்டமை குறித்து அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்களை சட்டத்தரணிகள் பார்ப்பதற்கு அனுமதி மறுப்பது 2018 பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல் தொடர்பான சட்டத்தை நேரடியாக மீறும் செயல் என சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சுதந்திரமும் விடுதலையும் மக்களுக்கானது அதிகாரத்தில் உள்ளவர்களுக்கானது இல்லை எனவும் சாலிய பீரிஸ் தெரிவித்துள்ளார். (ஐ)

# இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதி!

கொழும்பு, பெப். 05

முட்டை இறக்குமதி தொடர்பில் இந்திய விநியோகஸ்தர்களால் வழங்கப்படவுள்ள அறிக்கைகள் நேற்று பெறப்பட்டதாக அரச வர்த்தக பல்வேறு நியதிசார் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கைகள் பரிசீலனையின் பின்னர் கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறைக்கு அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படும்.

இதன்பின்னர், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை ஒப்புதல் கிடைக்கப்பெற்ற பின்னர், முட்டை இறக்குமதி செய்யும் பணி உடனடியாக தொடங்கப்படவுள்ளது. (ஐ)

# மரண அறிவித்தல்



## திருமதி
## செல்வராசா சந்திரமணி

கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும், திருகோணமலை மற்றும் பிரான்ஸ் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட செல்வராசா சந்திரமணி கடந்த 24-01-2023 செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார், காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை – மகேஸ்வரி (பிரான்ஸ்) தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் – பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வராசா(தொல்புரம் – வட்டுக்கோட்டை) அவர்களின் பாசமிகு மனைவியும், செல்வராணி(சாந்தி – லண்டன்), சந்திரசேகரம் (குமார் – VT Cash and Carry – பிரான்ஸ்), சுதாகரன் (சுதா – பிரான்ஸ்), சுரேஸ்குமார் (பிரபா, வாகீசன் – பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும்.சுந்தரானந்தம் (லண்டன்), கஜந்தா(கஜி), பிராகாசினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, பத்மாவதி மற்றும் ஸ்ரீபிரகாஷா ( ஸ்ரீ – Easan Restaurant), ஸ்ரீபாலகிருஷ்ணன்(பவா – பிரான்ஸ்), தில்லைநாயகி(தேவி – லண்டன்), புஸ்பராணி (பவி – பிரான்ஸ்), கனகாம்பிகை(இந்து – பிரான்ஸ்), உதயகலா (கலா – பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பேரப்பிள்ளைகளின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 09-02-2023 வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 2.00 வரை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**குடும்பத்தினர்**

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.02.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.